2017 பெப்ரவரி 02
வியாழன்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ■ ஜ.அவ்வல் பிறை 04 ■ பக்கங்கள் 12 ■ மணி 03 ■ ஒளி 020

NAVAMANI DAILY
නවමණී දිනපතා

# நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

QD / 154 / NEWS / 2017






மேற்கிந்திய வீரர் ரஸலுக்கு போட்டித் தடை 12



ரோஹிங்கிய முஸ்லிம்களுக்காக மைத்திரி குரல் கொடுப்பாரா? 07

இலங்கை முஸ்லிம்கள் சுதந்திரத்திற்கு முன்பும் பின்பும் 04

## பேதமின்றி ஒன்றுபட்டு

# இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்போம்



■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

நீங்களும் நாங்களும் ஒன்றுசேர்ந்து, பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். பேதமின்றி ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். அரச சேவை புரிவோர் ஒன்றுபட்டு இனப்பிரச்சினை தீர்வுக்காக பணியாற்ற வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நேற்று (01) ஏறாவூரில் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமடின் தலைமையில், மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு காணி அனுமதிப் பத்திரங்களையும், வீடுகளையும் கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார். அங்கு மேலும் பேசிய அவர் கூறியதாவது,

நான் ஏறாவூர் பகுதிக்கு விஜயம் செய்யும்போதெல்லாம் மிகவும் சந்தோசமடைகிறேன். உங்களை இங்கு சந்திக்கக் கிடைப்பதை எனது பாக்கியமாகக் கருதுகின்றேன். இந்தப் பகுதி முஸ்லிம், தமிழ் மக்கள் நீங்கள் எல்லோரும் எனது ஜனாதிபதித் தேர்தல் காலத்தின்போது முழுமையான ஆதரவைத் தந்தீர்கள்.

உங்களின் ஆதரவோடு

11 »»»»

## கிழக்கில் சூடுபிடிக்கும் தேசியக் கொடி விற்பனை




இலங்கையின் 69வது சுதந்திர தினத்தை முன்னிட்டு சுதந்திர தினக் கொடி விற்பனை சூடு பிடித்துள்ளது.

மட்டக்களப்பு ஏறாவூர் நகரத்திலுள்ள புத்தகக் கடைகள் சுதந்திர தினக் கொடி விற்பனைக்காக அலங்கரிக்கப்பட்டிருப்பதைப் படங்களில் காணலாம்

(படம் : ஏ.எச்.ஏ. ஹுஸைன் )



## தேசியக் கொடியை பறக்க விடவும்

### ஜம்மியதுல் உலமா வேண்டுகோள்

இலங்கையின் 69ஆவது சுதந்திர தினத்தையொட்டி வீடுகள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்களில் ஏற்றுமாறு அகில இலங்கை ஜம்மியதுல் உலமா முஸ்லிம்களுக்கு வேண்டுகோள்

11 »»»»

## பரபரப்பான சூழலில் மு.கா. 04இல் கூடுகிறது

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருக்கும் தவிசாளருக்குமிடையிலான கருத்து முரண்பாடுகள் மும்முரமடைந்துள்ள நிலையில்

11 »»»»



மீரிகமவில் இருந்து குருநாகல் வரை நிர்மாணிக்கப்படும் மத்திய அதிவேக பாதையின் இரண்டாம் கட்டப்பணிகளின் ஆரம்பிக்கும் நிகழ்வை நேற்றைய தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்துவைத்தார். இதன்போது, அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, அகில விராஜ் காரியவசம், லக்ஷ்மன் கிரியேல்ல, விஜயதாச ராஜபக்ஷ, தயாசிறி ஜயசேகர உள்ளிட்டோரும் பெருந்தொகையான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

## மத்திய குறைந்த வருமானம் பெறுவோருக்கு 620,000 வீடுகள்



■ அ.அருண் பிரசாந்த்

நாடளாவிய ரீதியில் வாழும் மத்திய தர வர்க்கத்தினர் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 2019 ஆம் ஆண்டுக்குள்

11 »»»»

## விரல் அடையாளத்தை பெற குற்றச்சட்டத்தில் விரைவில் திருத்தம்

■ அ.அருண் பிரசாந்த்

குற்றத்தடுப்புக் கட்டளைச் சட்டத்தினை திருத்துவதற்கும் அதனை அரச வர்த்தமானியில் அறிவிப்பதற்கும் அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நடைமுறையிலிருக்கும் குற்றத்தடுப்



11 »»»»

## மைத்திரியின் கௌரவத்தை ஐ.தே.க. அனுபவிக்க முயற்சி

### முதலமைச்சர் இசுர ஆதங்கம்



■ ஆதில் அலி சப்ரி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கௌரவத்தை ஐக்கிய தேசியக் கட்சியினர் மாத்திரம் அனுபவிக்க முற்படுவதை ஒரு போதும் அங்கீகரிக்க

11 »»»»

## அகமது எம்.பிக்கு மோடி அஞ்சலி



மறைந்த இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மூத்த தலைவரும், கேரள மாநிலம், மல்லபுரம் மக்களவைத் தொகுதியின் உறுப்பினருமான இ.அகமது உடலுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேரில் சென்று அஞ்சலி செலுத்தியபோது....



## ஜே.வி.பி. திட்டவட்டம்

## சைட்முக்கான அங்கீகாரத்தை ஒருபோதும் ஏற்க மாட்டோம்

■ அ.அருண் பிரசாந்த்

நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தாலும் சைடம் தனியார் கல்லூரிக்கு சட்ட அங்கீகாரத்தை வழங்குவதற்கு தாம்

11 »»»»

## தகவல் அறியும் சட்டமூலம் நாளை முதல் அமுல்

■ அ.அருண் பிரசாந்த்

நல்லாட்சி அரசின் தேர்தல் வாக்குறுதிகளின் ஒன்றான தகவல் அறியும் சட்டம் நாளை வெள்ளிக் கிழமை முதல் அமுலுக்கு வரவுள்ளது ஐக்கிய தேசியக் கட்சியினரின் நீண்ட கால போராட்டத்தின்

11 »»»»




## மண் அகழ்வு குறித்து விசாரணைகள் ஆரம்பம்

11 »

## அமெ. விமான நிலையத்தில் தொழுகை



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் 7 முஸ்லிம் நாடுகளுக்கெதிரான விசா தடையையடுத்து, அமெரிக்காவின் டெக்ஸாஸ் விமானநிலையத்தில், டிரம்புக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் ஒருதொகுதி முஸ்லிம்கள், தொழுகையில் ஈடுபட்டதைப் படங்களில் காணலாம்...

## மௌலவி ஆசிரியர் நியமனம் றிஷாத்தின் வேண்டுகோள் ஏற்பு

### அறிக்கை சமர்ப்பிக்கவும் பணிப்பு

■ சுஐப் எம்.காசிம்

தொடர்ந்தும் இழுபறியில் இருந்து வரும் மௌலவி ஆசிரியர் நியமனத்தை இழுத்தடிப்புச் செய்யாமல் உரிய

11 »»»»



## நெற்வேக் பிசினஸ் கருத்தரங்கு



(ஜெஸ்மி எம்.மூஸா)

வலைப்பின்னல் வியாபாரம்; (நெற்வேக் பிசினஸ்) பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் எனும் கருப்பொருளில் உலமாக்களுக்கான கருத்தரங்கு மருதமுனை ஜம்இயத்துல் உலமாவின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எம்.ஐ. ஹுசைனுதீன் றியாழி தலைமையில் மருதமுனை அந்-நஹ்லா அரபுக் கல்லூரியில் நடைபெற்றது. தாறுல் ஹுதா மகளிர் அரபுக் கல்லூரி விரிவுரையாளர் அஸ்பர் ஹசன் வளவாளராகக் கலந்து கொண்டு விளக்கமளிப்பதனைக் காணலாம்.

## நிந்தவூர் ஜாமிஉத் தௌஹீதில் இரத்ததான நிகழ்வு

( ஏ.எல்.ஏ.றபீக் பிர்தௌஸ் )

நிந்தவூர் ஜாமிஉத் தௌஹீத் ஜும்ஆப் பள்ளிவாசலில் மாபெரும் இரத்ததான நிகழ்வொன்று கடந்த சனிக்கிழமை (28) இடம்பெற்றது.

பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம்.ஹயறுல்லாஹ் மௌலானா தலைமையில் இடம் பெற்ற இவ்விரத்ததான நிகழ்வில், நூற்றுக் கணக்கான இளைஞர், யுவதிகள் மிக விருப்பத்தோடு கலந்து கொண்டு, தமது இரத்ததானம் செய்தனர்.

இவ்வாறு பெறப்பட்ட இரத்தப் பொதிகள் கல்முனை அஷ்ரப் ஞாபகர்த்த வைத்தியசாலை இரத்த வங்கிக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

# அடுத்த சில மாதங்களில் அதிகாரத்தை பகிர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

### களுவாஞ்சிக்குடியில் ஜனாதிபதி மைத்திரி







(மட்டக்களப்பு நிருபர், பைஷல் இஸ்மாயில்)

நாட்டைத்துண்டாடாத வகையில் நல்லிணக்கத்தை பலப்படுத்தி அதிகாரத்தைப்பகிர்வதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடனுள்ளது. இதற்கான அடிப்படை நடவடிக்கைகளை அடுத்த சில மாதங்களில் நிறைவு செய்வதற்கு எதிர்ப்பார்த்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறினார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் புதிய கட்டிட தொகுதியை நேற்று புதன்கிழமை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்துரையாற்றுகையில், அரசாங்கத்திற்கெதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் விமர்சனங்கள் இருக்கின்றன. இந்த நாடு ஜனநாயகமான நாடு என்ற வகையிலே அரசாங்கத்தை பார்த்து யாருக்கும் விமர்சிக்க முடியும் .நாங்கள் அவர்களைப் பார்த்துக் கூறுகின்றோம் கூடுதலான வரை எங்களை விமர்சியுங்கள். எங்கள் மீது குற்றம் சுமத்துங்கள். அந்த விமர்சனங்கள் தான் எங்களை பணியாற்றுவதற்கான பாரிய சக்தி என்பதை நான் கூறி வைக்க விரும்புகின்றேன்.நாங்கள் அரசாங்கத்தை வீழ்த்தி விடுவோம் என சிலர் சொல்லுகின்றார்கள்.

அவர்கள் இப்படியான கனவுகள் காண்கின்றார்கள். அந்தக்கனவுகள் ஒரு போதும் நடக்காது. அரசாங்கம் என்ற வகையிலே நாங்கள் பாரிய சக்தியோடு பலமோடு இருக்கின்றோம். எங்களை இல்லாமல் செய்வதற்கு யாராலும் முடியாது என்பதை நாங்கள் கூறி வைக்க விரும்புகின்றோம்.

இந்த நாட்டை கட்டியெழுப்புவேன் என்ற நம்பிக்கையுடன் என்னை ஜனாதிபதியாக தெரிவு செய்தார்கள். அதில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் என்னை பூரணமாக ஆதரித்தார்கள். நீண்ட கால யுத்தத்தின் காரணமாக வடக்கு கிழக்கு மாகாண மக்கள் மிகவும் கஷ்டத்துடன் வாழ்ந்து வந்தார்கள். இந்த யுத்தத்தின் காரணமாக வட கிழக்கு மக்களுக்கும் நாடு பூராவும் கஷ்டங்களும் அழுத்தங்களும் ஏற்பட்டன யுத்தத்திற்கு பிறகு இந்த நாட்டில் செய்ய வேண்டிய வேலைகளை செய்வேன் என்ற நம்பிக்கையுடன் எனக்கு மக்கள் வாக்களித்து என்னை ஜனாதிபதியாக தெரிவு செய்தார்கள்.

இந்த நாட்டிலே வாழ்கின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் சமாதானத்துடனும் அமைதியுடனும் வாழக் கூடிய ஒரு நாட்டை கட்டியெழுப்ப வேண்டும். இந்த நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படாதவாறு அரசாங்கம் செயற்பட வேண்டும். அதற்காகத்தான் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. இந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் மத்தியில் அமைதியையும் சமாதானத்தினையும் நல்லிணக்கத்தினையும் ஏற்படுத்துவதற்காகத்தான் நாங்கள் புதிய தொரு அரசியலமைப்பை உருவாக்க முயற்சித்து வருகின்றோம். அந்த புதிய அரசியலமைப்புக்கு எதிராக சிலர் தவறாகப் பேசுகின்றனர். அவர்கள் பொய்யான கதைகளை கூறுகின்றார்கள் நாட்டை பிரிக்கப்போகின்றோம் என்று கூறுகின்றார்கள். நாட்டை உடைக்கப்போகின்றோம் என்று சொல்லுகின்றார்கள். நாட்டை நிர்மூலமாக்கப் போகின்றோம் என்கின்றார்கள்.

வெளிநாட்டு சக்திகளுக்கு அடிபணிந்து விட்டோம் என்கின்றார்கள். அவையெல்லாம் முற்று முழுதான பொய்யாகும். அவற்றையெல்லாம் நாங்கள் மறுக்கின்றோம். நிராகரிக்கின்றோம்.

எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் கூறும் போது, நாட்டை பிரிக்காமல் ஒரே நாட்டுக்குள் தீர்வை பெறவேண்டும் அதற்காகத்தான் புதிய அரசியலமைப்பை உருவாக்கி கொண்டு போகின்றோம் என்றார். அந்த உத்தமமான நோக்கத்தை நாங்கள் அடைவதற்காக அரசாங்கம் என்ற வகையிலே அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றோம் என்றார்.

ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் வாழுகின்ற அனைவரையும் ஒன்று படுத்துகின்ற ஒரே நாடாக ஒரே மக்களாக ஆக்குவதற்காகத்தான் நாங்கள் பணியாற்றி வருகின்றோம்.சமாதானமாகவும் சந்தோசமாகவும் வாழக் கூடிய மக்களை நாம் ஏற்படுத்த வேண்டும். நன்றாக அபிவிருத்தியடைந்த பொருளாதாரத்தினைக் கொண்ட நாடாக கட்டியெழுப்ப வேண்டும். இந்த அரசாங்கத்தை சிலர் கவிழ்ப்பதற்கு கனவு காண்கின்றனர். அது ஒரு போதும் முடியாது. இந்த அரசாங்கத்தை அசைக்க முடியாது. துறையை மேம்படுத்தி வருகின்றோம். ஜப்பான் நாட்டுக்கும் ஜப்பான் அரசாங்கத்திற்கும் இலங்கையிலுள்ள ஜப்பானிய தூதுவருக்கும் எமக்களித்த உதவிகளுக்காக நாம் நன்றிகளை கூறுகின்றோம். நான் சுகாதார அமைச்சராக இருந்த போதுதான் இந்த வேலைத்திட்டங்கள் முடுக்கி விடப்பட்டன.

எதிர்க்கட்சித்தலைவர் இரா. சம்பந்தன் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன முதலமைச்சர் நஸீர் அஹமட் ஜப்பானின் இலங்கைத்தூதுவர் உட்பட மாகாண முக்கியஸ்தர்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



பொதுஹர வெதபொலஅல்-ஹிஜ்ரா அஹதிய்யா பாடசாலை மாணவர்கள் அண்மையில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டு ஒலிபரப்பு நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டனர். ஒலிபரப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அல்-ஹிஜ்ரா மாணவ, மாணவிகள், அஹதிய்யா அதிபர் பீ.எம். பாரூக் மற்றும் ஆசிரியர்களான டீ. ஹஸீனா பானூ, பாத்திமா ரிபாஸா அன்வர் ஆகியோரைப் படத்தில் காணலாம். (ஹப்ஸா கன்ஸுல்)

## கல்முனை சாஹிராவில் தேசிய ஒருங்கிணைப்பு நிகழ்வு



( கோணாவத்தை எம்.எப்.றிபாஸ்))

தேசிய ஒருமைப்பாடு மற்றும் மீளிணக்க வாரத்தினை முன்னிட்டு கல்முனை ஸாஹிரா தேசியக்கல்லூரியில் அண்மையில் விசேட நிகழ்வொன்று இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் பீ.எம்.எம்.பதுறுதீன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர் வீ.தையிப் தேசிய நல்லிணக்கம் சம்பந்தமாக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் உரையாற்றியதுடன் மாணவத் தலைவர் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க பிரகடனத்தை வாசித்தார். இதே வேளை ஆசிரியர்களும் மாணவர்களும் அன்றைய தினம் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் சகவாழ்வை மதிக்கும் பரந்த தேசிய ஒருமைப்பாட்டிற்காக மீளிணக்க மேம்படுத்தல் மற்றும் ஊக்கமளிக்கும் நோக்குடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக்கருவிற்கமைய தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க வாரம் பிரகடனப்படுத்தப்பட்டது.

எந்தவொரு பேதமுமின்றி எல்லோரும் இலங்கையராக செயற்படும் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்காக நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

# குர்ஆன் ஓதப்படவில்லையோ அந்த வீடுகளில் வறுமை தாண்டவமாடும்

### மட்டு. ஜம்மியத்துல் உலமாசபைத் தலைவர் மௌலவி எஸ்.எம். அலியார்

(திகாமடுல்ல நிருபர்)

அமெரிக்க சக்திகள் இஸ்லாத்தை அழித்தொழிப்பதற்காக முயற்சிகள் பல செய்த போதிலும், குர்ஆனை மனனம் செய்த ஹாபிழ்கள் மூலமாக அதே நிமிடத்தில் பல கோடான கோடி குர்ஆன்களை ஆக்க முடியுமான சக்தியை எமக்கு அல்லாஹ் கொடுத்துள்ளான் என மட்டக்களப்பு மாவட்ட ஜம்மியத்துல் உலமாசபைத் தலைவர் மௌலவி எஸ்.எம். அலியார் (பலாஹி) கூறினார்.









அக்கரைப்பற்று பட்டியடிப்பிட்டி உமர் இப்னு அஹ்மத் இஸ்லாமிய கற்கை நெறிகள் பீடம் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த அல்ஹாஜ் ஏ.எல்.உமர்லெவ்வை தனது சொத்தில் 1/3 ஒரு பங்கை வக்பு செய்து உமர் இப்னு அஹ்மத் இஸ்லாமிய கற்கை நெறிகள் பீடம் எனும் இஸ்லாமிய கல்வி நிறுவனத்தை தனது தலைமையில் ஆரம்பித்துவைக்கும் நிகழ்வு அண்மையில் அக்கரைப்பற்று பட்டியடிப்பிட்டியில் இடம்பெற்றது. அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எம்.ஐ.அமீர், பாதிஹ் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர், கல்விச்சபை செயலாளர் அஷ்ஷெய்க் ஏ.எம்.அக்ரம் (நழீமி), அக்கரைப்பற்று ஜம்மியத்துல் உலமாசபைத் தலைவர் மௌலவி எம்.எம்.ஏ.அப்துல் லெத்தீப் (பஹ்ஜி), ஜம்மியத்துல் உலமாசபை உப தலைவர் எம்.எம்.கலாமுள்ளா (றசாதி), பள்ளிக்குடியிருப்பு ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் ஏ.எல்.எம்.அஷ்ரப் (ஷர்கி) ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றியதுடன், புதிய கல்வி நடவடிக்கைக்கான கட்டடத்திற்கு அடிக்கல்லும் நட்டுவைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட ஜம்மியத்துல் உலமாசபைத் தலைவர் மௌலவி எஸ்.எம். அலியார் (பலாஹி) தொடர்ந்து கூறுகையில் - அல்லாஹ் கொடுத்த செல்வங்களில் இருந்து அவர்கள் தங்களது பொருளாதாரங்களை வக்பு செய்யவேண்டும். அந்தப் பொருளாதாரங்களை மற்றவர்களுக்காக மனம் திறந்து கொடுக்கவேண்டும். நீங்கள் விரும்பக்கூடிய பொருளாதாரங்களில் இருந்து அல்லாஹ்விடத்தில் நன்றியை பெறுவதாக இருந்தால் அவனுடைய பாதையில் உங்களுடைய சொத்து, சுகங்களை கொடுத்தாகத்தான் வேண்டும். அப்போது அல்லாஹ்வின் நன்றியைப் பெற்றவர்களாக ஆக முடியும்.

இந்த உமர்லெவ்வை ஹாஜி தனது சொத்தில் மிகப் பிரதானமான ஒரு இடத்தை குர்ஆனுக்காக, ஈமானுக்காக, அறிஞர்கள் உருவாகவேண்டும் என்பதற்காக கொடுத்துள்ளார்கள். நழீம் ஹாஜியார் அவர்களைப் போன்று இந்த நாட்டு முஸ்லிம்களின் கல்விக்காக பங்களிப்பு செய்த தனவந்தர்களின் வரிசையில் உமர்லெவ்வை இடம்பிடித்துள்ளார்கள். இவருக்காக அனைவரும் துஆச் செய்ய வேண்டும் - என்றார்.

# புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## அதிகளவில் ஆண்களே இலக்கு

(செ. தர்ஷிகா)

இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து காணப்படுவதாகவும் அதிலும் ஆண்களே புற்றுநோய்க்கு அதிகளவில் இலக்காகின்றதாகவும் வைத்திய கலாநிதி பதில் சுகாதார பணிப்பாளர் நாயகம் ஜே.எம்.டபிள்யூ.ஜயசுந்தர பண்டார தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை சுகாதார கல்விப்பணிமனையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தற்போது வைத்தியசாலைகளில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை ஒரு நாளைக்கு 7 பேர் வரை அடையாளம் காணப்படுகின்றனர். அதிலும் ஆண்களின் வீதம் அதிகரித்து காணப்படுகிறது. இவர்களில் வாய்ப்புற்றுநோயாளர், நுரையீரல் புற்றுநோயாளர்களே அதிகம் கண்டறியப்படுகின்றனர். காரணம் புகையிலை, பாக்கு, போன்றவற்றாலே இவர்களுக்கு புற்றுநோய் ஏற்படுகிறது. அடுத்தபடியாக பெண்கள் மார்பகப் புற்றுநோயால் அதிகம் பேர் இறக்கின்றனர்.

இவர்களுக்கு தேவையான விழிப்புணர்வு அரசினூடாக அவசியமாக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் மாகாண ரீதியில் அல்லது மாவட்ட ரீதியில் சேவையாற்றுகின்ற சத்திர சிகிச்சை நிபுணர்கள், புற்றுநோய் சத்திரசிகிச்சை நிபுணர்கள், கதிரியக்க நிபுணர்கள், சமுதாய மருத்துவ நிபுணர்களை பயன்படுத்திக்கொள்ளும் படி கேட்கப்படுகின்றார்கள். ஆரம்ப அறிகுறிகளை கண்டறிவதன் மூலம் புற்றுநோயை இல்லாமலாக்கலாம் எனவும் அதற்கு தேவையான ஆலோசனைகளும் பரிசோதனை முறைகளும் வைத்தியசாலைகளில் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேபோல பாடசாலை மாணவர்களிடையே புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு பெண்பிள்ளைகளுக்கு எனும் வெக்சின் எனும் பரிசோதனை செய்வதன்மூலம் புற்றுநோய் வராமல் தடுப்பதற்கு அரசு உரிய திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது. என்றார்.

பெப்ரவரி மாதம் முழுவதும் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு, நடைபவனி கண்காட்சி போன்ற செயற்திட்டங்களை, அரசு முன்னெடுக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# எதியோப்பியா இலங்கை தூதரகம் இரு நாட்டு அமைச்சர்களினால் திறப்பு

எதியோப்பியா வெளிவிவகார அமைச்சர் வர்க்னே கெபலயகூவின் அழைப்பின் பேரில் எதியோப்பியாவிற்கு விஜயம் செய்துள்ள மங்கள சமரவீர நேற்று முன்தினம் அட்ஸ் அபாபாவில் அமைந்துள்ள எதியோப்பிய பாராளுமன்றத்தின் சபாநாயகரை சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கையின் தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பிலும் தெளிவுபடுத்தியதோடு, மதிப்பு மற்றும் முற்போக்கான அரசியலை உருவாக்கும் வகையில் நல்லாட்சி அரசு எதிர்காலத்தில் செயற்படும் என்றும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி அக்கரைப்பற்று விஜயம்





(எம்.ஏ.றமீஸ், எஸ்.எம்.இர்ஷாத்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று (01) பிற்பகல் அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.

ஜனாதிபதியின் இவ்விஜயத்தின்போது வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகளைக் கேட்டறிந்து, நோயாளி விடுதிகளுக்கும் சென்று நோயாளர்களின் நலன் விசாரித்ததுடன் அவர்களுக்கு அன்பளிப்புப் பொருட்களையும் வழங்கினார்.

இதேவேளை ஜனாதிபதி இவ்வைத்தியசாலையில் உள்ள சமையலறைக்கு நேரடியாகச் சென்று நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவு தயாரிப்பு முறைகளையும் பார்வையிட்டார்.

வைத்திய அத்தியட்சகர் ஐ.எம்.ஜவாஹிர் தலைமையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்த வைத்தியசாலையின் வைத்தியக்குழுவினர் இவ்வைத்தியசாலைக்கு கண் வைத்தியப் பிரிவு, கண் நோயியல் வைத்திய நிபுணர், மயக்க மருந்தூட்டும் விஷேட மருத்துவ நிபுணர், கதிரியக்க மருத்துவ நிபுணர், திடீர் அவசர சிகிச்சைப் பிரிவு, வைத்திய உபகரணங்கள் உள்ளிட்ட தேவைப்பாடுகள் போன்றவற்றைப் பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிகழ்வில் சுகாதாரத் அமைச்சர் ராஜித சேனாரத்ன, அமைச்சர் தயாகமகே, பிரதி அமைச்சர் பைஷல் காசில், கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ்.உதுமாலெவ்வை, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவம், பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

MINISTRY OF CITY PLANNING & WATER SUPPLY
NATIONAL WATER SUPPLY & DRAINAGE BOARD
CANCELLED THE BID NOTICE
Civil Tenders
Reference to the Advertisement dated 01st February 2017 Laying and Jointing of PE/DI Pipes Fittings and Specials for Shifting of Pipe Lines along the Badulla-Chenkalady Road (A5) for Badulla Water Supply Scheme
Contract No : RSC(UVA)/DGM(UVA)/RECH/BADULLA/2016/122.
Please note that this tender has been Cancelled.





நாட்டில் ஏற்படும் வரட்சியான காலநிலையின் போது மேல் மாகாணத்தில் ஏற்படும் நிலைமைகளை எதிர்கொண்டு மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பில் முதலமைச்சின் கேட்போர் கூடத்தில் மாகாண உள்ளூராட்சிமன்ற செயலாளர்களுடனான கூட்டத்தில் முதலமைச்சர் உரையாற்றுவதையும், பிரதம செயலாளர் தயா செனரத் மாகாணசபையின் பிரதித்தலைவர் யசபால கோறவகே, கித்சிற கஹடபிடிய, இப்திகார் ஜெமீல், நிசாந்த வர்ணசிங்க உள்ளிட்ட உறுப்பினர்கள் பலர் படத்தில் காணப்படுகின்றனர்.

(படம்-எஸ்.எம்.முன்தஸிர்)

# சபாநாயகருக்கு ஜப்பான் அரசால் உயரிய விருது

சபாநாயகர் கரு ஜயசூரியவிற்கு ஜப்பான் பேரரசரினால் உதய சூரியன் விருது வழங்கப்பட்டுள்ளது.

ஜப்பான் பேரரசர் மாளிகையில் அக்கிஹிதோ பேரரசரால் இந்த விருதை வழங்குவதற்கு கடந்த வருடம் நவம்பர் மாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும் மகளின் மரணத்தினால் அந்த நிகழ்வில் சபாநாயகருக்கு கலந்துகொள்ள முடியவில்லை. அதன்பிரகாரம் அந்த விருதை வழங்குவதற்கான நிகழ்வு நேற்று முன்தினம் (31) மாலை கொழும்பிலுள்ள ஜப்பான் தூதரகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை பிரஜை ஒருவருக்கு முதல் முதலாக உதய சூரியன் விருது கிடைத்துள்ளமை இதுவே முதல் தடவையாகும்.



## நீர்கொழும்பு அல் ஹிலாலுக்கு சி.சி.ரி. கமரா அன்பளிப்பு

(கொச்சிக்கடை றிஸ்மி)

நீர்கொழும்பு அல்.ஹிலால் மத்திய கல்லூரிக்கு தைபா நிறுவனம் சி.சி.ரி கமராக்களை அன்பளிப்பு செய்ய முன்வந்துள்ளது. இது விடயமான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் கல்லூரி அதிபர் எம்.எம்.எம்.இர்ஷாட் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் தைபா நிறுவன உறுப்பினர்கள் கலந்துகொண்ட இக்கலந்துரையாடலில் அதிபரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட தைபா நிறுவனம் மேற்படி கமராக்களை பாடசாலைக்கு வழங்க முன்வந்துள்ளது.

இதன் முதற்கட்டமாக 3.5 இலட்சம் ரூபா பெறுமதியான 16 கமராக்களை வழங்க இருப்பதாகவும் எதிர்காலத்தில் சகல வகுப்பறைகளுக்கும் கமராக்களை வழங்க உத்தேசித்துள்ளதாகவும் அமைப்பின் தலைவர் எம்.ரி.எம்.அஸ்லம் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் பாடசாலை பிரதி அதிபர் எம்.ஏ.எம்.பஹ்மி, எம்.ஜே.எம்.அஜ்மல், தைபா அமைப்பின் செயலாளரும் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளருமான எம்.எச்.எம்.பாஸில், பொருளாளர் எம.எம்.ரி.நிம்கா மற்றும் நலன்விரும்பிகள் கலந்துகொண்டனர்.

# தேசியக் கொடியை அனைவரும் காட்சிப்படுத்துக



இலங்கையில் எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள 69 ஆவது சுதந்திரத்தினத்தை கொண்டாடும் முகமாக நேற்று முதல் ஒரு வாரக்காலத்திற்கு தேசிய கொடியை காட்சிப்படுத்தப்பட வேண்டும் என உள்நாட்டலுவல்கள் அமைச்சு பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்தவகையில், தேசிய சுதந்திர தினம் தேசிய ஐக்கியம் என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு காலி முகத்திடலில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் குறித்த நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது நிறைவடைந்துள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைவாக நேற்று முதல் ஒரு வார காலத்திற்கு அனைத்து வீடுகள், வர்த்தக நிலையங்கள், அரச மற்றும் தனியார் கட்டிடங்கள் மற்றும் வாகனங்களில் தேசிய கொடியை பறக்கவிட்டு சுதந்திர தினத்தைக் கொண்டாட தயாராகுமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சு அனைத்து இலங்கைவாழ் மக்களையும் கேட்டுக்கொண்டுள்ளது.



NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
02ND FEBRUARY 2017 - THURSDAY

# சைடம் மருத்துவ கல்லூரி நிரந்தர தீர்வு என்ன

மாலபேயில் அமைந்துள்ள சைடம் தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பிலான தீர்ப்பை மேல் நீதிமன்றம் வழங்கியுள்ளது. சைடம் தனியார் மருத்துவக் கல்லூரி வழங்கும் மருத்துவக் கற்கைநெறியின் சான்றிதழ் அங்கீகாரத்துக்குரியது என்ற இத்தீர்ப்பு, நேற்று முன்தினம் (31) வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும், இலங்கையில் சமீப காலமாக சர்ச்சைக்குரிய விவகாரமாக தலையெடுத்திருந்த சைடம் தனியார் மருத்துவக் கல்லூரி விவகாரம், இந்தத் தீர்ப்புடன் முடிவுக்கு வருமா என்பது சந்தேகத்துக்குரியதே. ஏனெனில், இந்த நாட்டின் பலம்பொருந்திய மாணவர் அமைப்புக்களும், சிவில் அமைப்புக்களும், சில அரசியல் கட்சிகளும் இலங்கையில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஸ்தாபிக்கப்படுவதை எதிர்த்து வருகின்றன.

இலங்கையில் தனியார் மருத்துவக் கல்லூரியின் அவசியம் குறித்து, அதற்கு ஆதரவானவர்கள் பல்வேறு நியாயங்களைக் கூறுகின்றனர். இத்தரப்பினரின் நியாயங்கள் அவர்களது பார்வையில் நியாயங்களாக தெரிவிக்கப்படுகின்றபோதும், அவற்றை நாட்டின் நலன் மற்றும் நாட்டு மக்களின் நலன் அடிப்படையிலேயே நாம் நோக்க வேண்டியுள்ளோம்.

இவ்வாறானவர்கள் கூறும் நியாயங்களில், இலங்கையில் அரச பல்கலைக்கழகங்களில் சொற்பமானோருக்கே மருத்துவக் கற்கைநெறியைத் தொடர முடிகின்றது. எனவே, மருத்துவராக விரும்பும் மாணவர்களுக்கு, அதற்குரிய கற்கையை பூர்த்தி செய்வதற்கான தனியார் பல்கலைக்கழகம் அவசியம் என்பது ஒன்றாகும்.

உண்மையில், இவர்களின் இந்த வாதம் அவர்களது புறத்திலிருந்து பார்க்கும்போது, நியாயமானதாகத் தெரிகின்றபோதும், தனியார் மருத்துவக் கல்லூரிகளை நாட்டில் அனுமதிக்கும்போது, நாட்டில் பாரதூரமான பல்வேறு சிக்கல்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

உதாரணமாக, இந்தியாவில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் அனுமதிக்கப்பட்டுள்ளமையால், தரமற்ற, பொருத்தமற்ற, தகுதியற்றவர்கள் மருத்துவர்களாக வெளியேறும் நிலை உருவாகியுள்ளது. இதனால் மனித உயிர்களுடன் சம்பந்தப்பட்ட இந்த மருத்துவத்துறை பாதுகாப்பற்றதாக மாறியுள்ளது.

மருத்துவ பீடங்கள், மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும்போது, அங்கு பயிலும் மாணவர்களுக்கான போதனா வைத்தியசாலைகள் கட்டாயமாக இருக்க வேண்டும். அந்த வைத்தியசாலைக்குரிய தர நிர்ணயங்களும், அங்கிருக்க வேண்டிய வசதிகளும் வகுக்கப்பட்டுள்ளன.

ஆனால், சைடம் தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களின் போதனா வைத்தியசாலையான நெவில் பெர்ணான்டோ வைத்தியசாலை, இவ்வாறான தரத்தையும், அதற்குரிய நோயாளர் தொகையையும் கொண்டமைந்ததா என்பதில் இந்த விவகாரம் குறித்து அக்கறை கொண்ட தரப்பினருக்கு திருப்தி இல்லை.

தனியார் மருத்துவக் கல்லூரிகள் நேரடியாக அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வராத காரணத்தால், அங்கு என்ன நடக்கின்றது என்பதை அரசால் எப்போதும் கண்காணித்துக்கொண்டிருக்க முடியாது. மருத்துவக் கல்லூரிகளிலும், வைத்தியசாலைகளிலும் கையாளப்படுகின்ற விடயங்கள், ஒரு தொழிற்சாலையில் பொருட்கள் தயாரிப்பது போன்ற இலகுவான விடயங்கள் அல்ல.

நேரடியாகவே மனித உடலுடன் சம்பந்தப்பட்ட இந்த மருத்துவத்துறையை எப்போதும், அரசின் முழுமையான கட்டுப்பாட்டில் வைப்பதுதான் பொருத்தமானது. மாறாக, தனியார் துறைக்கு அதனை விட்டுவிடும்போது, பணம் பண்ண வேண்டும் என்ற ஆசை பிடித்த முதலாளிமார்கள் மனித உயிரையும் பொருட்படுத்தாது செயற்படத் துணியலாம்.

இப்போது, போதை வியாபாரம் ஒரு மாபியாவாக இயங்குவது போன்று, மருத்துவத் துறையும் மாபியாவாக இயங்குகின்றது. இந்த நிலையிலிருந்து மக்களை காப்பாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்று பார்த்தால், முதலாளிமார்களின் பண ஆசைக்கு அரசு துணைபோகிறதா என்ற அச்சமே இப்போது ஏற்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு மாணவரும் தமக்கு விருப்பமான துறைகளில் படிப்பதற்கும், அத்துறையில் சேவையாற்றுவதற்கும் உரித்துடையவர்கள்தான். அந்த விருப்பை நிறைவேற்றும் பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளது. பொதுவாகவே, விஞ்ஞானத் துறையில் உயர் தரம் கற்கும் அனைத்து மாணவர்களும்போல், வைத்தியராக வேண்டும் என்ற ஆசையில்தான் விஞ்ஞானப் பிரிவில் கற்கின்றனர்.

ஆனால், அந்த விருப்பை நிறைவேற்றுவதற்காக தனியார் மருத்துவக் கல்லூரிகளை நாட்டில் திறந்து விடுவது சரியான வழிமுறை அல்ல. மாறாக, அரச பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்களுக்கு அதிகளவு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சைடம் கல்லூரியில் பல தொகுதியினர் இப்போது படித்து வருகிறார்கள். இக்கல்லூரி தொடர்பாக எதிர்காலத்தில் ஒரு முடிவு எடுக்கும்வரை, இப்போது படிக்கும் மாணவர்கள் தொடர்பாக பொருத்தமான ஒரு முடிவை வழங்குவதற்கு அரசும், எதிர்ப்பு தெரிவிப்பவர்களும் ஒரு முடிவுக்கு வருவதே நல்லது.

---

# இலங்கை முஸ்லிம்கள் சுதந்திரத்துக்கு முன்பும் பின்பும்

அட்டாளைச்சேனை மன்சூர்

தேசிய சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கான சகல ஏற்பாடுகளையும் அரசு மேற்கொண்டிருக்கிறது. வழமைபோன்று நாடுமுழுவதும் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் அனைத்திலும் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு தேசிய சுதந்திரத்தின் கையேற்புகள் தொடர்பாகவும், இன ஒற்றுமையோடு நாட்டுக்குக் கிடைத்த சுதந்திரத்தின் பெறுமானம் குறித்தும் பேசப்படும்.

நாட்டின் இறைமையிலும், நாட்டின் ஆட்சியமைப்பிலும், சுதேசிகளின் ஆட்சியினை வெற்றி கொண்டு அடிமைப்படுத்திய அந்த நாட்களும், அதற்காக தம் உயிரைத் தியாகம் செய்த வீரர்களும் நினைவுகூரப்படும். மூவின மக்களுக்கும் உரிமைகொண்ட எமது இலங்கையின் சுதந்திரத்திற்கு அன்று வேட்டுவைத்து நாட்டை அடிமைப்படுத்திய போது, வெகுண்டெழுந்த மாவீரர்களது பெயர்களும், அவர்களது நினைவாடல்களும் இன்றைய இளசுகளுக்கும் வரலாற்றின் மறுபக்கம் பதிவிடப்படுதல் அவசியமான ஒன்றாகும்.

இலங்கையின் சுதந்திரப் போராட்டத்தில் ஒற்றுமையோடு போராடிய அன்றைய தலைவர்களும், மூவின மக்களும் நாட்டைப் பற்றிய சிந்தனையில் வாழ்ந்த வரலாறுகளை அதன் பாதையிலிருந்து மறைக்க இன்றைய கடும்போக்குவாத சிந்தனையாளர்கள் முற்பட்டதன் விளைவுதான், இன்று பேரினவாதம் என்று உருவெடுத்துள்ளதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஒற்றுமையோடு வாழ்ந்த இலங்கையின் சிறுபான்மையினரும் சரி, பேரினவாதிகளும் சரி நாடு நமக்குரியது 'வெள்ளையனே வெளியேறு' என்று மாத்திரம்தான் அன்று கோஷமிட்டனர். வெளிநாட்டுக் கல்வி, வெள்ளையர்களின் மேலாண்மையோடுகூடிய அதிகாரம், ஆங்கில மோகம், உடை மாற்றம், பழக்க வழக்கங்களில் ஏற்பட்ட மாற்றம் போன்றவற்றின் ஊடாக தன்னைத்தானே மேலாளர் என்கிற வர்க்கமாக காட்டிக் கொண்டவர்கள், இனமென்றும், மொழியென்றும் சிறுபான்மையினம் என்றும் மக்களை பிரித்தாள முற்பட்டதன் விளைவுதான், இன்றும் நாட்டில் மொழியாலும், இனத்தாலும் மக்கள் வேறுபடத் தொடங்கியுள்ளனர். உரிமைகள் மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து தேசியவாதம் மதவாதமாகவும், பிரதேசவாதமாகவும் வளர்ந்து, இறுதியில் உள்நாட்டுக்குள்ளேயே தமக்கிடையில் போரிட்டுக்கொள்ளும் நிலைமைக்கு நிலைமைகள் மாற்றம் கண்டன.

ஆனால், அன்று இந்தத் தேசத்தின் விடுதலைக்காக, தானும் இந்நாட்டின் பிரஜை என்று எண்ணியதன் காரணமாக சிலர் தேசத் துரோகிகளாக அறிவிக்கப்பட்டனர். அவர்கள் மக்களின் சுதந்திரத்திற்காக தம்மையே அழிக்க முற்பட்ட மாபெரும் வீரர்களாவர். இவர்களும் இன்றைய நாட்களில் நினைவுகூரப்படுவது முக்கியமாகும். அந்த வகையில் நவமணி பகிரங்கத்துக்கு கொண்டுவந்த பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக செயற்பட்ட காரணத்தினால் 1804 ஆம் ஆண்டு தேசத்துரோகிகளாக அறிவிக்கப்பட்ட 7 முஸ்லிம்களையும், நாட்டின் சுதந்திரத்துக்காக போராடிய முஸ்லிம் தலைவர்களாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்துமாறு கோரிக்கை விடுத்திருந்தார் இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்.

அன்று பிரித்தானிய அடக்குமுறையாளர்களின் ஆட்சிக்கு எதிராக ஊவா, வெல்லஸ்ஸ பகுதிகளில் கிளர்ச்சி செய்த சிங்கள தலைவர்கள் 19 பேர் 1818 ஆம் ஆண்டு தேசத்துரோகிகளாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த நிலையில், புத்தசாசன மற்றும் நீதி அமைச்சர் விஜயதாசவின் சிபாரிசின் பேரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் அண்மையில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அவர்களுக்கு எதிரான பிரகடனம் ரத்து செய்யப்பட்டு போர் வீரர்களாக அறிவிக்கப்பட்டிருந்தனர். ஆனால் அதே காலகட்டத்தில் அதே ஆட்சியாளர்களுக்கு எதிராக தேசத் துரோகிகளாக அறிவிக்கப்பட்ட முஸ்லிம் தலைவர்களையும் விடுதலை வீரர்களாக பிரகடனப்படுத்தப்படுவது இன்றைய நாட்களில் அவசியமான ஒன்றாகும்.

அன்று பிரித்தானிய ஆளுகைக்கு உட்பட்டிருந்த இலங்கையை, அவர்களிடமிருந்து விடுவிப்பதற்காக நாட்டின் பல பகுதிகளிலும் கிளர்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனால், பிரித்தானியரால் பல சிங்கள, தமிழ், முஸ்லிம் தலைவர்கள் தேசத் துரோகிகளாக பிரகடனம் செய்யப்பட்டனர். 1815இல் பிரித்தானியர் கண்டி இராச்சியத்தை கைப்பற்றி முழுநாட்டையும் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தமைக்கு எதிராக ஊவா, வெல்லஸ்ஸ மற்றும் வலப்பன பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சிகளுக்கு காரணமாக இருந்த 19 சிங்கள தலைவர்களும் தேசத்துரோகிகளாக 1818 ஜனவரி 10 ஆம் திகதி பிரகடனம் செய்யப்பட்டனர்.

இதே போன்று, பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக பல முஸ்லிம் தலைவர்களும் கிளர்ச்சி செய்து தேசத் துரோகிகளாக பிரித்தானிய அரசு அன்று பிரகடனம் செய்திருந்தது. அந்தவகையில், 1804 ஜுன் மாதம் 4ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு முஸ்லிம்களான மீரா ஒசன் அவ்வக்கர் (ராய்மூனை), ஒசன் லெப்பை உதுமா லெப்பை (ராய்முனை), அவ்வக்கர் ஈஸா முகாந்திரம் (சம்மாந்துறை), அனீஸ் லெப்பை (மருதமுனை) ஆகியோரும், திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று முஸ்லிம்களான சேகு நீதி (தோப்பூர்), சலம்பதி உடையார் (குச்சவெளி), பீர் முகம்மது ஆகியோரும் தேசத் துரோகிகளாக பிரகடனம் செய்யப்பட்டனர்.



நாட்டின் சுயாதீனத் தன்மையை பாதுகாப்பதற்காக பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக செயற்பட்ட குறித்த 7 முஸ்லிம் தலைவர்களுக்கும் எதிராக தேசத்துரோகிகள் என முன்வைக்கப்பட்டுள்ள பிரகடனத்தை வர்த்தமானி மூலமாக அதிகாரபூர்மாக இரத்து செய்து, நாட்டின் சுதந்திரத்துக்காக போராடிய முஸ்லிம் தலைவர்களாக பிரகடனம் செய்ய வேண்டுமென பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் நினைவுபடுத்தியிருந்தமை சிறப்பானதாகும்.

அதேவேளை, இலங்கையின் சிறுபான்மையினருள் ஓர் இனமான இலங்கை வாழ் முஸ்லிம்கள் 1948 ஆம் ஆண்டு வரையிலும் தேசத்தின் நலனை முன்னிலைப்படுத்தியே தம்மை ஆக்கிக் கொண்டனர். மேலும், இஸ்லாமியப் பற்றில் தம்மை இணைத்துக் கொண்டு, அடுத்த இனத்தாரையும் ஒரே நாட்டின் மக்கள் என்ற வகையில், இணைத்துக் கொண்டு இலங்கையர் என்ற அடையாளத்துடன் வாழ்ந்து வந்தனர். ஆனால் இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர், முஸ்லிம்கள் இலங்கையின் சிறுபான்மையினர் என்று முத்திரை குத்தி விட்டு, தாமே இந்த நாட்டின் பூர்வீகர்கள் என்று பேரினவாத கடும்போக்குவாதிகள் செயற்பட்டனர். இந்த நிலை இல்லாமலாக்கப்பட வேண்டும். சுதந்திரத்துக்காகப் போராடிய தலைவர்களின், தேச ஒற்றுமை பற்றிய கருத்துக்களை, இலங்கையின் அனைத்து மக்களுக்கும் கொண்டு செல்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

இலங்கை வரலாறு நெடுகிலும் மேற்குலக நாடுகளின் காலனியாதிக்கத்திற்கு உட்பட்டே வந்திருக்கிறது. 1505 முதல் 1948 பெப்ரவரி 04 வரை போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் காலத்திற்குக்காலம் இலங்கையின் சுகபோகத்தை ஆண்டு அனுபவித்தது மட்டுமன்றி பல்வேறுபட்ட ஆக்கிரமிப்புக்கள் ஊடாக மக்களின் வாழ்வியலில் பல்வேறு இன்னல்களையும் உருவாக்கியிருந்தனர்.

காலனித்துவ ஆட்சியில் மக்கள் துயர்துடைப்பதற்குரிய தலைவர்கள் அன்று இருந்தனர். மக்களோடு மக்களாக வாழ்ந்த அன்றைய தலைவர்கள் இனம், மதம், மொழி என்று பார்க்கவில்லை. இலங்கையன் என்றே பார்த்தனர். இனமும், மதமும், மொழியும் மக்களை கூறுபோட்டுக் கொண்டதுடன், பள்ளிவாசல்கள் எரிக்கப்படுவதும், முஸ்லிம்கள் வாழ்கின்ற பிரதேச காணிகளுக்குள் புத்தர் சிலைகளை நிறுவுவதும் இன்றைய நாட்களில் நடைபெறுகின்ற விடயங்களாகும். இது வர்க்க பேதத்தை ஏற்படுத்துவதற்கும், இன ஒற்றுமைகளை தாரைவார்ப்பதற்குமான செயலாகும். இவை சுதந்திரத்தின் யதார்த்தத்தையே மழுங்கடிக்கச் செய்கின்றன.

இம்மண்ணை ஆக்கிரமித்த ஆதிக்க நாடுகள் இங்கிருந்த கனியங்களையும் செல்வங்களையும் வற்றச் செய்தனர். அது மாத்திரமன்றி, அவர்கள் பின்பற்றிவந்த மத சிந்தனைகளையும் கலாசாரத்தையும் இந்நாட்டு மக்கள் மீது திணித்தனர். அதில் பலர் உள்வாங்கப்பட்டனர். குறிப்பாக முஸ்லிம்கள் விலகிக்கொண்டனர். இது அவர்களுக்கு பலத்த விரோதத் தன்மையை ஏற்படுத்தியிருந்தது. பிற்பட்ட முஸ்லிம் தலைவர்கள் அவர்களது கல்விமுறைக்குச் சமனான வகையிலான கல்வி நிலையங்களை நிறுவி முஸ்லிம்களின் கல்வித்தாகத்தை ஓரளவுக்கு நிவர்த்திக்க முற்பட்டனர். அறிஞர் சித்தி லெப்பை போன்றோர் இதற்கு முன்னோடிகளாக இருந்தனர். ஆனால் இதற்கான முழு ஆதரவை, அன்று ஏனைய இன தலைவர்களும், மக்களும் வழங்கியிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலர் போன்றோர் தமிழுக்கும், சைவத்திற்குமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்ததன் விளைவாக சைவநெறி அதன் வளர்ச்சிப் பாதையில் மேலோங்கியிருந்தது. ஆங்கிலேயரின் ஆதிக்க வெறித்தனமும், சமய ரீதியான மேலாதிக்கமும் பின்னரான காலகட்டங்களில் பலிக்கவில்லை. தலைவர்களும், மக்களும் ஒருமுகப்படுத்தப்பட்டிருந்தனர். அந்த நினைவாடல்கள் இன்றைய சுதந்திர தினத்தில் நினைவூட்டப்பட வேண்டும்.

வியாபார நோக்கிலான வருகையில் இலங்கையில் இருப்பிடத்தை எடுத்து தன் பூர்வீகமாக்கிக் கொண்ட அரேபிய முஸ்லிம்கள் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் குடியேறி தமது குடியிருப்புகளை அமைத்துக்கொண்டனர். ஏனெனில், அது அவர்களது வியாபார ஏற்றுமதி இறக்குமதிகளுக்கு ஏதுவாய் அமைந்ததனாலாகும். பிற்பட்ட காலங்களில் நாட்டில் உட்பிரவேசித்த அவர்கள் இலங்கைச் சமூகத்துடனும் நாட்டு மன்னர்களுடனும் நெருங்கிய ஆரோக்கியமான உறவை ஏற்படுத்திக் கொண்டனர். இதற்குக் காரணம் அன்றும் இன்றும் பொதுவாக முஸ்லிம்களிடம் இருக்கின்ற விசுவாசமிக்க மனப்பான்மையும் நம்பிக்கை நாணயமும் ஆகும். ஐரோப்பிய காலனித்துவவாதிகள் போல நாடுபிடிக்கும் எண்ணம் இருந்திருந்தால் இன்று கீழைத்தேச நாடுகள் அனைத்தும் குறிப்பாக இந்தியாவை முழுமையான முஸ்லிம் இராஜ்யமாக உருவாக்கியிருக்கலாம். முகலாயர்கள் நாட்டை முழுமைப்படுத்தி அபகரிக்கும் எண்ணமின்றி வாழ்ந்ததன் காரணமாகத்தான், இந்தியா போன்ற நாடுகள் முழுமையான முஸ்லிம் தேசமாக மாறவில்லை. மதத் திணிப்பு அவர்களிடம் காணப்படவில்லை. மக்கள் விரும்பி மதத்திற்குள் வந்தார்கள் என்பதே வரலாறாகும்.

இந்நிலையில் இலங்கையின் ஆதிக்குடிகளுடன் இரண்டறக் கலந்து கொண்ட அராபிய முஸ்லிம்களும், தென் இந்திய முஸ்லிம்களும் தங்களுடைய வியாபாரத்தை பல்கிப் பெருக்கிக்கொண்டதுடன், நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் விசுவாசமாகவும் நடந்து கொண்டனர். எனினும் ஆங்கிலேயர் இலங்கையை கையகப்படுத்தியதன் விளைவாக பல்கிப் பெருகியிருந்த முஸ்லிம்கள் பல்வேறு இன்னல்களுக்கும் முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முஸ்லிம்களது உடைமைகளும் செல்வங்களும் அவர்களால் சூறையாடப்பட்டன. அரச உயர் பதவிகளில் இருந்த முஸ்லிம்கள் தூக்கி வீசப்பட்டனர். இதற்கெதிராக முஸ்லிம்கள் அன்றைய அரசர்களுடன் சேர்ந்து போரிட முயன்றபோது படுகொலை செய்யப்பட்டனர். முஸ்லிம்களோடு சிங்களவர்களும் தமிழர்களும் இந்த இன்னல்களை எதிர்கொண்டமையால் இயல்பாகவே அவர்களது உணர்வுகளில் சுதந்திரத்தின் மீதான தாகம் ஏற்பட்டது. பிரித்தானியாவின் ஆளுகைக்குட்பட்டிருந்த நாடுகளிலும் ஆதிக்கவர்க்கத்திற்கெதிரான புரட்சிகள் வெடிக்கத் தொடங்கின.

அன்றைய பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் பிரித்தாளுகின்ற சூழ்ச்சி காரணமாக இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளை பூதாகரமாக்கியதன் விளைவாக, 1915 ஆம் ஆண்டில் இனமுறுகல் ஏற்பட்டது. இது இன்றுவரை இன ரீதியான பாதிப்பினை ஏற்படுத்தி வருகின்றது. ஓரினமாக வாழ்ந்த மக்கள் மதவாதத்தை மறந்து வாழ்ந்த மக்கள் மத்தியில் மதவாதம் மேலாண்மைப்படுத்தப்படுவதற்கு காரணமாக அமைந்த அன்றைய ஆட்சியாளர்களும், அவர்களோடு ஒட்டிக் கொண்டிருந்தவர்களும் இந்நாட்டின் பூர்வீகத்தை மறந்து, சுதேசிகளோடு தோள் கொடுத்து நாட்டை பாதுகாத்த முஸ்லிம்கள் மீதும், அவர்களது பொருளாதாரத்தின் மீதும் கண் வைத்தனர். இதன் தொடர்ச்சியாக இன்று வரையிலும் முஸ்லிம்களின் மதவழிபாட்டுத் தலங்கள் தொடக்கம் முஸ்லிம் பெண்கள் ஆடை அணிவது வரையிலான எதிர்ப்பலைகள் மேலும் வலுவடைந்துள்ளன. இந்த நிலையை மாற்றுவது குறித்து, இந்த சுதந்திர தினத்தின்போது அனைவரும் சிந்திக்க வேண்டும்.

இன்று 69 ஆண்டுகளை கடந்துள்ள நாட்டின் சுதந்திரம் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்த தாக்கங்கள் பலவுண்டு. அன்று தனிச்சிங்கள சட்டம், தேசிய கீதத்தை சிங்கள மொழியில் இசைத்தல் போன்ற முக்கியமான விடயங்கள் இன்று வேரோடு அறுத்தெறியப்பட்டுவிட்டன. மழைபெய்தும் தூவானம் விடவில்லை என்பதுபோல சிற்சில விடயங்கள் இன்றைய நல்லாட்சியிலும் தொடர்கின்றன. இது முழுமையாக இல்லாமலாக்கப்பட வேண்டும். முஸ்லிம் தலைமைகள் ஒற்றுமையுடன் செயற்பட்ட காலம் மலையேறி தனித்தனியாக பிரிந்து அரசியல் ரீதியாக அநாதையான நிலைக்குள் தள்ளப்பட்டது போன்ற உணர்வு இன்று முஸ்லிம் மக்களிடம் காணப்படுகின்றது.

பேரினவாதம் குடிகொண்டிருக்கும் நாட்டில் நல்லாட்சியின் விளைவு, அனைவரும் அறிந்துகொள்ளக்கூடிய தகவல் அறியும் சட்டம் வெளிக்கொணரப்பட்டுள்ளது. சுதந்திரமான தன்மைகள் நவீன உலகின் செயற்பாடுகளுக்கு ஏற்ப நடைபெற்று வரும் இன்றைய நாட்களில் நாட்டின் சுதந்திரமான போக்குகளுக்கு ஏற்ப அரசியலும், பொருளாதார முன்னேற்றங்களும் மேம்படுத்தப்படுதல் வேண்டும். மக்கள் ஓரினமாக நாட்டின் நற்பிரஜைகளாக வாழ்வதற்கு ஏற்றவிதமான ஐயப்பாடுகள் அற்ற சுதந்திர தாகம் மீண்டும் நாட்டில் குடிகொண்டிட சுதந்திரதின நினைவாடல்கள் நினைவுறுத்தப்படவேண்டும் என்பதே நமது ஆதங்கமாகும்.

# சிறந்த ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள் மூலமே சிறந்த கல்விச்சூழலை உருவாக்கலாம்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க





சிறந்த ஆசிரியர்களும், கல்வியியலாளர்களும் இருந்தால் மாத்திரமே சிறந்த கல்விச் சூழலை உருவாக்க முடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டமளிப்பு விழாவில் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய பிரதமர், எதிர்காலத்தில் பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போது தேசிய மற்றும் மாகாண மட்டத்திலேயே ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். புதிய முறையின் கீழ் பின்தங்கிய பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்களை இலகுவாக நிரப்ப முடியும். இந்த விடயத்தில் கவனம் செலுத்தாமல் கட்டிடங்களால் மாத்திரம் சிறந்த கல்வியைப் பெற்றுக் கொடுக்க முடியாது.

அனைத்து மாணவர்களுக்கும் 13 வருடங்கள் கல்வி வாய்ப்பை வழங்கவும் பாடசாலைகளில் உயர்தொழில் பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலை பரிசீலனை சபை மீண்டும் ஆரம்பிக்கப்படும். அரசியல் அழுத்தங்களின் அடிப்படையில் அதிபர்கள் நியமிக்கப்படும் முறை நிறுத்தப்பட்டுள்ளது. அரசியல் தலையீடற்ற கல்வி முறையை உருவாக்குவது தற்போதைய அரசாங்கத்தின் நோக்கமாகும். நாட்டை முன்னேற்றுவதற்காக அறிவை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தை உருவாக்க வேண்டும். இது பாடசாலைகளில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இவற்றை உள்ளடக்கியது தொடர்பான புதிய கல்விச் சட்ட மூலம் வகுக்கப்பட்டு பெப்ரவரி மாதம் வெளியிடப்படவுள்ளதோடு, பலம்மிக்க இலங்கையைக் கட்டியெழுப்புவது அனைவரினதும் பொறுப்பாகும் என அவர் தெரிவித்தார்.

# மருதானை ஜும்ஆப்பள்ளிவாசலுக்கு சூரிய மின்சக்தி இணைப்பு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆசீர்வாதத்துடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின் பேரில் மின்சாரம், மின்வலு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மற்றும் பிரதி அமைச்சர் அஜித் பி. பெரேரா ஆகியோரின் ஆலோசனையில் இலங்கை சூரிய மின்சக்தி அதிகாரசபை, இலங்கை மின்சார சபை என்பனவற்றின் பூரண அனுசரணையின் கீழ் மின்சக்தி திட்டத்தின் அபிவிருத்தி முற்போக்கு - சூரிய மின்வலுசக்தி ஒன்றிணைப்பு அண்மையில் கொழும்பு - 10 மருதானை ஜும்ஆப் மஸ்ஜிதில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், எம். தாஸின் மௌலவியால் துஆப் பிரார்த்தனை நிகழ்த்தப்பட்டது. நாட்டுக்காகவும், நாட்டு மக்களின் பாதுகாப்புக்காகவும் பொறுப்புடன் சேவையாற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் மற்றும் அமைச்சர்களும், சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒற்றுமையுடனும், நாட்டின் சகல இன மக்களும் சீர சௌபாக்கியங்களுடன் வாழவும் தற்போது நிலவும் வரட்சி நீங்கி மழை பொழியவும் பிரார்த்தனை செய்யப்பட்டது.

மருதானை ஜும்ஆ பெரியபள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வுக்கு, மின்சக்தி, அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி மற்றும் ஜமாஅத்தினர்களும் கலந்து கொண்டனர்.

## அக்கரைப்பற்று பள்ளியில் ஹதீஸ் பாராயணம்

(திகாமடுல்ல நிருபர்)

அக்கரைப்பற்று ஜும்ஆ புதுப்பள்ளிவாசலினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 17ஆவது ஜாமிஉத்திர்மிதி ஹதீஸ் கிரந்தம் பாராயணமும் பயான் நிகழ்ச்சியும் ஜும்ஆ புதுப்பள்ளிவாசல் தலைவர் எச்.சி.எம். லாபீர் தலைமையில் கடந்த திங்கட்கிழமை அஷர் தொழுகையைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டது.

அக்கரைப்பற்று ஜும்ஆ புதுப்பள்ளிவாசலினால் வருடா வருடம் ஓதப்பட்டுவரும் ஜாமிஉத்திர்மிதி ஹதீஸ் கிரந்தம் பாராயணமும் பயான் நிகழ்ச்சியும் கண்ணியத்திற்குரிய உலமாக்களால் தொடர்ச்சியாக ஒரு மாதகாலம் அஸர் தொழுகையைத் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

## யாழ் - கிளி. மாவட்ட ஜம்இய்யதுல் உலமாக்கிளைகளின் அறிவித்தல்

(பாறுக் ஷிஹான்)



யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டத்தைப் பாரம்பரியத் தாயகமாக அல்லது இம் மாவட்டங்களில் திருமண உறவைக் கொண்டிருக்கும் உலமாக்கள் மற்றும் ஆலிமாக்களின் விபரங்களைத் திரட்டுவதற்கு யாழ்/கிளிநொச்சி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா கிளை தீர்மானித்துள்ளது.

மேற்படிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கையிலோ அல்லது உலகத்தின் எப்பாகத்திலிருந்தாலும் ஜம்இய்யாவின் எந்த மாவட்டக்கிளையில் அங்கத்துவத்தைப் பெற்றிருந்தாலும் அல்லது இதுவரையில் அங்கத்துவத்தினை பெற்றிராவிட்டாலும் தங்களுடைய விபரத்தைத் தந்துதவுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

தங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், தற்போது பார்க்கும் பணி ஆகிய விபரங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்பு 071 3901307 எனும் கையடக்கத் தொலைபேசிக்கு குறுந்தகவல் (SMS) மூலமோ அல்லது அஷ்ஷெய்க் எப்.ஏ. பருஸ், இல 77, 9ம் குறுக்குத்தெரு, புதிய சோனகத் தெரு, அராலி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கோ அனுப்பிவைக்குமாறு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட ஜம் இய்யதுல் உலமாக்கிளைத் தலைவர் அஷ்ஷெய்க் பீ.ஏ.எஸ் சுபியான் அறிவித்துள்ளார்.

## நீதிமன்றில் அக்குறணை அஸ்ஹர் கல்லூரி நலன்விரும்பிகள்



அக்குறணை அஸ்ஹர் மத்திய கல்லூரி பிரதி அதிபர் கட்டணம் அறவிடும்போது இலஞ்ச ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட வழக்கு விசாரணை திங்களன்று கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பிரதி அதிபர் பிணையில் விடுவிக்கப்பட்டார். இந்த வழக்கின் போது பெருந்தொகையான கல்லூரி பழைய மாணவர்கள், அபிமானிகள் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தனர். விடுதலை அறிவிப்பின்பின் அங்கு கூடியிருந்தவர்களைப் படத்தில் காண்க.


# INVITATION FOR BIDS (IFB)

**THE GOVERNMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA**
**MINISTRY OF CITY PLANNING AND WATER SUPPLY**
**NATIONAL WATER SUPPLY AND DRAINAGE BOARD**

| | | |
|---|---|---|
| Date | : | 01st February 2017 |
| Loan No. and Title | : | ADB GRANT NO. G 129 – SRI, DRY ZONE URBAN WATER AND SANITATION PROJECT (DZUWSP) |
| Contract No. and Title | : | CONTRACT No. EQUIPMENT / ADB / RSC / 23 TITLE: TENDER FOR SUPPLY AND DELIVERY OF EQUIPMENT AND RELATED SERVICES FOR THE RSC NORTH WESTERN REGION |
| Deadline for Submission of Bids | : | 28th February 2017, Time : 11.30 a.m. |

1. The Government of The Democratic Socialist Republic of Sri Lanka has received Grant from the Asian Development Bank (ADB) towards the cost of the Dry Zone Urban Water and Sanitation Project (DZUWSP). And Part of this Grant will be used for payments under the Contract named above. Bidding is open to Bidders from Eligible Source Countries of the ADB as described in the Bidding Document.

2. The Chairman, Project Procurement Committee, on behalf of the National Water Supply & Drainage Board (NWSDB), now invites sealed Bids from eligible Bidders through National Competitive Bidding (NCB) on Single-Stage, One-Envelope without Prequalification Procedure (NCB/SS-1E) for **Supply and Delivery of and Equipment and Related Services for the RSC North Western Region.** The Goods proposed to be procured are Supply & Delivery of,

| LOT NO. | DESCRIPTION | LOT NO. | DESCRIPTION |
|---|---|---|---|
| Lot – A | 02 Nos. Concrete Breakers | Lot – F | 05 Nos. Pipe Cutting Machines |
| Lot – B | 08 Nos. Rammer Compactors | Lot – G | 02 Nos. Chain Blocks |
| Lot – C | 02 Nos. Asphalt Cutter | Lot – H | 02 Nos. Butt Welding Machines |
| Lot – D | 02 Nos. Leak Detectors | Lot – I | 06 Nos. Dewatering Machines |
| Lot - E | 10 Nos. Heavy Duty Grinders | Lot - J | 01 No. Flushing unit with Air Compressor |

3. Only Eligible Bidders with the following key qualifications should participate in this Bidding.

- The Bidder shall be the Accredited Local Agent in Sri Lanka for the Goods Offered.
- The Bidder shall have Minimum Average Annual Turnover of,

| LOT NO. | AVE. ANNL. TURNOVER | LOT NO. | AVE. ANNL. TURNOVER |
|---|---|---|---|
| Lot – A | SLRs. 0.8 Million | Lot – F | SLRs. 4.0 Million |
| Lot – B | SLRs. 4.0 Million | Lot – G | SLRs. 0.15 Million |
| Lot – C | SLRs. 1.4 Million | Lot – H | SLRs. 1.45 Million |
| Lot – D | SLRs. 3.6 Million | Lot – I | SLRs. 4.7 Million |
| Lot - E | SLRs. 0.7 Million | Lot - J | SLRs. 3.7 Million |

calculated as total certified payments received for Contract in progress or completed, within last Three (03) years.

- Participation in at least Three (03) Contracts, within the last Three (03) years that has been successfully or substantially completed and that is similar to the proposed Supply Work.
- The Bidder/Manufacturer shall demonstrate that the goods offered have been,

(i) In production for at Least Twenty (20) years, and
(ii) Sold a minimum of Six Hundred (600) units of similar type and specification over the last Three (3) years to the overseas countries.
(iii) Been in operation for a minimum of Six (06) years in Sri Lanka.

4. Interested Eligible Bidders may obtain further information from,

The Project Director, Project Coordinating Cell, (DZUWSP),
National Water Supply & Drainage Board. (NWSDB),
No. 511/2, Rawathawatta, Moratuwa.
Telephone 0112641101
Facsimile Number 0112641022
(E-Mail: pdadb5@waterboard.lk)

The Bidding Documents may be inspected free of charge at the office of the Project Director of above address from 9:00hrs to 15:00hrs on working days.

5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested Bidders on the submission of a written application on a Business Letterhead and the certificate of registration of the Bidder as per the Act.3 of 1987 with the registrar of Public Contract to the Project Director on the address above in Item 4 from **01st February 2017 until 23rd February 2017** during 09:00 hours to 15:00 hours on normal working days. The Bidding Document shall be obtained upon payment of a non-refundable Bid Fee of SLRs. 8,000.00 plus VAT in Cash or Bank Draft in favor of Project Director, Dry Zone Urban Water and Sanitation Project. *(The Tax Invoice, if so required, will be collected from the Office of AGM, Tenders & Contracts, National Water Supply & Drainage Board, P.O. Box 14, Galle Road, Ratmalana, on production of the relevant Cash Receipts issued by the Project Accountant)*

6. Bids shall be delivered to the Office of the Project Director (DZUWSP), Project Coordination Cell, NWSDB, No. 511/2, Rawathawatta, Moratuwa to receive on or before **11.30 hrs on 28th February 2017** together with a Bid Security in the amount as specified in the Bidding Document (Bid Data Sheet). Bids will be opened immediately after the deadline after closing in the presence of the Bidders' representatives who choose to attend.

7. The Chairman, Project Procurement Committee will not be responsible for any costs or expenses incurred by Bidders in connection with preparation or delivery of the Bid.

**The Chairman**
**Project Procurement Committee**
**Dry Zone Urban Water and Sanitation Project (DZUWSP)**
**National Water Supply & Drainage Board**

# நலம் வாழ

செ.தர்ஷிகா



# பப்பாளி விதையை தூக்கி எறியாதீர்கள்....

இனிப்புச் சுவையை கொண்ட பப்பாளி பழத்தை பற்றியும், அதனுடைய ஆரோக்கியம் நிறைந்த மருத்துவ குணங்களை பற்றியும் நாம் அனைவரும் அறிந்துள்ளோம். ஆனால் பப்பாளி பழத்தினை போன்றே அதனுடைய விதைகளிலும் ஏராளமான நன்மைகள் நிறைந்துள்ளன.

பப்பாளி விதைகளில் உள்ள நன்மைகள்

பப்பாளி விதையில் இருக்கும் பெப்பைன் என்ற என்சைமைகள், நாம் சாப்பிடும் உணவுகளின் முழுமையான ஜீரணத்திற்கு உதவுகிறது. பப்பாளி விதைகள் நமது வயிற்று பூச்சிகளை அழிக்கும் தன்மைக் கொண்டது. எனவே தினமும் பப்பாளி விதைகளை

சாப்பிட்டால், நமது வயிற்றில் இருக்கும் பூச்சிக்கள் மற்றும் புழுக்கள் அழிந்துவிடும்.

குழந்தைப் பேறுகளை தள்ளிபோட நினைப்பவர்கள், மாத்திரை மருந்துகள் இல்லாமல், இயற்கையான முறையில் கருத்தரிப்பை தடுப்பதற்கு, பப்பாளியின் விதைகள் பயன்படுகிறது.

பப்பாளி விதைகளை தொடர்ந்து உட்கொள்ளும் போது, நமது உடலில் கொடிய மாற்றங்களை உண்டாக்கும் புற்றுநோய் செல்கள் உருவாகாமல் தடுக்கப்படுகிறது. நமது உடம்பில் ஏற்படும் பல வகையான ஆர்த்ரைடிஸ், மூட்டு வலி, போன்ற பிரச்சினைகளின் மூலம் உண்டாகும் வீக்கத்தை குறைத்து, வலியைப் போக்குகிறது.பப்பாளி விதைகள் நமது உடம்பில் நோயை உருவாக்கக்கூடிய, ஸ்டைஃபைலோ கோக்கஸ், ஈ கோலை, மற்றும் சால்மோனெல்லா ஆகியவற்றின் வளர்ச்சியை கட்டுப்படுத்தி, கல்லீரல் மற்றும் சிறுநீரகத்தின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

# தலைவலிக்கு மருந்தில்லா மருத்துவம்

தலைவலியை அனுபவிக்காதவர்களே இருக்கமாட்டார்கள். தலைவலி ஒருவருக்கு வந்தால், எந்த ஒரு காரியத்தையும் செய்ய முடியாது. அந்த அளவில் தலைவலி இருக்கும்.

ஆனால் மாத்திரையை அடிக்கடி சாப்பிட்டால், அதனால் பக்க விளைவுகளை சந்திக்க நேரிடும். எனவே தலைவலியில் இருந்து உடனடி நிவாரணம் கிடைக்க, கண்ட கண்ட மாத்திரைகளைப் போடுவதைத் தவிர்த்து, நம் பாட்டிமார்கள் பின்பற்றிய வைத்தியங்களை மேற்கொள்ளுங்கள்.

வெற்றிலையை அரைத்து சாறு எடுத்து கொள்ளவும். கிராம்பை தூள் செய்து அதனை வெற்றிலை சாறுடன் கலந்து பேஸ்ட் போல் செய்து, நெற்றியில் தடவினால், தலைவலியில் இருந்து உடனடி நிவாரணம் கிடைக்கும்.

பசலைக்கீரையில் தலைவலியைப் போக்கத் தேவையான விட்டமின்கள் மற்றும் கனிமச்சத்துக்கள் உள்ளது. ஆகவே தலைவலி இருக்கும் போது பசலைக்கீரையை அரைத்து நெற்றியில் தடவினால், தலைவலி நீங்கும்.

துளசி இலைகளை நீரில் போட்டு நன்கு கொதிக்க வைத்து இறக்கி, தேன் கலந்து குடித்தால், தலைவலி குணமாகும்.

# நீரிழிவு, முற்காப்பு முறையும், சிகிச்சையும்

*கடந்தவாரத் தொடர்ச்சி....*

நீரிழிவில் காணும் நிலைப்பாடுகள் ஒன்றன் பின் ஒன்றாகபின்வருமாறு தொடரும். நோய் தோன்றுவதற்குமுதற் குறியாக உடல் பருமன் ஏற்படும். அத்தோடு நீர்த்துவாரம் சற்றுப் பெரிதாகி சிறுநீர் விரைவாகவெளியேற ஆரம்பிக்கும். அடுத்து சிறுநீர் அதிகமாகவெளியேறும் காரணத்தால் உடலின் அழகு குறைந்து மேற்றோல் வறட்சியான தோற்றத்தைக் காட்டும். வயிற்றில் காற்று உருவாகி மந்த நிலைமையைக் காட்டும். சிறுநீர் தெளிந்தநீர் போல் அடிக்கடிஅரை லீற்றர் முதல் முக்கால்லீற்றர் வரைவெளியேற ஆரம்பிக்கும் அந்நிலையில் சிறுநீரிலோ, இரத்தத்திலோசீனிச் சத்து பெரிதாக காணப்படமாட்டாது. அவ்வாறுவெளியாகும் சிறுநீர் உலர்ந்தால் பிசுபிசுப்பாககாணப்படும்.

சிறுநீர் கழிந்தபின் தாகம் ஏற்படும்,நாவரட்சி ஏற்படும். உடல் பலயீனப்பட்டு,களைப்பு ஏற்பட ஆரம்பிக்கும். இந்நிலையானது அதிக சிறுநீர்கழித்தல் (மதுமேகம்), நீரிழிவு என்ற இரண்டில் ஒன்றாக இருக்கலாம். தற்காலத்திலுள்ள நவீனகண்டுபிடிப்பு முறையின் மூலம் நோயை விரைவிலேயே இனங்காணலாம். முதுமையிலேயேஉண்டாகவேண்டிய இந்நோய் இளமையிலும்,நடுவயதிலும் வருவதுண்டாயினும் தக்கமருத்துவ, பராமரிப்பில் குணப்படுவது உண்டெனினும் நோயாளி சாதாரணமான சிகிச்சை,உணவு முறைகளை கடைபிடிப்பதுதக்கபயனளிக்கும்.

உடல் பலத்தைபேணக் கூடிய வகையில் உணவுவகைகளைகொடுக்கவேண்டும்.சமிபாடுநன்றாக இருக்கும் பட்சத்தில் தவிடு நீக்காத அரிசிச் சோறு,கோதம்பை குருநல கஞ்சி போன்றவையும் ஆட்டுக்கறி, இறைச்சிக்கறி முதலியவைகளும் காய்கறிகளில் கத்தரிப் பிஞ்சு, அவரைப் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, நெய், பால், தைர், மோர் போன்றவைகளையும் உணவாகக் கொள்ளலாம். சிறுநீர் கழிக்கும்போது எரிவுகாணின் பீர்க்கங்காய், புடலங்காய் போன்றவற்றை உண்ணலாம். அதிக சிறுநீர் வெளியாகும் போது சுண்டைக்காய்,தாளிக்கீரை, சிறுகீரை, முருங்கைப்பூ, ஆவாரம்பூ போன்றவையும் உண்டுவரலாம். உடல் மெலிவான நிலையை போக்க சோற்றில் வடித்தகஞ்சி ஒரு கப் குடித்துவருவது பலன் தரும். ஆவாரை இருக்க சாவாரை காண்பதுண்டோ என்று சித்தமருத்துவம் கூறுகிறது. என்றால் ஆவாரையின் நன்மையை தெரிந்தகொள்ளுங்கள்.

வாரத்தில் இருமுறை ஆவாரம்பூவில் 10கிராம் போட்டு அத்தோடு 200 அடர்த்தி நீர் ஊற்றி 100 அடர்த்தி வற்ற வைத்துகாலை மாலை குடித்துவரவும்.

எந்தப் பக்கவிளைவும் இல்லாது,நீரிழிவில் உண்டாகும் பலபக்கவிளைவுகளுக்கும் ஒரு நிவாரணியாக இருக்கும். நாட்டுமருந்துக் கடைகளில் ஆவாரம் பூ என்றோர வராமல் என்றோகேட்டுவாங்குங்கள்.

(தொடரும்)



Dr.Rauf Jabbar (R.A.M.P)
www.siddhahealth.net

# முழங்கால் வலிக்கு வீட்டுமருத்துவம்



தற்போது முழங்கால் வலி என்பது பெரும்பாலானோர் அவஸ்தைப் படும் பிரச்சினைகளுள் ஒன்றாகும். முழங்கால் மூட்டு வலியானது தொடர்ச்சியான தேய்மானம் காரணமாக ஏற்படும் ஒரு நிலையாகும். பொதுவாக வயதானவர்களுக்கு தான் இம்மாதிரியான நிலை ஏற்படும். ஆனால் இக்காலத்தில் இளம் வயதினரும் முழங்கால் வலியால் கஷ்டப்படுகின்றனர்.

அதிலும் குறிப்பாக பெண்கள் தான் இப்பிரச்சினையை அதிகமாக சந்திக்கின்றனர். முழங்கால் வலியைப் போக்க மருத்துவரிடம் சென்றால், அவர்கள் மாத்திரைகளைப் பரிந்துரைப்பார்கள். தினமும் மாத்திரை போட்டால் சரியாகிவிடும் என்று கூறுவார்கள். ஒரு நாள் அந்த மாத்திரையை போட மறந்தால், வலி மீண்டும் ஆரம்பமாகும்.

ஆனால் நம் வீட்டு சமையலறையில் உள்ள எலுமிச்சையைக் கொண்டு எளிய வழியில் முழங்கால் மூட்டு வலிகளைச் சரிசெய்யலாம் என்பது தெரியுமா? இங்கு அதுக்குறித்து தான் கொடுக்கப்பட்டுள்ளது

மேலும் எலுமிச்சை மூட்டுக்கள் மற்றும் நரம்புகளுக்கு மிகவும் நல்லது. ஏனெனில் இதன் தன்மை இரத்த நாளங்களை ரிலாக்ஸ் அடையச் செய்யும் மற்றும் எலும்புகளில் ஏற்படும் அழற்சியை எதிர்க்கும் பண்பை அதிகரிக்கும்.

நல்லெண்ணெய்- நல்லெண்ணெயில் நோயெதிர்ப்பு அழற்சிப் பொருள் உள்ளது. இது எலும்பு மச்சை திசுக்கள் வழியாக இரத்த நாளங்களில் ஊடுருவி, இரத்த ஓட்டத்தில் நுழைந்துவிடும்.

எலுமிச்சையை துண்டுகளாக்கி, துணியில் வைத்து கட்டிக் கொள்ள வேண்டும்பின் வெதுவெதுப்பான நல்லெண்ணெயில் எலுமிச்சை கட்டிய துணியை நனைத்து, வலியுள்ள இடத்தில் 5-10 நிமிடம் ஒத்தடம் கொடுக்க வேண்டும்.

இப்படி தினமும் இரு வேளை செய்து வந்தால், வலி விரைவில் குணமாகும். மருத்துவரை எப்போது அணுக வேண்டும் உடல் எடையைக் கூட தாங்க முடியாத அளவில் கடுமையான வலியைச் சந்தித்தால் கால்களை மடக்கவோ அல்லது நீட்டவோ முடியாமல் இருப்பது முழங்கால் வலியுடன் காய்ச்சல், முழங்காலைச் சுற்றி சூடாகவோ அல்லது சிவப்புடனோ இருப்பது வலி பல வாரங்களாக நீடித்து இருப்பது போன்ற பிரச்சினைகளைச் சந்தித்தால், சற்றும் தாமதிக்காமல் உடனே மருத்துவரை அணுக வேண்டும்.

# அது ஏன் அவ்வாறு?

வீரர்கள் மலையேற்றத்தின் போது முன்பக்கம் வளைந்தவாறு ஏறுவதும் இறங்குகையில் பின்பக்கம் சாய்ந்தவாறு இறங்குவதும் ஏன்?

நாம் நேராக நிற்கையில் (நிமிர்ந்து) புவி ஈர்ப்பு மையம் நமது இரு கால்களுக்கிடையே அமைந்து சரியான சமநிலையில் நிற்க முடிகிறது. சமதளத் தரையின் மீது நடக்கத் தொடங்கும்போது, புவி ஈர்ப்பு மையமும் நடக்கும் திசை நோக்கி நகர்கிறது.

இருப்பினும் அதன் சமநிலையில் மாற்றம் ஏதும் உண்டாவதில்லை. ஆனால், மலையேறும்போது புவி ஈர்ப்பு மையம் முன்னோக்கி இடம்பெயர்வதுடன் அதன் சமநிலையிலும் ஏற்றத்தாழ்வு உண்டாகிறது. இதனைச் சமன்செய்யும் பொருட்டு உடலை முன்னே சாய்த்து மலையின் மீது ஏறுகின்றனர்.

இதேபோன்று மலை மேலிருந்து கீழே இறங்கும்போது புவி ஈர்ப்பு மையமும் பின்பக்கம் இடம்பெயர்கிறது. சமநிலையிலும் வேறுபாடு நிகழ்கிறது. சரியான சமநிலைக்குக் கொணரும் பொருட்டு, பின்னோக்கிச் சாய்ந்தவாறு கீழிறங்கி வர வேண்டியுள்ளது.



ஓடிக்கொண்டிருக்கும் ரயிலின் ஓசை பாலத்தைக் கடக்கும்போது மாறுபடுவது ஏன்?

ஒரு ரயில் அதன் பாதையில் செல்லும் போது மூன்று காரணங்களால் ஓசை உண்டாகிறது. முதலாவது தண்டவாளத்துக்கும் ரயிலின் சக்கரத்துக்கும் உள்ள உராய்வு. இரண்டாவது இரண்டு தண்டவாளத்துக்கும் இடையில் இருக்கும் இடைவெளியில் சக்கரத்தினால் ஏற்படும் விளைவு. தண்டவாளத்தில் உள்ள ஸ்வீப்பர் கட்டைகள் ஜல்லிக் கற்களின் மீது நன்கு பதிக்கப்பட்டிருப்பதால் அதன் அதிர்வுகள் குறைகின்றன. அதன் ஓசையும் பூமியினுள் உறிஞ்சப்பட்டு விடுகின்றன.

ஆனால் பாலத்தின் மீது ரயில் செல்லும்போது இந்த ஸ்வீப்பர் கட்டைகளும் அதைத் தாங்குகிற தூண்களும் பூமியின் மீது பதிக்கப்படாததால் அதன் அதிர்வுகள் அதிகமாகி ஓசையும் அதிகரிக்கிறது. உள்ளீடற்ற தன்மையாலும் அதிர்வு ஓசை தரையிலும் நீரிலும் எதிரொலிக் கப்படுவதாலும் ஓசை இன்னும் அதிகரிக்கிறது.

# அறிவுலகம்



- வை.எம். ஆஷிக்

# நிலநடுக்கமும் விலங்குகளும்



நிலநடுக்கம் வருவது விலங்குகளுக்கு எப்படி தெரியும்? அறிவியல் உண்மை!

பூமியின் அடிப்பாகத்தில் குளிர்ச்சி அடையாமல் இருக்கும் நெருப்புக் குழம்பானது சில சமயங்களில் பூமியின் மென்மையான பரப்பின் மீது வரும் போது நிலநடுக்கம் ஏற்படுகிறது.

நிலநடுக்கம் வந்த பிறகு அதனால் ஏற்படும் விளைவுகளை ரிக்டர் அளவில் எடுக்கும் முயற்சிகளை மட்டுமே மனிதனால் எடுக்க முடிகிறது. ஆனால் நிலநடுக்கம் வருவதற்கு முன்கூட்டியே விலங்குகள் மற்றும் பறவைகளால் உணர முடியும் என்று நம் முன்னோர்களின் காலத்தில் இருந்தே கூறி வருகின்றார்கள்.

நிலநடுக்கம் வருவது விலங்குகளுக்கு தெரிவது எப்படி? பொதுவாக விலங்குகள் அனைத்தும் பூமியில் தரையின் மீது தன்னுடைய காதுகளை வைத்து தூங்குகிறது.

எனவே தரைக்கும் விலங்குகளுக்கு தொடர்பு உள்ளதால், தரையில் ஏற்படும் மெல்லிய அதிர்வுகளை கூட விலங்குகளினால் உணர முடிகிறது. மேலும் நிலநடுக்கம் ஏற்படுவதற்கு முன்பு நிலத்தின் மீது கந்தக வாசனை வீசும். கடல் நீர் கலங்கி இயற்கையான கடல் நீர் நிறத்தில் இருந்து, வேறுபட்டுக் காணப்படும்.

இந்த மாற்றங்களை எல்லாம் பறவைகள் உணர்ந்து வேறு இடங்களுக்கு சென்று விடும் என்று நம் முன்னோர்களின் காலத்தில் இருந்து கூறி வருகின்றார்கள்.

# ஆபிரஹாம் லிங்கனின் கடிதம்

லிங்கன் தன் மகனை பயிற்றுவிக்கும் ஆசிரியருக்கு எழுதிய நெகிழ்ச்சி தரும் கடிதம்.

''அனைத்து மனிதர்களுமே நேர்மையானவர்களாக, உண்மையானவர்களாக இருக்க மாட்டார்கள் என அவனுக்கு சொல்லிக்கொடுங்கள் ஆனால் பகைவர்களுக்கு நடுவில் அன்பான நட்புக்கரம் நீட்டும் மனிதர்களும் உண்டென அவனுக்கு தெரிவியுங்கள்.

பொறாமை அவன் மனதில் ஏற்படாமல் கவனமாக பார்த்துக் கொள்ளுங்கள். எதற்கெடுத்தாலும் பயந்து ஒடுங்கிப்போவது கோழைத்தனம் என புரியவையுங்கள்.

புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை அவனுக்கு திறந்துகாட்டுங்கள். அதே வேளையில், இயற்கையின் ஈடில்லா அதிசயத்தை ரசிக்கவும் அவனுக்கு கற்றுக் கொடுங்கள்.

வானில் பறக்கும் பட்சிகளின் புதிர்மிகுந்த அழகையும் சூரிய ஒளியில் மின்னும் தேனீக்களின் துரிதத்தையும் பசுமையான மலையடிவார மலர்களின் வனப்பையும் ரசிக்க கற்றுக் கொடுங்கள்


அவனுக்கு ஏமாற்றுவதை விடவும் தோல்வி அடைவது எவ்வளவோ மேலானது என்பதை அவனுக்கு கற்றுக்கொடுங்கள். மற்றவர்கள் தவறு என விமர்சித்தாலும் கூட சுயசிந்தனை மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க அவனுக்கு கற்றுக் கொடுங்கள்.

மென்மையான மனிதர்களிடம் மென்மையாகவும், முரட்டுக்குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும் அணுக அவனை தயார்படுத்துங்கள். அனைத்து மனிதர்களின் குரலுக்கும் அவன் செவிசாய்க்க வேண்டும் என அறிவுறுத்துங்கள். எனினும் உண்மை எனும் திரையில் வடிகட்டி நல்லவற்றை மட்டும் பிரித்தெடுக்க அவனுக்கு கற்றுக்கொடுங்கள்.

துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று அவனுக்கு கற்றுக்கொடுங்கள். கண்ணீர் விடுவதில் தவறில்லை என்றும் அவனுக்கு புரியவையுங்கள். போலியான நடிப்பை கண்டால் எள்ளிநகையாடவும் வெற்று புகழ் உரைகளை கண்டால் எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்கு பயிற்சி கொடுங்கள்.

அவனை கனிவாக நடத்துங்கள். அதிக செல்லம் கொடுத்து உங்களை சார்ந்திருக்க செய்ய வேண்டாம். சிறுமை கண்டால் கொதித்தெழும் துணிச்சலை அவனுக்கு ஊட்டுங்கள். அதேவேளையில் தனது வலிமையை மௌனமாக வெளிப்படுத்தும் பொறுமையையும் அவனுக்கு சொல்லிக் கொடுங்கள். இது ஒரு மிகப்பெரிய பட்டியல்தான். இதில் உங்களுக்கு சாத்தியமானதையெல்லாம் கற்றுக்கொடுங்கள். அவன் மிக நல்லவன். என் அன்பு மகன்.''

இப்படிக்கு,
ஆபிரஹாம் லிங்கன்.





# ஒரு நல்ல ஆசான்...

1. பாடம் நடத்தையில் அதிகம் பேச மாட்டார். எதையும் சுருங்கச் சொல்லி எளிதில் விளங்க வைத்து விடுவார்.
2. கேள்விக்கு பதில் தெரியாத மாணவனை, மாணவியை தேடி பிடித்து எழுப்பி விட்டு, எல்லோர் முன்னும் நிற்கவைத்து அவமானப்படுத்தி அழகு பார்க்க மாட்டார்.
3. படிப்பவன், படிக்காதவன், முதல் இருக்கை, கடைசி இருக்கை என்பதை வைத்து தன் மாணவர்களை கணக்கிடமாட்டார்.
4. எந்த மாணவனுக்கு அறிவுரை சொல்ல நினைத்தாலும் தனியாய் அழைத்து தன் பிள்ளைகளுக்கு சொல்வது போன்றே சொல்வார்.
5. வகுப்பில் 50 மாணவர்கள் இருந்தாலும் ஒவ்வொரு மாணவனின் குடும்ப பின்னணியையும் மிகச் சரியாக புரிந்து வைத்திருப்பார்.
6. அடிக்கும் போதும் வலிக்காதது போல் செல்லமாய் அடிப்பார்.
7. எவருக்கும் ''மக்கு'' என்ற பட்டம் தரமாட்டார். சிலருக்கு ஒரு முறை சொல்லி தந்தால் புரிந்து விடுவது, சிலருக்கு இரண்டு முறை சொல்லிதந்தால் புரிந்து விடும். அவ்வளவு தான் வித்தியாசம் என்பார்.
8. மாணவர்களை திட்டும் போது , தானும் மாணவர் பருவத்தை கடந்து வந்தவன் தான் என்பதை நினைவில் கொள்வார்.
9. வகுப்பில் மட்டும் ஆசிரியராகவும் வெளியுலகில் நண்பராகவும் இருப்பார்.
10. ஒரு போதும் எந்த ஒரு மாணவனின் மனதிலும் தாழ்வு மனப்பான்மையை விதைக்க மாட்டார்.

எந்த ஆசிரியர் நடத்திய பாடம் நம் புத்தியிலும் அவர் பயிற்றுவித்த விதம் நம் மனதிலும் நீங்காஇடம் பிடித்ததோ அவரே நல்லாசிரியர். கற்று கொடுப்பவர் எல்லாம் ஆசிரியர் இல்லை, நாம் யாரிடம் கற்கிறமோ அவரே ஆசிரியர்.

# ரோஹிங்கிய முஸ்லிம்களுக்காக மைத்திரி குரல் கொடுப்பாரா?

ஏ.எஸ்.எம். ஜாவித்

இன நல்லிணக்கத்தினையும், சமாதானத்தினையும் இலங்கையில் ஏற்படுத்த துடிக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மியன்மார் சிறுபான்மை முஸ்லிம்கள் விடயத்திலும் அக்கறை செலுத்துவாரா? என இலங்கை வாழ் முஸ்லிம்கள் ஆதங்கப்படுகின்றனர்.

மியன்மார் நாட்டில் ரோங்கியா முஸ்லிம்கள் பௌத்த இனவாதிகளாலும், அந்த நாட்டின் இராணுவத்தினராலும் மனிதாபிமானமற்ற வகையில் மிகவும் மோசமான முறையில் துன்புறுத்தப்பட்டு கொலை செய்யப்படுகின்றனர். இந்த இனவாத மனித நேயமற்ற கும்பல்களினால் பல ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் சிறுவர்கள், பெரியோர்கள், பெண்கள் என்ற பால் வேறுபாடின்றி இன்று வரை ஈவிரக்கமற்ற வகையில் கொன்று

செயற்பாடுகளை விரும்பாதவர்கள் என்ற வகையில் அதற்கான கௌரவத்தினையும், மரியாதையையும் இலங்கை வாழ் முஸ்லிம்களும் பௌத்த மதத்திற்கு வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய விடயமாகும்.

இவ்வாறு மாற்று மதத்தவர்களால்கூட மதிக்கப்படும் பௌத்த மதத்தை, அந்த மதத்தைச் சேர்ந்த ஒரு சிலர் செய்யும் செயற்பாடுகள், கொச்சைப்படுத்தி வருகின்றன. எனவே, அவர்களே அவர்களது மதத்துக்கு துரோகம் செய்கின்றனர். இது ஏனைய சமூகங்கள் அவர்களை வெறுப்பதற்கு வழிசமைத்துக் கொடுக்கின்றது என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது.

ரோஹிங்கியாவில் இடம் பெறும் மனித நேயமற்ற இனப் படுகொலைகள் இன்று வலைத்தளங்கள் ஊடாக பகிரங்கமாகவே வெளியிடப்படுகின்றமை முழு

கைகள் விடப்பட்ட வண்ணமே இருக்கின்றன. இவ்வாறான நிலையிலும்கூட மியன்மார் அர

சின் கேவலமான செயற்பாடுகளால் முஸ்லிம்கள்

செல்ல முடியாதபடி முஸ்லிம் பகுதிகள் அந்த அரசால் தடை செய்யப்பட்டு, அந்த மக்கள் பனயம் வைக்கப்பட்டு கொத்தடிமைகளாக நடத்தப்படுவதும், அவர்கள் இனப் படுகொலை செய்யப்படுவதும், பெண்கள பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுவதும் மிக மோசமான முறையில் இடம் பெற்று வருகின்றன.

இங்கு மனிதாபிமானம் பேசும் இலங்கை அரசு தனது சகாவான மியன்மார் செய்யும் கபடத் தனங்களையும், அடாவடித் தனங்களையும் அனுமதிக்கின்றதா? என்ற வினாவிற்கு அப்பால் ஏன் அந்த நாட்டின் துரோகத்தனத்தினைப் பற்றிப் பேசுவதில்லை? என்ற சந்தேகங்களும் இன்று ஏற்பட்டுள்ளது. ரோஹிங்கிய முஸ்லிம்கள் அந்த நாட்டில் வாழவும் முடியாது, அங்கிருந்து தப்பிக்கவும் முடியாதவாறு அந்தத் துரோகிகளால் சூறையாடப்படுவது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

மனித நேயமுள்ள ஓர் அரசியல்வாதியாகவும், தலைவராகவும் காணப்பட்ட மியன்மாரின் தற்போதைய ஸ்டேட் கவுன்ஸலர் (பிரதமர் பதவிக்கு நிகரான பதவி) ஆங்சான் சூகிகூட முஸ்லிம்கள் விடயத்தில் கண்டுகொள்ளாத ஒரு





குவிக்கப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் மியன்மார் அரசாங்கத்துடன் பௌத்த நாடு என்ற வகையில் இலங்கை அரசாங்கமும், ஜனாதிபதியும் நெருங்கிய தொடர்புகளை வைத்துள்ள நிலையில், மனிதாபிமான அடிப்படையில் பாதிக்கப்படும் முஸ்லிம் சமூகம் தொடர்பாக, ஜனாதிபதி தனது கவனத்தைச் செலுத்தி அங்கு நடைபெறும் கொலைக் கலாசாரத்தினையும், இரத்தக் கலரியையும் நிறுத்துமாறு உடன் அறிக்கை விட வேண்டும் என இலங்கைவாழ் முஸ்லிம் சமூகம் எதிர்பார்க்கின்றது.

அகிம்சை, தர்மம், விட்டுக் கொடுத்தல், மற்றவர்களுக்கு உதவி செய்தல் போன்ற உயரிய பண்புகளைக் கொண்ட பௌத்த மதம் அனைவராலும் மதிக்கப்படும் ஒரு மதமாகும். இலங்கையிலும் முஸ்லிம்கள் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட ஒருசில பௌத்த இனவாதிகளால், முஸ்லிம்கள் தொடராக துன்புறுத்தப்பட்டு வஞ்சிக்கப்பட்டு வந்தாலும் பெரும்பான்மையான பௌத்த மக்கள் மேற்படி தீய

முஸ்லிம் சமுகத்தை மட்டுமல்லாது சமாதானத்தையும், இன ஒற்றுமையையும் விரும்பும் அனைத்து மக்களையும் வேதனைப்படுத்தி வருகின்றது. அந்தளவிற்கு அந்த மக்களை சித்திர வதை செய்து, துன்புறுத்திக் கொலை செய்கின்றனர்.

இன்று மனிதப் படுகொலைகளை அதிகம் மேற்கொள்ளும் நாடாக மியன்மார் காணப்படுவதால், அதனை தடுத்து அந்த நாட்டின் இராணுவத்தினர், ஆட்சியாளர்கள் மீதும் அங்குள்ள இனவாத அமைப்புக்கள் மீதும் உலகநாடுகள் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்றும் பலமான கோரிக்

துன்புறுத்தப்பட்டு கொலை செய்யப்படுவதானது இலங்கை வாழ் முஸ்லிம்கள் இடத்தில் பௌத்த மத செயற்பாடுகள் விடயத்தில் கவலையைத் தோற்றுவித்துள்ளது. இந்த வகையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர்கூட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அவரின் சொந்த மாவட்டமான பொலன்னறுவையில் உள்ள ஒரு விஹாரையில் மியன்மார் அரசு தந்த புத்தர் சிலையை கையளித்துள்ளார்.

உண்மையில் மியன்மார் அரசு மனித நேயமுள்ள ஒரு நாடாக இருந்தால் புத்த தர்மப் போதனைகளுக்கு அப்பால் ஓர் அங்குலம்கூட தீய செயற்பாடுகளில் இறங்கக்கூடாது. ஆனால் புத்த தர்மம் விரும்பாத பஞ்சமா பாதங்களைச் செய்து கொண்டு இலங்கைக்கு புத்தர் சிலைகளை வழங்குவதும், ஏனைய உதவிகளை வழங்குவதும் நியாயமான மனிதாபிமானச் செயற்பாடுகள் அல்ல என்பதே சமாதான விரும்பிகளின் குற்றச்சாட்டுக்களாகும்.

சர்வதேசமும், ஊடகவியலாளர்களும்

மனிதராக இருப்பதும் அந்த மக்களுக்கு மட்டுமல்லாது உலவாழ் முஸ்லிம்களுக்கும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இலங்கையின் தற்போதைய தேசிய நல்லிணக்க ஆட்சிக்கும், ஜனாதிபதியின் வெற்றிக்கும் பாரியளவு பங்களிப்புச் செய்தவர்களாக முஸ்லிம்களும் இருப்பதால், இந்த நாட்டில் இனவாதத்தை இல்லாதொழிக்க குரல் கொடுக்கும் ஜனாதிபதி இந்த நாட்டு முஸ்லிம்கள் சார்பாக மியன்மார் ரோஹிங்கிய முஸ்லிம்களின் படுகொலைகளை நிறுத்துமாறு குரல் கொடுத்து பௌத்த தர்மத்தின் நற்பண்புகளை காப்பாற்ற வேண்டும் என இலங்கைவாழ் முஸ்லிம்கள் எதிர்பார்க்கின்றனர்.

---

# நபிகளார் காட்டித்தந்த அந்நிய சமூகத்துடனான சகவாழ்வு

இ.ச.நிஜாம் செரீப்
கொழும்பு - 12

ஆடு மேய்க்க சென்ற போது தூய வெள்ளையாடை அணிந்த இருவர் வந்து, நபி முஹம்மது (ஸல்) அவர்களை படுக்கவைத்து, (ஸல்) அவர்களின் மார்பை பிளந்து 'முஹர் நுபுவத்தை' பதித்துவிட்டு சென்றனர். அரபு நாட்டில் தமது பிள்ளைகள், போஷனை பெற்றுக்கொள்வதற்கு பாலூட்டும் தாய்மார்களிடம் ஒப்படைப்பது வழமையாக விருந்தது.

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பாலூட்டுவதற்கு ஹலீமா அம்மையாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்கள். 'முஹர் நுபுவத்தை' மலக்குகள் பதித்ததை தமது பிள்ளை மூலம் அறிந்துக் கொண்ட ஹலீமா பிராட்டியார், பெருமானார் (ஸல்) அவர்களுக்கு நான்கு வயதான போது மீண்டும் பெருமானார் (ஸல்) அவர்களின் தாயாரான ஆமினா அம்மையாரிடம் ஒப்படைத்துவிட்டார்கள்.

ஹலீமா பிராட்டியாரின் பால்குடிப் பிள்ளை குடிக்கும் பால்மடியில் முஹம்மத் (ஸல்) அவர்கள் பால் குடிக்க மாட்டார்கள். சின்னக் குழந்தையான முஹம்மத் (ஸல்) அவர்கள் அந்நிய சமூகத்தவர்களின் சக நண்பருக்கு சகவாழ்வை நான்கு வயதாகும்போது முஹம்மத் (ஸல்) அவர்கள் காட்டித் தந்தார்கள்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் நபிப் பட்டம் பெற்றதன் பின்பு ஹலீமா அம்மையார், பெருமானார் (ஸல்) அவர்களைக் காணவந்தபோது எழுந்து நின்று மரியாதை செய்து, தாம் போர்த்தியிருந்த போர்வையை விரித்து அதில் இருக்க வைத்து மரியாதை செய்ததன் மூலம் அந்நிய சமூகத்தவருக்கான சகவாழ்வை உலகறிய செய்தார்கள்.

உம்மு அய்மன் என்ற பெண்ணுடன் மதீனா சென்ற ஆமினா அம்மையார் 'அப்வாஹ்' என்ற இடத்தில் 30 வயதில் காலமானபோது பெருமானார் (ஸல்) தந்தை, தாயற்ற அநாதையாக்கப்பட்டார்கள்.

கொடிய பஞ்சம் ஏற்பட்டபோது பெருமானார் (ஸல்) அவர்களை அபூதாலிப், மைதானத்துக்குக் கூட்டிச் சென்று குழந்தையான அவரை பிரார்த்தனை செய்யுமாறு கேட்டபோது, அந்நிய சமூகத்துக்காக மழை வேண்டி பிரார்த்தித்த போது மழை பெய்தது. பஞ்சம் நீங்கியது.

அன்று குறைஷி



கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள் எல்லாரும் சிலை வணங்கிகளாகவிருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் சிறுவயதிலேயே அந்நிய சமூகத்தவர்களுக்கான சகவாழ்வை அளிப்பதற்கு ஆரம்பித்துவிட்டார்கள். இது அல்லாஹ்வின் அற்புத செயலாகும்.

'மனிதன் மேலான காரியங்களைச் செய்வதற்காகப் படைக்கப்பட்டான். கேவலம் விளையாட்டில் ஈடுபடுவதற்குப் படைக்கப்படவில்லை' விக்கிரக வணக்கத்தை மறுத்த பெருமானார் (ஸல்) அவர்கள், விக்கிரகத்துக்கு பலியிட்ட மிருகங்களின் மாமிசத்தைக் கூட சாப்பிடவில்லை.

அந்நியருக்கு சகவாழ்வு அளிப்பதற்காக 'முஹம்மத் கடைக்குப் போகிறார். உங்களுக்குத் தேவையான சாமான்களை சொன்னால் வாங்கிவருவார்' என்று சொல்லி மற்றவர்களுக்கும் சமவாய்ப்பை அளித்தார்கள் நபிகளார் முஹம்மத் (ஸல்) அவர்கள்.

ஷாம் தேசத்து 'புஸ்ரா' நகர் 'பஹீரா' கிறிஸ்துவ குரு பெருமானார் (ஸல்) அவர்களின் அங்க இலட்சணங்களைப் பார்த்து 'அரேபியாவின் சூரியன் விக்கிரக ஆராதனை அடியோடு ஒழிந்துவிடும்' என்று அறைகூவினார்.

நபி ஈஸா (அலை) முன்னறிவித்தல் செய்கிறார்கள்: 'கடைசியாக அனுப்பப்படும் முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு யூதர்களால் இடையூறு வராமல் கவனமாய் பார்த்துக் கொள்ளுங்கள்'

'ஹர்புல் பிஜ்ஜார்' அரபி சரித்திரத்தில் 'குறைஷி' வம்சத்தாருக்கும் 'கீஸ்' வத்சத்தாருக்குமிடையே சண்டை ஏற்பட்டபோது முஹம்மது (ஸல்) அவர்கள் அந்நியருக்கு சகவாழ்வு காண்பிப்பதற்காக 'குறைஷி' வம்சத்தில் தாம் பிறந்தாலும் 20 வயதான முஹம்மத் (ஸல்) குறைஷிகள் சார்பாக போரில் ஈடுபடவில்லை.

முஹம்மது (ஸல்) பொருத்தவரையில் 'குறைஷிகளும்' 'கீஸ்' வம்சத்தாரும் சிலை வணங்கிகளே. அதனால் குறைஷி வம்சத்தாருக்குச் சார்பாகப் போரிடவில்லை. 'குறைஷி' வம்சத்தினர் வெற்றி பெற்றார்கள்.

புத்திகூர்மையுள்ள முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது குறைஷி வம்சத்தவருக்கு சார்பாக ஒப்பந்தம் செய்துகொள்ளாமல் அந்நிய சமூகத்தவர்களான 'கீஸ்' வம்சத்தினருக்கு சார்பாக சகவாழ்வு அளிப்பதற்கு பின்வருமாறு உடன்படிக்கை செய்வதற்கு ஆலோசனை வழங்கினார்கள்.

1. துன்மார்க்கம் ஒழிக்கப்பட வேண்டும்.
2. மக்கள் பயமற்று வாழ வேண்டும்
3. பிரயாணம் செய்பவர்களுக்கு வசதி செய்து தரப்பட வேண்டும்.
4. ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும்.
5. துன்பப்படுத்துபவரைத் தண்டித்து துன்பப்படுகிறவருக்கு பரிகாரம் செய்துகொடுங்கள்.

முஹம்மத் (ஸல்) 'அஸ்ஸாதிக்' (உண்மையாளர்) அல் அமீன் (நம்பிக்கையாளர்) என்று அழைக்கப்பட்டார்கள்.

அவருக்கு 35 வயதான போது 'கஃபா' புதுப்பிக்கப்பட்டது. எல்லாக் கோத்திரத்தினருக்கும் சகவாழ்வு அளிக்கப்பட வேண்டும் என்ற சமாதான நோக்கமாக, வானத்திலிருந்து இறக்கப்பட்ட 'ஹஜருல் அஸ்வத்' கல் முதலாவதாக கஃபா பக்கமாக முதன் முதலில் வருபவர்களின் கைகளினால் வைக்கப்பட வேண்டுமென்று கஃபத்துல்லாவை புதுப்பித்தவர்கள் தீர்மானித்திருந்தார்கள்.

அன்று காலை முதன் முதலாக முஹம்மத் (ஸல்) அவர்கள் கஃபாவின் பக்கமாக வந்தார்கள். குறைஷிகள் 'ஹஜருல் அஸ்வத்' கல்லை அவர்களின் கைகளினால் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

கோத்திரங்களுக்கிடையே மனஸ்தாபம் வரக்கூடாது என்பதற்காக ஒரு துணியில் 'ஹஜருல் அஸ்வத்' கல்லை வைத்து எல்லாக் கோத்திரத்தினரும் அத்துணியைத் தூக்கி கல்லை உயர்த்திவைக்க நபியின் கைகளினால் 'ஹஜருல் அஸ்வத்' கல்லை கஃபத்துல்லாவில் பதித்தார்கள். அந்நியருக்கான சகவாழ்வு சரியான அளவில் அங்கு பேணப்படுகிறது.

கோடிக் கணக்கான ஹஜ்ஜாஜிகளும் உம்றா செய்கிறவர்களும் உலகக் கோடிகளிலிருந்து வந்து 'ஹஜருல் அஸ்வத்' கல்லை முத்தமிடுகிறார்கள். அக்கல் பிறைவடிவில் தேய்ந்து குழி விழுந்திருப்பது உலக அதிசயங்களில் ஒன்றாகும்.

ஏற்கனவே இரண்டு திருமணங்கள் செய்திருந்த, பணக்கார பிராட்டியரான 'தாஹிரா' (சுத்தமானவர்) என்ற பெயர் பெற்ற கதீஜா நாயகி அவர்களை, தமது 25ஆம் வயதில் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள் அப்போது கதீஜா நாயகி அவர்களுக்கு வயது 40. இச் செயற்பாட்டினூடாக மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள்.

(திங்கள் தொடரும்)

# கரைவாகு வட்டை பிரதேசத்தில் 200 ஏக்கரில் அரச அலுவலகங்கள்

## விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் ஹரீஸ்



(அகமட் எஸ். முகைடீன்)

கல்முனை மாநகர பிரதேசம் சனத்தொகை அடர்த்தி கொண்ட நெருக்கடியான பிரதேசமாகக் காணப்படுவதனால் இப்பிரதேசத்தில் அரச அலுவலகங்களை அமைப்பதற்கான காணிகளை பெறுவது சாத்தியமற்றமையினால் கரைவாகு வட்டைப் பிரதேசத்தில் முதற் கட்டமாக 200 ஏக்கர் காணிகளை சுவீகரித்து அப்பிரதேசத்தில் அரச அலுவலகங்கள், பொதுமக்களின் பாவனைக்கான கட்டடங்கள், வர்த்தக கட்டட தொகுதிகள் என்பவற்றை நகர திட்டமிடல் அமைச்சினால் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சரும் கல்முனைத் தொகுதி ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தலைமையில் கல்முனை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரதி அமைச்சர் ஹரீஸ் இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் வழிகாட்டுதலில் நல்லாட்சி அரசு இவ்வாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக பெருமளவான நிதியினை ஒதுக்கீடு செய்திருக்கின்றது.

இதற்கமைவாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவரும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுடைய வேண்டுகோளின் பிரகாரம் கல்முனை மற்றும் சம்மாந்துறை நகர அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மேற்குறித்த அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்கும்வகையில் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் அமைச்சில் உயர்மட்டக் கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது. இதன்போது பல தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. அந்தவகையில் கல்முனை மாநகர பிரதேசத்தின் சகல பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்வதற்கும், கல்முனை மாநகர பிரதேசம் சனத்தொகை அடர்த்தி கொண்ட நெருக்கடியான பிரதேசமாக காணப்படுவதனால் இப்பிரதேசத்தில் அரச அலுவலகங்களை அமைப்பதற்கான காணிகளை பெறுவதற்கான சாத்தியம் இல்லாமையினால் கரைவாகு வட்டைப் பிரதேசத்தில் முதற் கட்டமாக 200 ஏக்கர் காணிகளை சுவீகரித்து அப்பிரதேசத்தில் அரச அலுவலகங்கள், பொதுமக்களின் பாவனைக்கான கட்டடங்கள், வர்த்தக கட்டட தொகுதிகள் என்பவற்றை அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு கல்முனை புதிய நகர அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் பாரிய வீடமைப்பு கட்டடத் தொகுதியை உருவாக்கி அங்கு குடியேற்றம் செய்யப்போவதாக உண்மைக்குப் புறம்பான தகவல்கள் பரப்பப்பட்டதனால் மக்கள் குழப்பமடைந்திருந்தனர். கல்முனை நகர அபிவிருத்தியில் வீடமைப்பு சம்பந்தமாக எந்தச் சந்தர்ப்பத்திலும் பிராஸ்தாபிக்கப்பட்டது கிடையாது. கல்முனை பிரதேசமானது சகல சமூகத்தவர்களும் வாழ்கின்ற பிரதேசம் என்பதனால் குறித்த ஒரு சமூகத்தை பாதிக்கும் வகையில் எமது அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியாது.

அந்தவகையில் சகல மதங்களையும் சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு அதன் ஊடாக குறித்த அபிவிருத்தி திட்டத்தில் என்னென்ன விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் ஆலோசனை பெறப்பட்டே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும். எனவே இவ்வபிவிருத்தி திட்டத்தை மக்கள் சந்தேகக் கண்கொண்டு நோக்க வேண்டிய அவசியம் இல்லை.

தற்போதைய அரசு முன்னெடுக்கின்ற அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் பாரிய அபிவிருத்தி திட்டங்களாக இருக்கின்றன. தற்கால நவீன உலக போக்குக்கு ஏற்ப செயற்படக் கூடிய சாதுரியமான தலைமையாக பிரதமர் இருப்பதனால் பாரிய கொழும்பு அபிவிருத்தி திட்டம் மற்றும் கண்டி, திருகோணமலை, ஹம்பாந்தோட்டை என பல வலயங்களை உருவாக்கி அபிவிருத்தி செய்யப்படுகின்றது. அந்தவகையில் கிழக்கு மாகாணத்தின் கேந்திர வர்த்தக மையமாக காணப்படும் கல்முனையினையும் இக்கட்டமைப்புக்குள் பிரதமர் உள்வாங்கி பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தை பிரகடனப்படுத்தியுள்ளார்.

எனவே இது தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தி வீண் சந்தேகங்களை இல்லாமல் செய்து கல்முனை நகர அபிவிருத்தியினை மிகவேகமாக முன்னெடுப்பதற்கு அனைவரும் தம்மாலான பங்களிப்புகளை செய்ய முன்வர வேண்டும்.

மேலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் கிராமசேவகர் பிரிவுகளுக்கு வழங்கப்படும் நிதி கடந்த வருடம் வழங்கப்படவில்லை. இதனை குறித்த அமைச்சின் செயலாளருடன் பேசி இம்முறை ஒரு கிராம சேவகர் பிரிவுக்கு 5 இலட்சம் ரூபா அடிப்படையில் நிதி கிடைக்கப் பெற்றுள்ளது. இந்நிதி மூலம் சகல கிராம சேவகர் பிரிவுகளும் உச்ச பயனை அடையச் செய்ய வேண்டும்.

அந்தவகையில் அத்தியாவசியமான சில உட்கட்டமைப்பு பணிகளை இதன் மூலம் மேற்கொள்ளலாம். வடிகான் இல்லாத குறுக்கு வீதி பிரதேசங்களில் வடிகான்களை அமைத்தல் மற்றும் நான்கு கிராம சேவகர் பிரிவுகளை இணைத்து ஒரு சந்தைக் கட்டடம் அமைத்தல் போன்ற வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியும். எனவே குறுக்கு வீதிகளில் வடிகான் அமைப்பதன் மூலம் வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்த முடியும் என உணரப்பட்டால் அப்பிரதேசம் தொடர்பிலும் மேற்குறிப்பிட்டவாறு சந்தைக் கட்டடம் அமைப்பதற்கான பொது இடவசதி காணப்படுவதோடு அத்தேவை உணரப்பட்டால் அது தொடர்பிலும் எழுத்தும் மூலம் பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தினால் அவை தொடர்பான இறுதி முடிவுகளை எம்மால் மேற்கொள்ள முடியும் - என்றார்.

## சிறையிலிருந்தவருக்கு சிகரட் கொடுத்த நபர் கைது

(இக்பால் அலி)

கண்டி பொலிஸ் நிலையத்தில் அமைந்துள்ள சிறைக் கூடத்தில் அடைத்து வைத்துள்ள சந்தேக நபரை பார்வையிட வந்த நபர் ஒருவர் அச் சிறை கூடத்திலுள்ளவருக்கு சிகரட் வாங்கி கொடுத்தார் என்ற வகையில் (30) திங்களன்று கண்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மூன்று சிகரட்டுக்களும் மற்றும் தீப்பெட்டியும் வாங்கி கொடுத்தார். இதன் போது பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தச் சிறை கூடத்திற்கு வருபவர்கள் கூடுதலான புகைப் பழக்கத்திற்கு உட்பட்டவர்கள் வருகை தருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கண்டி பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் நிலையத்தின அதிகாரி உபாலி நாரம்பனாவின் வேண்டுகோளின் பிரகாரம் சந்தேக நபர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கல்முனை சாஹிராவில் சுதந்திர தின நிகழ்வு

( எம்.ஐ.எம்.அஸ்ஹர்)

இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினத்தையொட்டி கல்முனை ஸாஹிரா தேசியக்கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை பல நிகழ்வுகள் கல்லூரி அதிபர் பீ.எம்.எம்.பதுறுதீன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

கல்லூரியின் ஒழுக்காற்று சபை ஒழுங்கு செய்துள்ள மேற்படி நிகழ்வில் தேசியக் கொடி வைக்கப்படுவதுடன் கடற்படையினரின் மரியாதை அணி வகுப்பு சாரணர் மாணவர்களின் செயற்பாடுகள் மற்றும் கல்லூரி வளாகத்தினுள் மரக்கன்றுகள் நாட்டி வைத்தல் போன்றவை நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக கல்லூரியின் ஒழுக்காற்று சபைத் தலைவர் யு. எல். எம். இப்றாஹிம் தெரிவித்தார்.




மேல் மாகாண சபையின் கம்பஹா மாவட்ட ஆளும்கட்சி உறுப்பினர் எம்.எஸ்.எம்.சகாவுல்லாவின் நிதியொதுக்கீட்டில் மல்வான அல்முபாறக் ஆரம்ப பாடசாலைக்கு டுப்ளோ இயந்திரமொன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இந்த டுப்ளோ மெசின் கையளிப்பு தொடர்பான நிகழ்வு அதிபர் எஸ்.எல்.எம்.ஜெஸீம் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. மாகாணசபை உறுப்பினர் சகாவுல்லா நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு டுப்ளோ மெசினை அதிபர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களிடம் கையளித்தார். பெற்றோர்கள் மற்றும் பிரமுகர்கள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். மேல்மாகாண சபை உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து சுமார் நாலரை இலட்ச ரூபா இந்த வேலைத்திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. (எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

ஜெருஸலத்தில் அமெரிக்க தூதரகம்;

## அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனம் கண்டனம்

முஸ்லிம்களின் புனித பூமியான ஜெருஸலத்தில் அமெரிக்கா தனது தூதரகத்தை ஸ்தாபிப்பது சம்பந்தமாக அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கான அமெரிக்க தூதுவராலயத்தை ஜெருஸலத்துக்கு மாற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சி பற்றி அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் தேசிய தலைவர் கலாநிதி பீ.எம். பாரூக் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் செல்லப் பிள்ளையான இஸ்ரேல் ஐ. நா. சபை தீர்மானங்களையும் சர்வதேச வேண்டுகோள்களையும் பொருட்படுத்தாது பலஸ்தீனத்தில் தான்தோன் றித்தனமாக நடந்து வருகிறது.

பலஸ்தீனத்தில் நாளாந்தம் குண்டுகளை சரமாறியாகப் பொழிந்து பலஸ்தீன் அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பதிலும் பலஸ்தீனத்தை சின்னா பின்னப்படுத்துவதிலும் ஈடுபட்டு வரும் இஸ்ரேலின் அட்டகாசங்கள் ஓய்ந்தபாடில்லை.

இந்நிலையில் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ட்ரம்ப்பின் பதவியேற்பு இஸ்ரேலின் அடாவடித்தனங்களுக்கு புது மெருகூட்டியுள்ளது. முஸ்லிம்களின் புனித தலமாகக் கருதப்படும் ஜெருஸலத்திக்கு அமெரிக்காவின் தூதுவராலயத்தை மாற்றுவதற்கு ட்ரம்ப் எடுத்திருக்கும் முடிவு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இது பலஸ்தீனத்தை மேலும் சின்னா பின்னப்படுத்தி இஸ்ரேலின் எல்லையை விஸ்தரிப்பதற்கு எடுக்கும் சதி முயற்சியாகும். இதனையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஆதலால் அமெரிக்கா தனது தூதுவராலயத்தை ஜெருஸலத்திற்கு மாற்றும் திட்டத்தையும், ஜெருஸலத்தில் நிர்மாணிக்கப் போகும் வீட்டுத் திட்டத்தையும் கைவிட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# மாணவர்களுக்கு வழிகாட்டுவதன் மூலம் பன்முக ஆளுமையாளர்களை உருவாக்கலாம்

## - கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி







(பேருவளை பீ.எம்.முக்தார்)

ஆசிரியர்கள் மாணவர்களிடையே மறைந்து கிடக்கும் ஆற்றல்களை நன்கு மதிப்பீடு செய்து அவர்களுக்கு சிறப்பாக வழிகாட்டுவதன் மூலமாக அவர்களை பன்முக ஆளுமையுள்ளவர்களாக உருவாக்க முடியும். மாணவர்களின் திறன், அறிவு, மனப்பான்மை விருத்திக்கு ஆசிரியர் சமூகத்தின் காத்திரமான பங்களிப்பு மிக அவசியமாகும். ஒவ்வொரு மாணவனுக்கும் ஏதாவது துறையில் திறமை மறைந்திருக்கும். அதை வெளிக்கொணர வழிகாட்டுவது ஆசிரியர்களின் கடமையாகும் என பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீடப் பணிப்பாளர் கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி தெரிவித்தார்.

தர்காநகர் அல் - ஹம்ரா மகா வித்தியாலய அரசினர் விடுதியில் 1965 - 1970 காலப் பகுதியில் தங்கி கல்வி கற்ற பழைய மாணவர் அமைப்பின் ஒன்றுகூடலும் மேற்படி வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போது கலாநிதி சுக்ரி இவ்வாறு கூறினார்.

அமைப்பின் தலைவர் எம்.பஸ்ஹுல் ஹக் தலைமையில் மூன்று அமர்வுகளாக நடைபெற்ற நிகழ்வின் முதலாவது அமர்வில் பழைய மாணவர்களான கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி, கலாநிதி எம்.இஸட். எம்.மல்ஹருத்தீன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

களுத்துறை மாவட்ட இணைத் தலைவர் ஏ.எஸ்.எம்.பௌசி வரவேற்புரை நிகழ்த்தினார்.

தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரியிலிருந்து கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள மாணவி எம்.ஐ.பாத்திமா இஷ்பாவுக்கு இதன்போது புலமைப் பரிசிலும் வழங்கப்பட்டது. டாக்டர் ஏ.எப்.ஏ.பௌஸான் அதனை மாணவியிடம் கையளித்தார்.

தர்கா நகர் அல் - ஹம்ரா மகா வித்தியாலய நூல் நிலைய அபிவிருத்திக்கும் மேற்படி பழைய மாணவர் அமைப்பு ஒரு இலட்சம் ரூபாவை வழங்க முன்வந்துள்ளதுடன் அதற்கான ஆவணமும் அதிபர் எம்.எப். எம்.நழ்ரியிடம் கையளிக்கப்பட்டது.

கவிஞர் திக்வல்லை கமால் கவிபாடினார். காலியைச் சேர்ந்த பௌஸுல் நியாஸ் தமது விடுதி வாழ்க்கையின் அனுபவங்களை இங்கு பகிர்ந்து கொண்டார்.

முன்னாள் அதிபர் எம்.முஜிபுதீன், அமைப்பின் செயலாளர் எம்.எம்.எம்.றில்வான், அதிபர் எம்.எப்.எம்.நழ்ரி, பேருவளை பிரதேச சபை முன்னாள் தலைவர் ஏ.ஆர். எம்.பதியுத்தீன் ஆகியோரும் இங்கு உரையாற்றினர்.

கலாநிதி சுக்ரி மேலும் கூறியதாவது, தர்கா நகர் அல்-ஹம்ரா மகா வித்தியாலயம் நாட்டுக்கும், சமூகத்திற்கும் பல கல்விமான்களை பெற்றுக்கொடுத்த பாடசாலையாகும். இதன் பழைய மாணவன் என்ற வகையில் பெருமிதமடைகிறேன். அன்று இப் பாடசாலையில் கல்வி போதித்த ஆசிரியர்கள் மாணவர்களின் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை தேடி மதிப்பீடு செய்து அதற்கான பயிற்சிகளை தந்தார்கள். இதில் ஹரீஸ் ஆசிரியரின் பங்களிப்பு அளப்பரியதாகும். 50 வருடங்களுக்கு முன் எமக்கு கல்வி போதித்த ஆசிரியர்கள் தமது பணியை தியாகத்துடன் செய்தார்கள். அந்த ஆசிரியர்களின் சிறந்த பணியை ஐந்து தசாப்தங்கள் கடந்தும் கூட நாம் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

அதிபர் மர்ஹூம் பாரி அல் - ஹம்ராவை சகலதுறைகளிலும் கட்டியெழுப்பினார். அவரின் சிறந்த தலைமைத்துவம் மூலம் இப் பாடசாலையின் பெயர் புகழடைந்தது.

கிறிஸ்தவப் பாடசாலைகளில் இது போன்ற பழைய மாணவர் அமைப்பு நிறைய காணப்பட்டாலும் முஸ்லிம் பாடசாலைகளில் இந்த மரபு மிகக் குறைவாகும் இந்த மாணவர் அமைப்பை முஸ்லிம் பாடசாலைகள் முன்மாதிரியாக கொண்டு தமது பாடசாலைகளிலும் இவ்வாறான அமைப்புகளை ஸ்தாபித்து கல்விச் செயற்பாடுகளுக்கு கைகொடுக்க முன்வர வேண்டும் என்றார்.

கலாநிதி எம்.இஸட்.மல்ஹருத்தீன் பேசும் போது தர்கா நகர் அல் ஹம்ரா தந்த பயிற்சிகள் என் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு கைகொடுத்தது. கல்வியுடன், ஆன்மீகப் பயிற்சி, நல்லொழுக்க வழிகாட்டல் ஆகியவற்றை விடுதி வாழ்க்கையில் பெற்றுக் கொண்டேன். அன்று எமக்கு நல்வழி காட்டிய அதிபர், ஆசிரியர்களை என்றும் மறக்க முடியாது. அரசினர் விடுதியில் கல்வி கற்க 60 மாணவர்களை தேடி இவ்வாறான பழைய மாணவர் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளமையைப் பாராட்ட வேண்டும் என்றார் ஏ.ஐ.எம்.ஹாரிஸ் நன்றியுரை வழங்கினார்.

இரண்டாம் அமர்வின் போது எஸ்.எம். எஸ்.ஹமீஸ் உடையாரினால் ஒழுங்குபடுத்தப்பட்ட சங்கத்தின் இணையத்தளத்தை தலைவர் எம்.பஸ்ஹுல் ஹக் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

அங்கத்தவர்களின் சுற்றுலா ஒழுங்கு பற்றி அடுத்து ஆராயப்பட்டது. சுற்றுலா ஏற்பாடுகளுக்காக கொட்டராமுல்லை சலீம், குருநாகல் பாருக் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அதனையடுத்து கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. நிகழ்ச்சி முடிவில் கொட்டராமுல்லை சலீம் நன்றியுரையாற்றினார்.

மூன்றாம் அமர்வில் பாடசாலை முன்னாள் அதிபர் எம்.இஸட்.எம்.நயீம் பல ஆலோசனைகளை முன்வைத்தார். பின்னர் தலைவர் எம்.பஸ்ஹுல் ஹக் எழுதிய 'த தட்' என்ற ஆங்கில நூலின் பிரதிகள் அல் - ஹம்ரா ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன. அரசினர் விடுதி அமைந்திருந்த தர்கா நகர் அதிகாரிகொட பகுதிக்கும் உறுப்பினர்கள் விஜயம் செய்தனர். கல்வி அமைச்சின் முஸ்லிம் பிரிவு முன்னாள் பணிப்பாளர் ஏ.எச். எம்.முஹம்மத் தலைமையில் அவர்களுக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

அல் - ஹம்ராவின் எதிர்கால நலன்கள் குறித்து செயலாளர் எம்.எம்.எம்.றில்வான் விசேட கலந்துரையாடலின் போது முன்வைத்தார்.

பழைய மாணவரும் எழுத்தாளரும் கவிஞருமான திக்வல்லை கமால் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார்.

பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.எம்.இஸ்மாயில் உட்பட பலரும் நிகழ்வில் பங்குபற்றினர்.



# மோடி அரசு ஏற்படுத்தியுள்ள பொருளாதாரச் சீரழிவு

*அ. மார்க்ஸ்*

மன்மோகன் சிங்கின் அமெரிக்க ஆதரவு, உலகமயக் கொள்கை, அவர் செய்து கொண்ட அணு ஒப்பந்தம், அணி சேராக் கோட்பாட்டை அவர் பலவீனப்படுத்தியது ஆகியவற்றைக் கடுமையாக விமர்சித்தவர்கள்தாம் நாம். ஆனால் அவரது தனிப்பட்ட நேர்மை, மதச்சார்பின்மை. முதலாளித்துவப் பொருளியலில் அவருக்குள்ள அறிவு மற்றும் அனுபவம் ஆகியவற்றில் எனக்கு நம்பிக்கை உண்டு. 2008 உலகப் பொருளாதார நெருக்கடியின் போது அது இந்தியாவைப் பெரிய அளவில் தாக்காமல் தடுத்ததில் மன்மோகன் சிங்கின் பொருளாதார மேலாண்மைக்கு ஒரு முக்கிய பங்குண்டு.

நாம் என்னென்ன அம்சங்களில் எல்லாம் மன்மோகனை விமர்சிக்கிறோமோ அவற்றில் எல்லாம் அவருக்குப் பின் அந்த நாற்காலியில் அமர நேர்ந்த நரேந்திர மோடி ஆயிரம் மடங்கு படு மோசம் என்பதையும், மன்மோகனின் மேற்குறிப்பிட்ட எந்த நேர்மை மற்றும் திறமையும் அற்ற ஒரு நபர் இவர் என்பதையும் விளக்க வேண்டியதில்லை.

வரவு செலவு திட்ட அறிவிப்பிற்கு முதல்நாள் பாராளுமன்றத்தில் பொருளாதார நிலை குறித்த அறிக்கையை அரசு சமர்ப்பிப்பது வழக்கம். அதற்கு ஒரு நாள் முன்னர், அதாவது நேற்று முன்தினம் (31), டெல்லியில், மன்மோகன் சிங்கும் அவரது அமைச்சரவையில் நிதிப் பொறுப்பை ஏற்றிருந்த ப.சிதம்பரமும், காங்கிரஸ் தலைவர் ராஜீவ் கவ்டாவும் ''பொருளாதாரத்தின் உண்மை நிலவரம் -2017'' எனும் அறிக்கையை அளித்துள்ளனர்.

''இந்தியப் பொருளாதாரம் நல்ல நிலையில் இல்லை'' என்பது இந்த அறிக்கை விரிவான ஆதாரங்களுடன் முன்வைக்கும் கவலைக்குரிய செய்தி. மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள சில முக்கிய அமசங்கள்:

1. இந்த ஆண்டில் இந்திய வளர்ச்சி வீதம் 7.6 சதத்திலிருந்து 6.6 சதமாகக் குறைந்துள்ளதை சர்வதேச நாணய நிதியம்கூட சுட்டிக் காட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

2. 2016 ஜூலை - செப்டம்பர் கால கட்டத்தில் ஏற்பட்டுள்ள வேலை வாய்ப்புக்கள் வெறும் 77,000 தான். அதிலும் 50,000 வேலைகள் அரசுத் துறைகளில் தான் ஏற்பட்டுள்ளன. அதாவது தொழில் துறை வேலை வாய்ப்புகள் படு மோசமாகச் சுருங்கி விட்டன.

3. வங்கிக் கடன் வளர்ச்சி இப்போது வெறும் 5 சதவீதம்தான். சமீபத்திய பல ஆண்டுகளில் இதுவே மிக மிகக் குறைந்த அளவு.

4. வேலை வாய்ப்பு 90 சதவீதம் குறைந்துள்ளது!. காங்கிரஸ் ஆட்சியில் 2010 இல் உருவான வேலை வாய்ப்புக்கள் 11 இலட்சம். 2016 இல் இது வெறும் 1.5 இலட்சமாகச் சுருங்கியுள்ளது.

5. 2011 இல் தொடங்கப்பட்ட 800 தொழில் முயற்சிகள் இப்போது பாதியில் நிறுத்தப்பட்டுள்ளன.

6. ரூபாய் நோட்டுக்கள் மதிப்பிழப்பிற்குப் பின் பெரிய அளவில் டிராக்டர்கள், இரு சக்கர வாகனங்கள் விற்பனை வீழ்ந்துள்ளது.

7. மேற்குறிப்பிட்ட இந்த வீழ்ச்சிகள் இன்னும் சில ஆண்டுகள் தொடரும் என மதிப்பிடப்படுகிறது.

8. சாலைகள் வளர்ச்சி என்பது தினசரி வெறும் ஆறு கிலோ மீற்றர்கள் எனும் அளவு சுருங்கியுள்ளது

பொருளாதார மேலாண்மையில் நம்பிக்கைவாதம் தேவைதான். ஆனால் அவை சமகால யதார்த்தங்களின் அடிப்படையில் அமைய வேண்டும். வெறும் கற்பனையிலும் மிகைப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையிலும் அமைந்தால் அது பேரழிவுக்கே இட்டுச் செல்லும்.

மோடி அரசு அத்தகைய அழிவுப் பாதையில்தான் சென்று கொண்டிருக்கிறது. பொருளாதார மேலாண்மையை அது திறம்படச் செய்வதற்கான எந்தத் தடையங்களையும் காணோம் என்கிறது காங்கிரஸ் அறிக்கை.

எதிர்க்கட்சிகள் அப்படித்தானே சொல்லும் என நாம் இதைப் புறக்கணித்து விட இயலாது. இவர்கள் முன்வைத்துள்ள அடிப்படையான தகவல்கள் ஆதாரபூர்வமானவை என்பது மட்டுமல்ல, இவை அனைத்தையும் நாம் யதார்த்த வாழ்வில் தினசரி சந்தித்துக் கொண்டுள்ளோம். பெரு நிறுவனங்கள் பலவும் தாங்கள் நேர்முகப் பரீட்சை மேற்கொண்டு, வேலைக்குத் தேர்ந்தெடுத்தவர்களையெல்லாம், இன்னும் ஆறு மாதங்களுக்கு புதிய ஆளெடுப்பு இல்லை என அறிவித்திருப்பது நாம் அறியாதது அல்ல.

# சுதந்திரம் அர்த்தமுள்ளதாக மாறுமா?

*ஏ.ஸீ.எம்.ஜிப்ரி, காலி*

2017 பெப்ரவரி 4ஆம் திகதி 69 ஆவது சுதந்திர தினத்தைக் கோலாகலமாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதை நாம் நன்கறிவோம். கொண்டாட்டங்கள் தேசிய மட்டத்திலும், பிராந்திய மட்டத்திலும் நாடு பூராகவும் கொண்டாடப்படும். பள்ளி மாணவர்களின் பங்களிப்பு இக்கொண்டாட்டங்களுக்கு உயிரூட்டும். தம் பிள்ளைகளின் உடற் பயிற்சிக் கண்காட்சி, அணி நடை மற்றும் விளையாட்டுக்களை கண்டு மகிழ்வதற்கு பெற்றோர்களும், அரசியல் தலைவர்களும், பிரமுகர்களும் ஒரு சில மணி நேரம் கூடி மகிழ்ந்து கலைந்து செல்வது தானா சுதந்திரம். இல்லை, அதை அர்த்தமுள்ள சுதந்திரமாக மாற்றுவதற்கு பல தியாகங்கள் செய்ய வேண்டும். அப்போது தான் நாம் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி பிரித்தானிய ஆட்சியாளரிடமிருந்து பெற்ற சுதந்திரம் உயிருள்ள சுதந்திரமாக மாறும்.

நம் நாடு பல இன மக்கள் வாழ்கின்ற நாடாக இருந்த போதிலும் மூவின மக்களும் செறிவாகக் காணப்படுகின்றனர். சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்று பிரித்தறியப்பட்ட போதும் இவர்கள் அனைவரும் இலங்கையர்களே. இனத்தால், மதத்தால், மொழியால் மக்களைப் பிரித்து சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடியாது. நாம் இலங்கையர் என்ற ஓர் அர்த்தமுள்ள சொற்பதத்திற்குள் ஒன்றுபட வேண்டும். அப்போது தான் நாம் சுதந்திர இலங்கையின் பிரஜைகள் ஆவோம். 68 ஆண்டுகளாக நாம் கொண்டாடி மகிழ்ந்தது சுதந்திரமற்ற சுதந்திரமே! 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் வானத்திலிருந்து விழவில்லை. எமது மூதாதையர் குறிப்பாக, சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் ஒன்றாக இணைந்து பெற்றது தான் இந்தச் சுதந்திரம். காலப்போக்கில் இதனை இருட்டடிப்புச் செய்து ஓர் இனம் மட்டும் முழுமையாக அனுபவிக்க முயற்சிப்பது நாட்டின் அமைதியான போக்கை கலைத்துவிட வழிவகுக்கும். இங்கு ஊடகங்களுக்கு பாரிய பொறுப்பு ஒன்று காத்திருக்கிறது. ஒன்றும் அறியாத சின்னஞ் சிறுசுகளுக்கு நாட்டின் வரலாற்றை எளிய மொழியில் ஒரு நாளல்ல, பல நாளல்ல, அடிக்கடி நினைவுபடுத்துவது ஊடகங்களின் தார்மீகப் பொறுப்பு.

இலங்கை சுதந்திரமடைவதற்கு கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு முன்னர் தான் இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்தது. அதன் முன்னேற்றத்தைக் கண்டு நாம் படிப்பினை பெற வேண்டும். இந்தியாவின் பாரிய வளர்ச்சிக்கு காரணம் மக்கள் உள்ளத்தில் நாம் இந்தியர் என்ற உணர்வு வளர்த்து விடப்பட்டதும், கடின உழைப்புமேயாகும். இனம், மதம், மொழியைப் பற்றி இந்தியா பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. இந்தியா நம் நாடு, நாம் இந்தியர் என்ற உணர்வு மட்டும் மக்கள் உள்ளங்களில்



வளர்த்து விடப்பட்டது. நாடு பாரிய வளர்ச்சி கண்டு பிரகாசிக்கிறது.

சுதந்திர இலங்கையின் முதல் பிரதமர் டீ.எஸ்.சேனாநாயக்க முதல் இன்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க வரை 68 ஆண்டுகள் ஆண்டு கொண்டு இருக்கின்றனர். 1970களில் தெற்கில், 1980 களில் வட கிழக்கில் இன, மத, மொழிப் பிரச்சினைகளும், சுய நல அரசியல் போராட்டங்களும் உள்நாட்டுப் போர்களும் நாட்டைக் குட்டிச் சுவராக்கிவிட்ட நிலையில் 2015 ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரியின் அரசியல் வெற்றி, பெரும் அரசியல் கட்சிகள் இரண்டை ஒன்றிணைத்து நல்லாட்சியை அமைத்து நாட்டை வெற்றிப்பாதையில் இட்டுச் செல்ல முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. 2018ஆம் ஆண்டு 70 ஆவது சுதந்திர தினம் அர்த்தமுள்ள சுதந்திர தினமாகக் கொண்டாட வழி பிறக்குமா? காலம் தான் பதில் சொல்ல வேண்டும். 2017 பெப்ரவரி 4ஆம் திகதி சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் வெற்றி பெற வாழ்த்துக்கள்.

## சுயவிமர்சனம்

# சமூக இயங்கியலில் நமது வகிபாகம்

*லறீனா அப்துல்ஹக்*

இஸ்லாமிய இயக்கங்களின் தோற்றம் இடம்பெற்று கிட்டத்தட்ட 60 வருடங்கள் ஆகிவிட்டன. அவற்றின் நீண்ட வரலாற்றுப் பாதையில் அவற்றின் அடைவுகள், தோல்விகள் எல்லாம் கலந்தே இருக்கும் என்பதில் ஐயமில்லை. அவை குறித்துக் காய்தல் உவத்தல் அற்ற விமர்சன ஆய்வுகள் தேவை என்பதிலும் மாற்றுக் கருத்தில்லை.

அதேவேளை, தனிமனிதர்களின் கூட்டே இயக்கம் ஆகும். அந்த இயக்கத்தின் நோக்கம் மிகச் சிறப்பான தனிமனித உருவாக்கமே. அப்படி இயக்கங்களின் பயிற்றுவித்தல்களின் அடியாக உருவான தனி மனிதர்கள் ஊருக்கு உபதேசிகளாக இருக்கும் நிலைக்கு அப்பால், தம்மளவில் தாம் பெற்ற தர்பியத்தைத் தத்தமது சொந்த வாழ்வில் கடைபிடித்து ஒழுக வேண்டும். அப்போதுதான், அவர்கள் கூட்டாக இணைந்து செயற்படும்போது - அது இஸ்லாமிய இயக்கமாயினும், அதற்கு வெளியிலான தனிநபர்களின் கூட்டாக இருப்பினும் - ஓர் ஒழுங்கமைவுடன் கூடிய தூயதும் நேர்த்தியானதுமான இயங்கியல் சாத்தியமாகும்.

தம்மளவில் செயற்படுத்தாத அற விழுமியங்கள் ஊருக்கு மாத்திரம் போதிக்கப்படும் நிலை பரவலாக இருப்பது தான், இன்றைய சமூகத்தின் அறவிழுமியங்கள் உயிர்ப்போடும் காத்திரத்தன்மையோடும் நிலைபெறாமல் செத்தும் தேங்கியும் கிடக்கின்றமைக்கான பிரதான காரணம். அதற்கு தனிப்பட்ட வாழ்வில் போதியளவு ஆன்மீக நடைமுறைகள் கைக்கொள்ளப்படல் வேண்டும்.

இதனை முதலில் சுட்டும்போது, தலைப்புக்குப் பொருத்தம் இல்லாதது போலத் தோன்றலாம். ஆனால், சமூக இயங்கியல் செயற்பாட்டின் வெற்றிக்கு அடிப்படை இந்தத் தனிமனிதர்களின் ஆழமான ஆன்மீக நடைமுறையும் அதனடியாய்ப் பெற்றுக்கொள்ளும் பக்குவமும் உயிர்ப்புச் சக்தியுமே என்பது என் நம்பிக்கை. நபிகளாரின் வாழ்வும் இதனையே நமக்குப் போதிக்கின்றது.

இயக்கங்கள் தமது செயற்பாட்டில் உள்ள குறைகளை (உள்ளிருந்தபடி) தம்மளவில் கண்டு கொள்வது கடினம். வெளியில் இருந்து பார்ப்போரே அதனை சரியாக இனங்காண முடியும் என்பதே இயல்பு. ஆனால், நம் மத்தியில் இரு வேறு எதிர்நிலைகள் காணப்படுவது துரதிருஷ்டவசமானது. ஒன்று இயக்கங்களை விமர்சிப்பதே கூடாது என்ற நிலைப்பாடு. மற்றது, குறைபாடுகளை மட்டுமே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கும் போக்கு. இரண்டுமே எந்தவிதமான சமூகப் பெறுமானமும் தரா.

இயக்கங்கள் விமர்சிக்கப்படக் கூடாது என்பதான குரல்கள் தமக்காகத் தாமே வெட்டிக்கொள்ளும் குழிகளே என்பது தெளிவு. காரணம், காத்திரமான விமர்சனமும் ஆய்வுமே எந்த ஓர் அமைப்பினதும் நீண்டகால வெற்றிக்கான உறுதியான அடித்தளமாக அமைய முடியும். ஆனால், காத்திரமான விமர்சனம் எப்படியானது என்பது குறித்தும் நாம் கூர்ந்து நோக்க வேண்டி உள்ளது.

இயக்கங்களை நோக்கி விரல் சுட்டி, இயக்கங்களின் செயற்பாட்டுத் திறனின்மை குறித்து சதா சர்வ காலமும் விமர்சித்துக் கொண்டிருக்கும் 'புலமையாளர்கள்' அவற்றில் என்னென்ன குறைபாடுகள் காணப்படுகின்றன, அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் யாவை என்பது தொடர்பில் தீர்வு முன்மொழிவுகளையும் பரிந்துரைத்தல் வேண்டும்.



இயக்கங்களில் மாற்றம் வேண்டும் என்று வெறுமனே முழங்காமல், எப்படியான மாற்றம் வேண்டும், அதற்கு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்களுக்குச் சொல்லத் தெரியவேண்டும். குறைபாடுகள் உள்ளன, செயற்திறன் போதாது என்றால், என்னென்ன குறைபாடுகள், அவை ஒவ்வொன்றும் எப்படி மாற்றியமைக்கப்படல் வேண்டும், அவற்றுக்கான படிமுறைகள், வழிவகைகள் யாவை என்றும் முன்மொழிதல் சிறப்பு. அதுவே நமது தேவை.

ஒரு கவிதையிலோ சிறுகதையிலோ இதனைச் செய்துவிட முடியாது. ஆனால், விமர்சனப் பாங்கான பத்தி எழுத்துக்களில் தாம் அது சாத்தியமாகும். அதில் செய்யப்பட வேண்டிய விமர்சனம் சாதக - பாதகங்கள் இரண்டையும் அலசி ஆராய்வதாக, உரிய தீர்வுகள் பற்றிய முன்மொழிவுகளை கொண்டதாக அமைதல் வேண்டும்.

அவ்வாறில்லாமல், அது சரி இல்லை, இது சரியில்லை என்று பொத்தாம் பொதுவாக 'அடிச்சுவிடுவது' கெட்டித்தனமும் இல்லை, அது ஒரு 'புலமைசார்' பங்களிப்பாக அமையப்போவதுமில்லை. மாறாக, ஒரு பருப்புக் கறி எப்படி சமைப்பது என்றுகூடத் தெரியாமல், வீட்டில் உம்மாவோ, சகோதரியோ, மனைவியோ பாடுபட்டுச் சமைத்து வைத்த சாப்பாட்டை வயிறு நிறையத் தின்று தீர்த்துவிட்டு, ''சாப்பாடு டேஸ்ட் இல்லை'' என்று ஒட்டுமொத்தமாக ஒரு தீர்ப்பைச் சொல்லிவிட்டு எழுந்து செல்பவருக்கும் இத்தகைய பொத்தாம் பொதுவான விமர்சகர்களுக்கும் இடையில் எந்த வித்தியாசமும் இல்லை என்பது என்னுடைய மிக மிகத் தாழ்மையான அபிப்பிராயம்.

ஆகவே, இந்தச் சமூகம் என்பதும் அதில் உள்ள இயக்கம் என்பதும் நம்முடையவையும் தாம், அவை தொடர்பில் நமது பொறுப்பும் உள்ளது என்பதை உணர்ந்து அவற்றை வளப்படுத்தி, சீர்படுத்தி மேம்படுத்திக் காத்திரமாக இயங்க வைப்பதற்கு நம்மால் என்ன செய்ய முடியும் என யோசிப்போம் என்னென்ன செய்யப்படல் வேண்டும் என்பதையும் முன்மொழிய முன்வருவோம். இன்றுள்ள தலைமைகள் அவற்றை ஏற்காவிடினும் கூட, செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் அடுத்த தலைமுறையேனும் விழிப்புணர்ச்சி கொள்ளக்கூடும் என்பதில் கவனம் கொள்வோம்.

நமது இஸ்லாமிய இயக்கங்கள் தொடர்பில் இப்போது நமக்குத் தேவை குற்றச்சாட்டுகள் மட்டுமே அல்ல, தீர்வுகளே! அவை தொடர்பிலான ஆலோசனைகளும் முன்மொழிவுகளுமே நமது தேவை!

★★★

# ஈரான் ஏவுகணை சோதனை: தடையை மீறிய செயலா?

## கூடுகிறது ஐ.நா. பாதுகாப்பு சபை



ஈரான் ஏவுகணை சோதனை விவகாரம் குறித்து விவாதிக்க ஐ.நா. பாதுகாப்பு சபை அவசரமாக கூடுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈரான் கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து சென்று தாக்கும் வல்லமை படைத்த ஏவுகணைகளை சோதித்து பார்க்க ஐ.நா. பாதுகாப்பு சபை தடை விதித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்நிலையில் அந்த நாடு, நடுத்தர ரக ஏவுகணை ஒன்றை 29ஆம் திகதி ஏவி சோதித்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதுபற்றி அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மார்க் டோனர் கருத்து தெரிவிக்கையில்,

''ஈரான் நடத்தியுள்ள ஏவுகணை சோதனை, ஐ.நா. பாதுகாப்பு சபைத் தீர்மானத்தை மீறிய நடவடிக்கையா என்பது குறித்து அமெரிக்கா ஆராய்ந்து வருகிறது. ஐ.நா. தீர்மானத்தை மீறி நடவடிக்கைகள் எடுக்கிறபோது அல்லது தீர்மானத்துக்கு ஒவ்வாத செயல்களில் ஈடுபடுகிறபோது, ஈரான் அதற்கு பொறுப்பேற்க கூறி நடவடிக்கை எடுப்போம். மற்ற நாடுகளும் இதை செய்யும்'' என தெரிவித்தார்.

ஈரான் ஏவுகணை சோதனை தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு சபை அவசரமாக கூடி விவாதிக்க வேண்டும் என இஸ்ரேல் தூதுவர் டேனி டேனான் வலியுறுத்தியுள்ளார்.

இதையடுத்து ஐ.நா. பாதுகாப்பு சபை கூட்டத்தை கூட்ட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி உள்ளதாகவும், அதன்பேரில் ஈரான் விவகாரம் குறித்து விவாதிக்க ஐ.நா. பாதுகாப்பு சபை அவசரமாக கூடுவதாகவும் கடைசியாக வெளியான தகவல்கள் கூறுகின்றன.

# தடை விதித்தாலும் தாக்குதல் தொடரும்

## டிரம்புக்கு ஐ.எஸ். மிரட்டல்





''வெளியிலிருந்து யாரும் வராவிட்டாலும், உள்ளே இருக்கும் அமெரிக்கர்களை கொண்டே அமெரிக்காவை தாக்குவோம்'' என டொனால்ட் டிரம்புக்கு, ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தினர் பதிலடி கொடுத்துள்ளனர்.

அமெரிக்காவின் 45ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள டிரம்ப் அதிரடி நடவடிக்கையாக எந்தவொரு நாட்டிலிருந்தும் அகதிகள் அமெரிக்காவுக்குள் வர 4 மாத கால தடை உத்தரவை பிறப்பித்தார்.

மேலும், உள்நாட்டுப் போரில் சின்னாபின்னமாகி விட்ட சிரியாவிலிருந்து அகதிகள் அமெரிக்காவுக்கு வர காலவரையற்ற தடை விதித்த டிரம்ப், ஈராக், சிரியா, ஈரான், லிபியா, சோமாலியா, சூடான், யெமன் ஆகிய 7 நாடுகளை சேர்ந்தவர்களுக்கு விசா வழங்குவதை 3 மாதங்களுக்கு நிறுத்தி வைத்து உத்தரவிட்டார்.

டிரம்பின் அதிரடி உத்தரவுகள் அமெரிக்க மக்கள், உலக நாடுகள் மத்தியிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளன. டிரம்பின் நடவடிக்கைக்கு பல நாடுகளின் தலைவர்களும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், டிரம்புக்கு பதிலடி கொடுக்கும் விதமாக ஐ.எஸ் இயக்கத்தை சேர்ந்தவர்கள் 'டெலிகிராம்' எனும் தகவல் தொடர்பு செயலி வழியே கருத்துக்களை தெரிவித்துள்ளனர். அதில்,

''டிரம்பின் உத்தரவுகள் எந்தப் பலனையும் தரப்போவதில்லை, அமெரிக்காவிற்கு வெளியே இருந்து வந்து யாரும் தீவிரவாத தாக்குதல்களை நிகழ்த்தப் போவதில்லை. அமெரிக்காவில் பிறந்த, அமெரிக்காவை பூர்வீகமாக கொண்ட அமெரிக்கர்களை கொண்டு தான் அமெரிக்காவை தாக்குவோம்.

அமெரிக்காவுக்குள் வருவதற்கு முஸ்லிம்களுக்கு தடை விதித்து விட்டு, ஈராக், சிரியா மற்றும் யெமன் நாடுகளில், டிரம்ப் முஸ்லிம்களை கொன்று குவித்து வருகிறார். இது ஐ.எஸ் இயக்கத்தினருக்கு மறைமுகமான சேவை என்பது டிரம்புக்கு தெரியாது. அவரை எதிர்த்து இப்போதே மக்கள் வீதிக்கு வர தொடங்கிவிட்டனர். கடவுளின் விருப்பப்படி அமெரிக்காவை அவர் கீழ் நோக்கி இழுத்துச் செல்வார் என்பதில் சந்தேகமில்லை என அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# ஏழரை மில்லியன் குழந்தைகள் ஊட்டச்சத்தின்மையால் பாதிப்பு



உலகளவில் ஏழரை மில்லியன் குழந்தைகளுக்கு மேலானோர் இவ் ஆண்டு ஊட்டச்சத்து இல்லாமல் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என்று ஐக்கிய நாடுகள் அவையின் குழந்தைகளுக்கான நிறுவனமான யுனிசெப் தெரிவித்துள்ளது.

சிரியா, நைஜீரியா மற்றும் யெமன் உட்பட பிற மனிதநேய நெருக்கடிகள் நடைபெறும் நாடுகளிலுமுள்ள சுமார் 48 மில்லியன் குழந்தைகளுக்கு உதவ 3.3 பில்லியன் டொலர் தேவைப்படுவதாக இந்த நிறுவனம் கோரியுள்ளது. சுத்தமான குடிநீர் மற்றும் தட்டம்மை தடுப்பூசி, அடிப்படை பராமரிப்பு மற்றும் கல்விக்காகவும் இந்த நிதிகள் பயன்படுத்தப்படும். ஆறு வருடங்களுக்கு மேலாக போர் நடைபெற்று வரும் சிரியாவில், இந்த நிதியில் மூன்றில் ஒரு பங்கு பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## உலகச் செய்திகள்



# அமெரிக்காவில் எச்1பி விசா கட்டுப்பாட்டு மசோதா தாக்கல்




அமெரிக்க பாராளுமன்றத்தில் எச்1பி விசா கட்டுப்பாட்டு மசோதா நேற்றுமுன்தினம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் சில முன்னணி நிறுவனங்கள் சிக்கன நடவடிக்கைக்காகவும், செலவை குறைக்கும் வகையிலும் அமெரிக்க ஊழியர்களை அனுப்பிவிட்டு, எச்1பி விசா நடைமுறைகள் மூலம் வெளிநாட்டு ஊழியர்களை குறைந்த சம்பளத்தில் பணியமர்த்தியுள்ளன. இதனை கட்டுப்படுத்தும் வகையில், வெளிநாட்டு தகவல் தொழில்நுட்ப ஊழியர்களின் வர்த்தகத்தை தீர்மானிக்கும், எச்1பி விசா சீர்திருத்த மசோதா நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மசோதாவின்படி, எச்1பி விசா ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஆண்டு சம்பளம் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் டொலர்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, அமெரிக்க ஊழியர்களை அனுப்பிவிட்டு, வெளிநாட்டு ஊழியர்களை குறிப்பாக இந்திய ஊழியர்களை பணியமர்த்துவது நிறுவனங்களுக்கு கடினமாகும். இதற்கு முன்பு குறைந்தபட்ச ஆண்டு சம்பளம் 60 ஆயிரம் டொலர்களாக இருந்தது.

எச்1பி விசா முறைகேடுகளை ஒழித்து அமெரிக்க பணியாளர்களை காப்பதுடன், திறமையான வெளிநாட்டுப் பணியாளர்களை நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ளவும் அவர்களுக்கு விசா கிடைப்பதையும் இந்த மசோதா உறுதி செய்வதாக அரசு தெரிவித்துள்ளது.

ஆனால், அமெரிக்கர்களுக்கு வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள இந்த மசோதாவினால், வெளிநாட்டினருக்கு வேலைவாய்ப்பு வெகுவாக குறையும். குறிப்பாக இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் அதன் ஊழியர்களுக்கு கடும் பாதிப்பு உண்டாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டதும் இதன் தாக்கம் இந்திய பங்குச்சந்தைகளில் எதிரொலித்தது. பங்குச் சந்தைகளில் ஐ.டி. பங்குகளின் விலை வீழ்ச்சியடைந்து வருகின்றன.

மேலும் கல்வி நிமித்தம் அமெரிக்காவுக்குச் செல்லும் மாணவர் சமூகமும் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளது.



காஷ்மீர் சட்டசபையில் நேற்று நடைபெற்ற பட்ஜெட் கூட்டத்தொடரின்போது ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் மோதலால் அமளி ஏற்பட்டது. இதில் சபை காவலர் ஒருவர் படுகாயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் மூத்த தலைவர் இ.அகமது மறைவு

## ஜனாதிபதி - பிரதமர் இரங்கல்; கூட்டதொடரை ஒத்திவைக்கக் கோரி அமளி; பாராளுமன்று வெள்ளிக்கு ஒத்திவைப்பு

(திருச்சி சாஹுல் ஹமீது)



இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மூத்த தலைவரும், கேரள மாநிலம், மல்லபுரம் மக்களவைத் தொகுதியின் உறுப்பினருமான இ.அஹமது காலமானார்.

அன்னாரின் மறைவையொட்டி இந்திய குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜி, பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர். அத்தோடு முக்கிய அரசியல் கட்சிகளில் ஒன்றான பொப்பியூலர் ப்ரொண்ட் ஒப் இந்தியா உள்ளிட்ட பல கட்சிகள் தமது இரங்கலைத் தெரிவித்துள்ளன.

அதுமட்டுமன்றி நேற்றைய பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின்போது அஹமது மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. அப்போது உறுப்பினர்கள் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர். அப்போது அவையை ஒத்திவைக்க வலியுறுத்தி காங்கிரஸ் உறுப்பினர்கள் கோஷமெழுப்பியதால் அவையில் சலசலப்பு ஏற்பட்டது.

அவர்களை சபாநாயகர் சுமித்ரா மகாஜன் சமாதானம் செய்து, பட்ஜெட்டை நிர்ணயிக்கப்பட்ட தேதியில் தாக்கல் செய்வது அரசியலமைப்பு கடமை என்று தெரிவித்ததோடு இரங்கல் தெரிவிக்கும் வகையில் அவை ஒத்திவைக்கப்படும் எனத் தெரிவித்தார். அந்தவகையில் உறுப்பினர் அஹமதுவின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் பாராளுமன்றம் வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் (செவ்வாய்க்கிழமை) மயங்கி விழுந்த மக்களவை எம்.பி. இ.அஹமது மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி தனது 78ஆவது வயதில் காலமானார்.

பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கிய முதல் நாளில் மரபுப்படி கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி உரையாற்றியபோது அவையிலிருந்த வெளியுறவுத்துறை முன்னாள் இணை அமைச்சரும் கேரள மாநிலத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் எம்.பி.யுமான இ.அஹமது திடீரென மயங்கி விழுந்த நிலையில் டில்லி ராம் மனோகர் லோஹியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். தொடர்ந்து சிகிச்சை பெற்றுவந்த அவர் (புதன்கிழமை) அதிகாலை 2.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது உடல் நேற்று 2மணியளவில் அவரது சொந்த ஊரான கன்னூரில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இ.அகமதின் மரணம் குறித்து குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜி வெளியிட்ட இரங்கல் செய்தியில்,

''வெளியுறவுத் துறை முன்னாள் இணை அமைச்சரும், மக்களவை எம்.பி.யுமான இ.அஹமது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறேன். அஹமது தன்னுடன் நீண்ட காலம் நண்பரகாகவும், சக பணியாளராகவும் இருந்தவர். தேசிய நலனுக்கு அயராது உழைத்தவர். தேசத்துக்காக அவர் ஆற்றிய நலப் பணிகள் என்றும் நினைவு கூரப்படுபட வேண்டியவை'' என்று குறிப்பிட்டுள்ளார்.



இ.அகமதின் மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ள இரங்கல் குறிப்பில், ''கேரள மாநில வளர்ச்சிக்கு இ.அகமதுவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. அவர் வெளியுறவு இணை அமைச்சராக இருந்தபோது மேற்கு ஆசிய நாடுகளுடன் இந்தியாவின் உறவை வலுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். முஸ்லிம் சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காக அவர் ஆற்றிய தொண்டு என்றும் நினைவு கூரப்படும்'' எனத் தெரிவித்திருக்கிறார்.

மேலும் அஹமதுவின் மறைவுக்கு மக்களவையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, தி.மு.க செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு அஹமதுவின் மறைவுக்கு மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேரா. எம்.எச்.ஜவாஹிருல்லா வெளியிடும் இரங்கல் அறிக்கை:

இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான இ. அஹ்மது மரணமடைந்த செய்தி அறிந்து அதிர்ச்சி அடைந்தேன்.

ஐந்து முறை கேரள சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இ. அஹ்மது அவர்கள் கேரளா மாநில தொழில்துறை அமைச்சராகவும் சேவையாற்றியுள்ளார். ஏழு முறை நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இ.அஹ்மது அவர்கள் 2004 இல் மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அமைச்சரவையில் வெளியுறவுத் துறை இணை அமைச்சராகப் பணியாற்றினார். சிறிது காலம் ரயில்வே துறை மற்றும் மனிதவள மேம்பாட்டுத் துறையின் இணை அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்.

1991 முதல் 2014 வரை ஐ.நா. அவையில் 10 முறை இந்தியாவின் பிரதிநிதியாக பங்குகொண்ட வாய்ப்பையும் பெற்றவர் இ.அஹ்மது முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி வளைகுடா (ஜிசிசி) நாடுகளுக்கு இவரை தனது சிறப்புப் பிரதிநிதியாக அனுப்பி வைத்தார். இந்த வாய்ப்புகளையெல்லாம் சிறப்பான முறையில் பயன்படுத்தி பல்வேறு உலக நாடுகள் குறிப்பாக அரபு நாடுகளுக்கும் இந்தியாவிற்குமிடையேயான உறவுகள் மேம்பட இவர் திறம்படப் பாடுபட்டார். மறைந்த குலாம் முஹம்மது பனாத்வாலாவுக்குப் பின்னர் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவராக சிறப்பாகப் பணியாற்றி சிறுபான்மை மக்களின் நலனுக்காக சீரிய முறையில் சேவையாற்றி வந்தார்.

இ.அஹ்மது, நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் உரையாற்றுகையில் சுகவீனமடைந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு மரணித்தது அவர் இறுதிவரை மக்கள் சேவையில் இருந்ததை எடுத்துக் காட்டுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் பாதுகாப்புடன் திருடனுக்கு திருமணம்



மகாராஷ்டிராவில் நடைபெற்ற திருடனின் திருமணத்தில் ஆயிரக் கணக்கான வழிப்பறி திருடர்கள் நாடு முழுவதுமிருந்து வந்து கலந்து கொண்டுள்ளனர்.

மகாராஷ்டிரா மாநிலம் தானே மாவட்டத்திலுள்ள அம்பிவலி என்ற இடத்தில் தபீக் தேஜ் ஷா என்பவனுக்கு திருமணத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஷா கடந்த பல ஆண்டுகளாக செயின் பறிப்பு சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளான். 20 வயதேயாகும் ஷா மீது 2012ஆம் ஆண்டே மகாராஷ்டிராவின் கடுமையான 'மொக்கா' சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டார்.

ஜாமீனில் விடுதலை செய்யப்பட்ட பிறகு மீண்டும் 2016இல் மொக்கா சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இம்முறை பொலிஸரால் அவரை கைது செய்ய முடியவில்லை. தொடர்ந்து தலைமறைவாக இருந்துவந்த அவருக்கு திங்களன்று திருமணம் நடைபெற்றது. இது குறித்து பொலிஸாருக்கும் தெரிய வந்தது. ஆனால் பொலிஸாரால் எதுவும் செய்ய முடியவில்லை. இந்த திருமணத்தில் டில்லி, போபால், அவுரங்காபாத், கர்நாடகா, மும்பை போன்ற பகுதிகளை சேர்ந்த செயின் பறிப்பு திருடர்கள் வந்து கலந்துகொண்டு சிறப்பித்தனர். ஆயிரக்கணக்கில் திருடர்கள் ஒரே இடத்தில் கூடி இருந்தனர். அப்படி இருந்தும் பொலிஸாரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஷாவை கைது செய்தால் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும் என்பதால் பொலிஸார் ஷாவை கைது செய்யவில்லை.

திருமணத்தில் 20இற்கும் மேற்பட்ட பொலிஸார் கலந்துகொண்டு வெறுமனே கண்காணிப்பு பணியில் மட்டுமே ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அடுத்த தேர்தல் வரை நல்லாட்சியை பாதுகாப்போம்

## அதிவேக பாதை திறப்பு விழாவில் பிரதமர்

எங்களுக்கு இருக்கின்ற பிரதான பலம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இரு கட்சிகளையும் இணைத்து தேசிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தியதாகும். அது எமக்கு பெரும் சக்தியாகும். அவரை நாம் எமது பொது வேட்பாளராக நிறுத்தினோம். அவர் கூட்டமைப்பின் தலைவரான பின், கலந்துரையாடல் மூலம் இரு பிரதான கட்சிகளையும் ஒன்று சேர்ப்பதற்கு எங்களால் முடிந்தது. இந்தத் தேசிய அரசாங்கத்தை அடுத்த தேர்தல் வரை, நாம் பாதுகாத்து, முன்கொண்டு செல்வோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கண்டி அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகமை முதல் குருநாகல் வரை நிர்மாணிக்கப்பட்டும் இரண்டாவது செயற்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

இங்கு மேலும் தெரிவித்த பிரதமர், இரு கட்சிகளுக்கும் இடையே பிரச்சினைகள் ஏற்படுவது சாதாரணமானது. இரு கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படும்போது, இழுபறி நிலை உருவாகுவது இயல்பானது. ஆனால், முதலில் செய்ய வேண்டியது, ஒன்றிணைந்து பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதாகும். முன்னேற்றத்தின் பிரதிபலன்களை பகிர்ந்துகொள்வது உங்களது வேலை. முதலில் எங்களுக்கு முன்னேற்றத்தைத் தர வேண்டும்.

50 தொழில்களை வழங்குவது பற்றி நீங்கள் சிந்திக்காது, 500 தொழில்களை வழங்குவது பற்றி நீங்கள் சிந்தித்தால், துரித அபிவிருத்தி ஏற்படுத்துவதற்கு நீங்கள் செயற்பட்டால், பிரதிலாபங்களை பகிர்ந்துகொள்வது பிரச்சினை அல்ல என்று நான் நினைக்கின்றேன். நான் முதலில் பிரேரிப்பது அபிவிருத்தியை முதலில் செய்யுங்கள். அதன்போது பிரதான இரு கட்சிகளுக்கு மட்டுமன்றி, ஏனைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் பிரதிலாபங்களை பகிர்ந்துகொள்ளலாம்.

இந்தப் பாரிய அபிவிருத்தி திட்டத்தை முன்னெடுக்க, நாம் எங்கிருந்து முதலீடுகளைப் பெறுவது? இலங்கையிலுள்ள சகல வங்கிகளது பணமும், இந்த அபிவிருத்திக்குப் போதுமானதல்ல. கொரியா, ஜப்பான், சிங்கப்பூர், ஐரோப்பா மற்றும் அமெரிக்கா முதலிய நாடுகளின் ஊடாகத்தான் சீனா முன்னேற்றம் அடைந்தது. அதேபோன்று, தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் அபிவிருத்தி அடைந்தது வெளிநாட்டு முதலீடுகள் ஊடாகவேயாகும். அந்த வெளிநாட்டு அறிவு மற்றும் முதலீடுகளைப் பெற்று நாமும் செயற்பட்டால் எங்களுக்கு அபிவிருத்தி காண முடியும். இரு கட்சிகளும் இணைந்தது போன்று, உலகத்துடன் ஒன்றிணைந்து நாம் முன்னேற வேண்டும்.

எங்களுக்கு துறைமுகம், விமான நிலையங்கள் இரண்டிரண்டு இருக்கின்றன. இந்தப் பிராந்தியத்துக்குள்ளே நாம் அபிவிருத்தி செய்ய முற்படுகிறோம். சீனா, மலேசியா, தாய்லாந்து என்பன இவ்வாறு சில பிரதேசங்களை ஒன்றிணைத்து துரித அபிவிருத்தியை மேற்கொண்டன. சிங்கப்பூர் முழுத் தீவையும் ஒரே தடவையில் முன்னேற்றி அபிவிருத்தியடைந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் தாய்லாந்து ஒரே தடவையில் பத்தாயிரம் ஏக்கர் பொருளாதார வலயத்தை ஏற்படுத்தி அபிவிருத்தி செய்தது. நாம் அதேபோன்று, திட்டம் வகுத்து செயற்பட வேண்டும். அதனால்தான் கட்டமைப்பு வசதிகளுடன், ஈரவலய பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய தீர்மானித்தோம். கண்டி, வடமேல், மேல், சப்ரகமுவ, தெற்கு, மொணராகலை ஆகிய சகல பிரதேசங்களிலும் ஒரே நேரத்தில் அபிவிருத்தியை ஆரம்பிக்கின்றோம்.

இந்த ஆண்டை நாம் ஆரம்பித்தது, குருநாகலில் இரு கைத்தொழிற்சாலைகளை திறந்து வைத்ததன் மூலமேயாகும். அதன் பின், ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில் நமது கவனம் இருந்தது. அத்தோடு, கொழும்பு, கண்டி பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். இப்பிரதேசங்களில் பெரும் வீதிக் கட்டமைப்புகள் உள்ளன. ஹம்பாந்தோட்டை வரை அதிவேக வீதி நிர்மாணிக்கப்படுகின்றது. நாம் இன்று ஆரம்பித்தது, மத்திய அதிவேக வீதியின் நிர்மாண வேலைகளாகும். அதன் இரண்டாம் கட்டம் மீரிகமையிலிருந்து பொதுஹரை வரையும், மூன்றாம் கட்டத்தை கண்டி வரையும் நிர்மாணிப்போம். அப்போது கண்டி, கொழும்பு பிரதேசங்கள், சிலாபம் ஊடாக அதிவேக நெடுஞ்சாலையில் இணைக்கப்டும். கொழும்பையும் இரத்தினபுரியையும் இணைத்து அதிவேகப் பாதையொன்றை நிர்மாணிப்போம். இச்சகல பிரதேசங்களும் அபிவிருத்தியாகும். - என்றார்.

## மைத்திரியின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முடியாதென்றும் நல்லாட்சி அரசாங்கத்தை கட்டியெழுப்பும் பணிக்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உட்பட தமிழ், முஸ்லிம்களும் ஆதரவு வழங்கியிருந்தார்கள் என்று மேல்மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஐக்கிய இராச்சியத்தில் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள நிலையில் சர்வதேச ஊடகமொன்றின் கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இன்று ஐக்கிய தேசிய கட்சியின் தொண்டர்கள் சில்லறை விடயங்களுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புகைப்படத்தை பச்சை கொடிகளுடன் இணைத்து உபயோகிப்பதை ஒருபோதும் அங்கிகரிக்க முடியாதென்றும் மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவராவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொது வேட்பாளராக போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவியேற்று மூன்று நாட்களில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவராகவும் பொறுப்பேற்றார். ராஜபக்ஷ ஆட்சியை தோற்கடிப்பதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டனர். அவ்வேளை முன்வருவதற்கு எவருக்கும் முதுகெலும் பிருக்கவில்லை. எனினும் மைத்திரிபால சிறிசேன எவ்வித ஒப்பந்தங்களும் இன்றியே போட்டியிட்டார். அவர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவராக இருப்பதில் எவ்வித பிரச்சினையும் இல்லை. ஜனாதிபதி நாட்டு மக்களின் நலன்களை கருத்திற்கொள்வதுபோன்றே கட்சியின் நலனையும், தனித்துவத்தையும் கருத்திற்கொண்டு செயற்படுவார் என்று எதிர்பார்க்கிறோம்.என்றார்.

மாகாணசபைகளின் செயற்பாடுகளை எவ்வாறு அமைத்துக்கொள்வதென்பது தொடர்பில் ஆராயவே மேலும் சில மாகாண முதல்வர்களும் இச்சுற்றுப் பயணத்தில் இணைந்துகொண்டிருந்தனர்.

## மௌலவி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தீர்வைப் பெற்றுத்தருமாறு அமைச்சர் றிஷாட் பதியுதீன், கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்துடன் வேண்டுகோள் விடுத்தார். கல்வியமைச்சில் நேற்றுமுன்தினம் அமைச்சர் அகிலவிராஜூடன் நடாத்திய சந்திப்பின் போதே அமைச்சர் றிஷாட் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இந்த விடயங்களைக் கேட்டறிந்த கல்வியமைச்சர் அகில விராஜ் இது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கையெடுப்பதற்காக கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர் ஒருவரை இந்த விவகாரம் தொடர்பில் நியமித்து தனக்கு இரண்டு வார காலத்திற்குள் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அவரைப் பணித்தார். விரைவில் இந்த நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

இந்த சந்திப்பின் போது இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளும் உடனிருந்தனர். அச்சங்கத்தின் தலைவர் அனஸ், தொழில் அதிபரும் கல்வி ஆர்வலருமான இல்ஹாம் மரிக்கார், அமைச்சரின் இணைப்புச் செயலாளர் இர்ஷாத் ரஹ்மதுல்லாஹ் உட்பட பலர் கலந்து கொண்டு தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்கும் முயற்சியின் போது மக்கள் காங்கிரசுக்கும் நல்லாட்சித் தலைவர்களுக்குமிடையிலான உடன்படிக்கையில் மௌலவி ஆசிரியர் நியமனத்தை துரிதமாக்க வேண்டுமென்ற விடயமும் உள்ளடக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் பிரதமரை சந்தித்து இந்த விடயம் பற்றி பிரஸ்தாபித்த போது அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதாக அவர் எம்மிடம் உறுதியளித்தார் என அமைச்சர் றிஷாட் தெரிவித்தார்.

2010 ஆம் ஆண்டு மௌலவி ஆசியர் நியமனத்தில் நேர்முகப்பரீட்சையில் சித்தியடைந்த ஒரு சிறு தொகுதியினருக்கே அது வழங்கப்பட்டது. அல் ஆலிம் பட்டத்தை முடித்து போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்த பலர் இன்னும் தொழிலின்றி அவதியுறுகின்றனர். சிலருக்கு வயதாகியும் விட்டது எனவே இன்னும் காலத்தை இழுத்தடிப்பது முறையானதல்ல என்று அமைச்சர் றிஷாட் சுட்டிக்காட்டினார்.

## பரபரப்பான...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சுதந்திரதினத்தன்று இரவு முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் கூடவுள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி கட்சியின் பேராளர் மாநாடு நடைபெறவுள்ளநிலையில், அதற்கான ஏற்பாடுகள் மற்றும் கட்சியில் உருவாகியுள்ள நெருக்கடி நிலையை எதிர்கொள்வது தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்படலாம் என கட்சி முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் அண்மையில் இலத்திரனியல் ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக கட்சி ஆதரவாளர்கள் மற்றும் சமூக ஊடகங்களில் அபிமானிகளிடையே வாதப் - பிரதிவாதங்கள் நடைபெற்று வரும் நிலையிலே இக்கூட்டம் நடைபெறுகின்றது.

வழமையாக நடக்கும் மாதாந்தக் கூட்டமே இது என்றும் கட்சி முக்கியஸ்தர் தெரிவித்தார்.

4 ஆம் திகதி நடைபெறும் கூட்டத்தில் தான் கலந்து கொள்வதாக தவிசாளர் பசீர் சேகு தாவூத் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் 11ஆம் திகதியும் கட்சியின் கட்டாய உயர்பீடக் கூட்டம் நடைபெறவுள்ளது.

## தகவல் அறியும்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பயனாக கடந்த ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதியன்று மேற்படிச் சட்டமானது பாராளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு ஆறு மாத காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற விடயமும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு மாத காலம் பூர்த்தியடைவுள்ள நிலையிலேயே நாளை 3 ஆம் இச்சட்டத்தை வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், தற்போதுள்ள 51 அமைச்சுகளில் 50 அமைச்சுகளுக்கான தகவல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் எஞ்சிய அதிகாரிகள் வெகுவிரைவிலேயே நியமிக்கப்படவுள்ளார் என்றும் மாவட்ட மட்டத்தில் இதற்குத் தேவையான முன்னேற்பாடுகளை அரச அதிபர்கள் மேற்கொள்கின்றனர் என்றும் அரசு அறிவித்துள்ளது.

அதேநேரம், இதுவிடயம் தொடர்பில் பயிற்றுவிக்கப்பட்ட சுமார் 1500 அதிகாரிகளுடன் எதிர்வரும் 16 ஆம் திகதியன்று அலரிமாளிகையில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபடவுள்ளார்.

## சைடமுக்கான...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. இத்தீர்ப்பானது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். இதற்கிணங்க பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட சகல தரப்பினருடனும் கலந்துரையாடி இந்நிறுவனத்துக்கு எதிரான எமது போராட்டத்தை மேலும் விரிவுபடுத்துவோம் என்று ஜே.வி.பி. நேற்று எச்சரித்தது.

அத்தோடு, இந்த நிறுவனத்திற்கு சட்ட அங்கீகாரத்தை வழங்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உரிமை இல்லை என்றும் அது குறிப்பிட்டது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பி தலைமையகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தபோதே அக்கட்சியின் அரசியல் குழு உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினமான பிமல் ரத்னாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் அவர் தெரிவிக்கையில்,

சைடம் நிறுவனம் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அந்த நிறுவனத்தில் கற்கும் மாணவியொருவரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு இணங்க, அந்நிறுவனத்துக்கும் மருத்துவ பட்டம் வழங்க அனுமதியுள்ளது என்று தற்போது தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

அந்த வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டவர்களும் வழக்கினைத் தொடர்ந்த மாணவியும் ஒரே நிலைப்பாட்டில் இருந்தமையால் இந்த தீர்ப்பு தொடர்பாக எமக்கு ஆச்சரியப்படுவதற்கும் ஒன்றுமில்லை.

நாட்டையும் பிள்ளைகளையும் ஏமாற்றும் நிறுவனத்திற்கு சட்ட அங்கிகாரத்தை வழங்கியமையை ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும், வழக்குத் தீர்ப்பை வைத்து அந்த நிறுவனத்தில் கற்கும் மாணவர்கள் உடனடியாக மருத்துவ சபையில் பதிவு செய்துகொள்ளவும் முடியாது. மருத்துவ சபை உயர்நீதிமன்றத்திற்கு சென்றால் அந்த வழக்கு முடியும் வரை அந்த பதிவை மேற்கொள்ள முடியாது. மருத்துவ சபையும் அவ்வாறான யோசனையிலேயே இருக்கின்றது.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஈ.பி.டி.பி, ஜே.வி.பி தவிர்ந்த ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களின் பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் அந்த சைட்டம் நிறுவனத்திலேயே கற்கிறார்கள். எனவே, இதுதொடர்பான வழக்குத் தீர்ப்பை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. அத்துடன் இந்த நிறுவனத்திற்கு சட்ட அங்கீகாரத்தை வழங்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் உரிமை கிடையாது. நாமும் அந்த நிறுவனத்திற்கு சட்ட அங்கீகாரத்தை வழங்க ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

இதற்கெதிரான எமது போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுப்போம். இது தொடர்பாக நாம் சகல தரப்பினருடனும் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம். ஏனைய சில விடயங்களில் தொடர்பில் அரசியல் கட்சிகளுக்கிடையே வேறுபட்ட கருத்துக்கள் காணப்பட்டாலும் இந்த நிறுவனத்திற்கு சட்ட அங்கீகாரம் வழங்கப்படக் கூடாது என்ற ஒருமித்த கருத்தே தற்போது நிலவுகின்றது.

எமது வைத்தியசாலைகளில் உள்ள தாதியர்கள் உயர்தரத்தில் ஏ மற்றும் பீ தர சித்திகளை பெற்றவர்களாவர். இவர்கள் மூன்று எஸ் சித்திகளை பெற்று வைத்தியராக வருபவர்களின் ஆலோசனைகளை பெற தயாராக இல்லை. பணம் உள்ள குழுக்களும் அரசியல்வாதிகள் சிலரும் சேர்ந்துக்கொண்டு நாட்டின் கல்வித்துறையையே தமது காலடியில் மண்டியிட செய்ய முயற்சிப்பதற்கு நாம் இடமளிக்கக் கூடாது.

எனவே, இந்த நிறுவனத்தை இரத்து செய்யாவிட்டால் 2020 இல் ஆட்சி மாற்றத்திற்கு பிரதான காரணமாகவும் பிரதானத் தொனிப்பொருளாகவும் இந்த விடயமே மாறிவிடும் என்பதையும் கூறிக் கொள்கிறோம் என்றார்.

## மண் அகழ்வு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

திவுலப்பிட்டிய பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக அரச அதிகாரிகள் குறித்து உள்நாட்டலுவல்கள் அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

திவுலப்பிட்டிய பிரதேசத்தில் பாரியளவான மண் அகழ்வு இடம்பெறுவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு சென்றிருந்த பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மற்றும் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்குமிடையில் முரண்பாடான நிலைமை தோன்றியிருந்தது.

பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக கூறி கம்பஹா மாவட்ட அரச அதிகாரிகள் சிலர் எதிர்ப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையிலேயே இந்த சம்பவம் தொடர்பில் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தற்போது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. எந்தவொரு அரச அதிகாரியும் மக்களால் முன்வைக்கப்படும் குறைகள் சம்பந்தமாக செவிவாய்க்க வேண்டும் என்ற 11 இன் கீழ் 2015 சுற்றறிக்கையை திவுலப்பிட்டிய பிரதேச செயலாளர் மீறியிருப்பதனாலேயே இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு கூறியுள்ளது.

தொலைபேசியினூடாக மக்கள் குறைகளை முன்வைத்தால், அதற்கும் அரச அதிகாரிகள் செவிவாய்க்க வேண்டும் என்பதுடன், இதற்காகவே அரச உயர் அதிகாரிகளுக்கு அரசினால் தொலைபேசிக்கான கொடுப்பனவு வழங்கப்படுவதாகவும் மேற்படி அமைச்சு சுட்டிக்காட்டியது.

## மத்திய குறைந்த...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

6 இலட்சத்து 20 ஆயிரம் வீடுகளை நிர்மானித்துக் கொடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இவ்வேலைத்திட்டத்தை உரிய காலத்திற்குள் செய்து முடிப்பதை உறுதி செய்வதற்காகவும், குறித்த வேலைத்திட்டத்துக்கு தேசிய முன்னுரிமையினை பெற்றுக் கொடுத்து துரிதமாக செயற்படுத்துவதற்கு தேவையான வசதிகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கிலும் திறைசேரியின் கீழ் விசேட செயலணி ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவிடயம் தொடர்பில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கே அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## விரல் அடையாளத்தை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

புக் கட்டளைச் சட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குற்றங்களுக்காக மட்டுமே சந்தேகநபரின் விரலடையாளங்களை பெற்றுக் கொள்ளமுடியும். இதனால் ஏற்படும் பாரதூரமான தன்மையினாலேயே மேற்படி சட்டத்தை திருத்தம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, சந்தேக நபரின் அடையாளத்தை உறுதிசெய்து கொள்வதற்கும், அவரை இலகுவாக கண்காணிக்கக் கூடிய வகையில் விரலடையாலத்தைப் பொற்றுக் கொள்ளவதற்குமான குற்றத்தடுப்புக் கட்டளைச் சட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குற்றங்களின் பட்டியலை திருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, அவ்வகையான குற்றமொன்றுடன் குற்றஞ் சாட்டப்பட்ட நபருக்கு இடைநிறுத்தப்பட்ட தண்டனை வலுவிலிருக்கும் காலம் முடியும் வரை அந்நபரை பொலிஸ் கண்காணிப்பின் கீழ் வைக்க வேண்டுமென நீதிமன்றத்தால் விதிக்கப்பட முடியுமான வகையிலும் குற்றத்தடுப்புக் கட்டளைச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்படி திருத்தம் தொடர்பான சட்ட மூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் அனுமதிக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் நீதியமைச்சர் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கே அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## இனப் பிரச்சினைக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமைக்கப்பட்டஇந்த அரசாங்கத்தை இப்பொழுதும் புதிய அரசாகவே நான் பார்க்கின்றேன். யுத்த காலத்தில் நான் வாழும் பொலொன்னறுவை உட்பட வட மாகாணம், கிழக்கு மாகாணம் வடமத்திய மாகாணம் ஆகியவற்றைச் சேர்ந்த மக்கள் பல கஷ்டங்களை அனுபவித்தார்கள்.

கடந்த கால யுத்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்கள் நல்லாட்சியில் நன்மைகளை அடைய வேண்டும் என்பதற்காகவேதான் நாங்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். பொய்யில் வாழ்பவர்கள் பொய்யாகவே பரப்புரைகளைச் செய்கின்றார்கள். யுத்தம், வன்முறை, புறக்கணிப்பு என்பவை நல்லதல்ல, அது இனி ஒரு போதும் இந்த நாட்டுக்கு ஏற்பட்டுக்கு விடக் கூடாது.

போதைப் பொருள் பாவனை என்பது மிக மோசமாகப் பரவிக் கொண்டிருக்கின்றது. இஸ்லாம், இந்து பௌத்தம் கிறிஸ்தவம் ஆகிய மதங்கள் போதைப் பொருளை அனுமதிக்கவில்லை, இந்த நாடு ஏழ்மையானதற்கும், நோயாளிகள் அதிகரித்திருப்பதற்கும் போதைப் பொருள்தான் காரணம்.

தெருவிலே மதுவுக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பிப்பதை விட போதைக்கு எதிரான போராட்டத்தை வீட்டுக்குள்ளேயே ஆரம்பிக்க வேண்டும்.

நல்லாட்சி அரசு வசதி படைத்தவர்களின் நலனுக்காக பாடுபடாது. அது வறிய மக்களின் அரசு. ஏழ்மை, நோய், மதுவுக்கு அடிமை போன்றவற்றிலிருந்து இந்த நாடு விடுபட வேண்டும். கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு, வீட்டு வசதிகள், பொது வசதிகள், என்பனவற்றை இந்த நாட்டில் அனைத்தையுமே நாம் இலவசமாக வழங்கிக் கொண்டிருக்கின்றோம். எனவே, இந்தப் பாக்கியத்தை நீங்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆட்சியைக் கவிழ்க்க கனவு காண்பவர்களால் இன்னும் 5 வருடங்களுக்கு ஒன்றும் செய்ய முடியாது. ஆட்சிக் கவிழ்ப்பு என்பது அது மக்களின் கையில் தான் உள்ளது. முன்னைய ஆட்சியாளர்கள் அரச சொத்தான ஹெலிகொப்டரை தங்களது மோட்டார் சைக்கிளைப் போல் தான் பாவித்தார்கள்.

அவர்களைப் பற்றி எல்லாவற்றையும் நான் இப்போது சொல்ல விரும்பவில்லை. முன்னைய ஆட்சியிலுள்ளவர்கள் தவறு செய்ததால் அவர்கள் இப்பொழுது நீதி மன்றங்களில் அலைகிறார்கள். அதுபோல் தற்போதைய ஆட்சியிலும் யாராவது தவறு செய்தால் அவர்களும் நீதிமன்றம் அலைய வேண்டிவரும் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். இந்த நாட்டை நாங்கள் சுபீட்சம் மிக்க வறுமையற்ற, யுத்தமற்ற, போதையற்ற, அமைதி நிலவும் நாடாக மாற்றியமைப்போம். - என்றார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு காணி அனுமதிப் பத்திரங்களையும் வீடுகளையும் கையளித்தார். இங்கு தமிழ் முஸ்லிம் சிங்கள மக்கள் 1762 காணி அனுமதிப் பத்திரங்களும் 962 வீடுகளும் 10 ஆயிரம் மரக்கன்றுகளும் வழங்கும் நிகழ்வும் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## தேசியக் கொடியை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விடுத்துள்ளது. இது தொடர்பாக அகில இலங்கை ஜம்மியதுல் உலமா விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எதிர்வரும் 04 ஆம் திகதி சனிக்கிழமை எமது நாடு தனது 69ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்காக ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்றது.

சுதந்திரத்தைப் பெற்றெடுப்பதில் நமது சமூகம் அதிக பங்களிப்புச் செய்துள்ளது என்பதையும் நமது சமய, சமூக, அரசியல் தலைமைகள் அன்று தொட்டு இன்று வரை நாட்டுப் பற்றோடு செயற்பட்டுள்ளனர்.

இன்றும் அவ்வாறே செயற்பட்டு வருகின்றனர் என்பதையும், இந்நாட்டு முஸ்லிம்கள் பிரிவினைவாத செயற்பாடுகளிலோ, சமய நிந்தனைகளிலோ, சமய சண்டைகளிலோ ஈடுபடாதவர்கள் என்ற உண்மையையும் வெளிப்படுத்தும் ஓர் அரிய சந்தர்ப்பமாக இவ்வருட சுதந்திர தின விழா அமைய வேண்டும் என்று அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கருதுகின்றது.

அத்துடன் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் அது சம்பந்தமான நிகழ்ச்சிகள், போட்டிகள் மற்றும் மாற்று மத சகோதரர்களுடன் சந்திப்புகள் போன்றவற்றை நடத்துவதோடு; எமது நாட்டின் தேசியக் கொடியை தத்தமது இல்லங்களிலும், பாடசாலைகளிலும், வியாபார நிலையங்களிலும் ஏற்றுமாறும் சகல முஸ்லிம்களையும் ஜம்இய்யத்துல் உலமா கேட்டுக் கொள்கின்றது. அதே நேரம் பொது வேலைத் திட்டங்கள், சிரமதானங்கள் போன்றவற்றில் அயலில் வாழும் மாற்று மதத்தவர்களையும் இணைத்துக் கொள்வது சமூக சகவாழ்வுக்கு வழி வகுக்கும் என்பதையும் ஜம்இய்யத்துல் உலமா நினைவு படுத்திக் கொள்கின்றது என்றும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி தேசிய வாரம் பெப். 6இல் ஆரம்பம்



பீ.எப்.எம் றிஷாட்

இலங்கையில் மிக வேகமாக அதிகரித்துவரும் தொற்றா நோய் நிலைமைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கமைய விளையாட்டுத்துறை அமைச்சினால் வருடந்தோறும் ஏற்பாடு செய்யப்படுகின்ற விளையாட்டுத்துறை மற்றும் உடல்நல மேம்பாட்டு தேசிய வாரம் பெப்ரவரி 06 ஆம் திகதியிலிருந்து 12 ஆம் திகதிவரை நாடுபூராகவும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதுதொடர்பில் ஊடகங்களைத் தெளிவுபடுத்தும் விசேட செய்தியாளர் மாநாடு விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தலைமையில் நேற்றுமுன்தினம் விளையாட்டுத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதுதொடர்பில் அமைச்சர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி தேசிய வாரம் கடந்த வருடம் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சிறப்பான முறையில் நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து அரச நிர்வாக அமைச்சு உள்ளிட்ட ஒரு சில அரச நிறுவனங்களில் இது தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தன. எனவே ஒரு வாரத்திற்கு மட்டும் வரையறுக்கப்பட்ட வேலைத்திட்டமாக இது அமையாது. மாறாக இவ்வருடத்திலிருந்து ஒவ்வொரு அமைச்சிலும், அரச நிறுவனங்களிலும் இவ் வேலைத்திட்டத்தை அமுல்படுத்த கடந்த சில வாரங்களுக்கு முன் அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பித்துள்ளேன். இதற்கான அனுமதி கிடைத்தவுடன் நாட்டிலுள்ள அனைத்து அமைச்சிலும், அரச நிறுவனங்களிலும் வாரத்தில் குறைந்தளவு 2 அல்லது 3 தினங்களாவது உடற்பயிற்சி செய்ய வேண்டும். குறிப்பாக நமது நாட்டில் இவ்வாறு உடற்பயிற்சிகளை செய்துவிட்டு வந்தபிறகு எவ்வாறு ஆடைகளை மாற்றுவது மற்றும் குளித்துக்கொள்வது போன்ற பிரச்சினைகள் காணப்படுகின்றமையால் பெரும்பாலானோர் உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு ஆர்வம் செலுத்துவதில்லை. எனவே உடற்பயிற்சிக்கு தயாராகுவதற்கும், ஆடைகளை மாற்றுதல், குளித்தல் போன்றவற்றுக்கு பொருத்தமான கட்டிடமொன்றை ஒவ்வொரு அரச நிறுவனங்களிலும் அமைக்கத் தேவையான நிதியை ஒதுக்குவதற்கும் இவ் அமைச்சரவைப் பத்திரத்தில் அனுமதி கோரியுள்ளேன்.




மேலும் இவ்வேலைத்திட்டம் கடந்த வருடம் முதல் ஆரம்பிக்கப்பட்டதுடன், விளையாட்டுத்துறை அமைச்சிலும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இங்கு கடமையாற்றுகின்ற ஊழியர்கள், அதிகாரிகள் காலை நேரத்தில் உடற்பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். அத்துடன் இலங்கையில் இருதய நோய் மற்றும் நீரிழிவு நோயினால் ஆண்களில் 18 சதவீதமானோரும், பெண்களில் 33 சதவீதமானோரும், தேரர்களில் 60 சதவீதத்துக்கு அதிகமானோரும், பாடசாலை மாணவர்களில் 12 சதவீதமானோரும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளன. எனவே இவ்வாறான நோய்களை தற்போது முதல் தடுத்து நிறுத்தாவிட்டால் நோய்களைக் கொண்ட எதிர்கால சந்ததியினரே எமக்கு எஞ்சியிருக்கும். இதனைக்கருத்திற்கொண்டு ஒவ்வொரு பிரதேச சபைகளிலும் உள்ள முதியோர் இல்லங்களில் உள்ளவர்களுக்கு உடற்பயிற்சி வழங்கவும், நடைபாதைகளை ஒவ்வொரு பிரதேச செயலகங்களில் அமைக்கவும், வன் ஸ்போர்ட்ஸ் வன் சைல்ட் திட்டத்தின் கீழ் பாடசாலைகளில் இதை முன்னெடுக்கவும் இவ்வாரத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது என தெரிவித்தார்.

சுகம், மகிழ்ச்சி மற்றும் வெற்றிக்காக விளையாட்டு எனும் தலைப்பில் நடைபெறும் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் வாரத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் எதிர்வரும் 6ஆம் திகதி காலை 8.30 மணிக்கு முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்படி, பெப்ரவரி 06 அரச மற்றும் கூட்டுத்தாபன அலுவலர்களுக்கான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி தினம், பெப்ரவரி 07 தனியார் துறையினருக்கான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தினம், பெப்ரவரி 08 சிறுவர் மற்றும் தாய்மார்களுக்கான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தினம், பெப்ரவரி 09 பெண்களுக்கான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தினம், பெப்ரவரி 10 முதியோர் மற்றும் விசேட தேவையுடையோர்களுக்கான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தினம், பெப்ரவரி 11 இளைஞர்களுக்கான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தினம், பெப்ரவரி 12 சமூக பங்களிப்புக்கான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தினம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிய சம்மேளனக் கிண்ண கால்பந்தாட்டம்:

# கலம்போ எவ்.சியை வீழ்த்தி மோஹுன் பகான் வெற்றி



பீ.எப்.எம் றிஷாட்

ஆசிய சம்மேளனக் கிண்ண கழகங்களுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டியின் முதல் கட்டப் போட்டியில் இலங்கையின் கலம்போ எவ்.சி கழகம் 2க்கு 1 என்ற கோல்கள் அடிப்படையில் இந்தியாவின் பிரபல கால்பந்து கழகமான மோகன் பகான் கழகத்திடம் தோல்வியைத் தழுவியது. இலங்கை கால்பந்து ரசிகர்களின் பலத்த எதிர்பார்ப்பிற்கு மத்தியில் கொழும்பு குதிரைப்பந்தயத்திடல் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், இரு கழகங்களும் மந்தமான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருந்த போதிலும், போட்டியின் 13ஆவது நிமிடத்தில் தமது முதல் கோலைப் பெற்றது. ப்ரபிர் தாஸின் அருமையான உள்ளீட்டை கீன் லுவிஸ் தலையினால் முட்டி கோலாக்கினார்.

இதன்மூலம் போட்டியை முழுமையாக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த மோஹுன் பகான் அணி, மீண்டும் ஒரு கோலைப் பெற முயற்சித்தது. எனினும் போட்டியின் 30ஆவது நிமிடத்தில் தமது ஆதிக்கத்தை செலுத்திய கலம்போ எவ்.சி அணி முதல் கோலைப் பெற்றுக் கொண்டது. அபிஸ் ஒலயேமியின் முயற்சிகளுக்குப் பலனாக அருமையான கோல் ஒன்றை அடித்து ஆட்டத்தை சமப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து கொழும்பு வீரர்கள் புத்துயிர் பெற்றது போன்று தமது ஆட்டத்தை அபாரமாகவே விளையாடினர். இதன்படி போட்டியின் முதல் பாதி 1க்கு 1 என சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதியினை இரு அணிகளும் சம பலத்துடன் ஆரம்பித்தன. இரண்டு அணிகளுக்கும் மாறி மாறி வாய்ப்புகள் அமையப்பெற்றன. ஆனால் போட்டியின் 70ஆவது நிமிடத்தில் மோஹுன் பகான் அணி போட்டியின் இரண்டாவது கோலைப் பெற்றது. செனாஜ் சிங் பெனால்டி பகுதிக்கு வெளியில் இருந்து மிகவும் வேகமாக அடித்த பந்து மொஹமட் இம்ரானைத் தாண்டிச் சென்று கோலாக மாறியது.

தொடர்ந்தும் கொழும்பு அணி வேகமாகவும் விறுவிறுப்பாகவும் விளையாடிய போதிலும் கோல் ஒன்றினைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனது. இறுதியில் 2-1 என்ற கோல்கள் அடிப்படையில் மோஹுன் பகான் கழகம் வெற்றி பெற்றது. இந்நிலையில், இவ்விரு அணிகளுக்கிடையிலான 2ஆம் கட்டப் போட்டி கல்கத்தாவில் எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## பார்வையற்றோர் டி20 உலகக்கிண்ணம்:

# ருவன் - சம்பத் உலக சாதனை இலங்கைக்கு 2ஆவது வெற்றி




இந்தியாவில் நடைபெற்றுவரும் 2ஆவது பார்வையற்றோருக்கான டி20 உலகக்கிண்ணப் போட்டியில் இலங்கை பார்வையற்றோர் கிரிக்கெட் அணி புதிய உலக சாதனையுடன் முதல் வெற்றியைப் பதிவு செய்தது. நியூசிலாந்து அணியுடன் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதன்படி ருவன் வசந்த மற்றும் சுரங்க சம்பத் ஜோடி ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கி நியூசிலாந்து பந்துவீச்சாளர்களை திக்குமுக்காடச் செய்து, போட்டியின் இறுதிவரை விளையாடினர். இதன்படி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் இலங்கை அணி, 334 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டு புதிய உலக சாதனை நிகழ்த்தியதுடன், பார்வையற்றோருக்கான டி20 உலகக்கிண்ணத்தில் அணியொன்று பெற்றுக்கொண்ட 3ஆவது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாகவும் இது இடம்பெற்றது.

இவர்களின் இணைப்பாட்டம் பார்வையற்றோருக்கான டி20 கிரிக்கெட் போட்டி வரலாற்றில் எந்தவொரு விக்கெட்டுக்காக பெற்றுக்கொண்ட அதிகபட்ச இணைப்பட்டமாக வரலாற்றில் இடம்பெற்றது. துடுப்பாட்டத்தில் ருவன், 69 பந்துகளில் ஆட்டமிழக்காது 170 ஓட்டங்களையும், சம்பத் 53 பந்துகளில் 146 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். அதனைத் தொடர்ந்து 334 என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 120 பெற்று தோல்வியைத் தழுவியது. இந்நிலையில் பார்வையற்றோருக்கான டி20 உலகக்கிண்ணப் போட்டியில் இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணியுடன் நடைபெற்ற 2ஆவது போட்டியில் இலங்கை அணி130 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் சுரங்க சம்பத் 116 ஓட்டங்களையும், சந்தன தேசப்பிரிய 108 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்த 151 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது. இதேவேளை இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டி இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மேற்கிந்திய வீரர் ரஸலுக்கு போட்டித்தடை

மேற்கிந்திய தீவுகள் அணியின் அதிசிறந்த சகலதுறை வீரர் அண்ட்ரூ ரஸலுக்கு ஓராண்டு காலம் கிரிக்கெட் விளையாடுவதற்கு சர்வதேச ஊக்கமருந்துது தடுப்பு நிறுவனத்தினால் ஒரு வருட போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளது. கிங்ஸ்டனில் உள்ள தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து சோதனை குழுவுக்கு தனது இருப்பிடம் தொடர்பான தகவலை தெரிவிக்காத குற்றச்சாட்டுக்காக குறித்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு நட்சத்திரங்கள் போட்டிகள் இல்லாதபோது, தங்களின் இருப்பிடம் குறித்து சர்வதேச ஊக்கமருந்து தடுப்பு மையத்திடம் (வாடா) தகவல் தெரிவிக்க வேண்டும். இதன்மூலம், வீரர்கள் போட்டியில் இல்லாதபோதும் ஊக்க மருந்தை பயன்படுத்தவில்லை என்பதை வாடா உறுதிப்படுத்த முடியும். கடந்த 2015இல் இந்த தகவலை தர ரஸல் மூன்று முறை மறுத்திருந்தார். இது, ஊக்கமருந்து பரிசோதனைக்கான விதிமுறையை மீறிய செயலாகும். இது குறித்து விசாரிக்க மூன்று பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. குறித்த ஊக்கமருந்து சோதனை குழு கடிதம் மற்றும் மின்னஞ்சல் மூலமாக பலமுறை அவரை தொடர்புகொண்டு அவரது இருப்பிடம் தொடர்பில் கேள்வியெழுப்பிய போது ரஸல் எவ்வித தகவல்களையும் வெளியிடவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இக்குழு வழங்கிய தீர்ப்பில், ரஸல் எவ்வித கிரிக்கெட் போட்டியிலும் விளையாட ஒரு வருட தடைவிதிக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டது. இந்த தடை 2017 ஜனவரி 31 முதல் 2018 ஜனவரி 31 வரை அமுலில் இருக்கும்.



இதன்படி, இவ்வருடம் நடைபெறவுள்ள பாகிஸ்தான் சுப்பர் லீக் (பெப்ரவரி), ஐ.பி.எல்., (ஏப்ரல்), நெட்வெஸ்ட் டி20 (ஜுலை), கரீபியன் பிரீமியர் லீக் (ஆகஸ்ட்), பிக்பேஷ் (டிசம்பர்) ஆகிய தொடர்களில் ரஸலுக்கு விளையாட முடியாது.

# ப்ரீலான்ஸ் வீரராக விரும்பும் அப்ரிடி

பாகிஸ்தான் அணியில் இடம் கிடைக்காததால் சுதந்திரமான (ப்ரீலான்ஸ்) கிரிக்கெட் வீரராக மாற இருக்கிறார் சஹீட் அப்ரிடி. இதற்காக அனைத்து லீக் தொடரையும் குறிவைத்துள்ளார்.

பாகிஸ்தான் டி20 கிரிக்கெட் அணியின் தலைவராக இருந்தவர் சாஹித் அப்ரிடி. கடந்த வருடம் நடைபெற்ற டி20 ஆசியக் கிண்ணம், டி20 உலகக்கிண்ணம் ஆகிய தொடர்களில் பாகிஸ்தான் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. இதனால் தலைவர் பதவில் இருந்து அப்ரிடி நீக்கப்பட்டார். தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டாலும் தொடர்ந்து அணியில் விளையாட அப்ரிடி விரும்பினார். ஆனால், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அவரை தொடர்ந்து அணியில் வைக்க விரும்பவில்லை. அதேவேளை அவருக்கு பிரியாவிடை கொடுக்கும் வகையில் ஒரு தொடரை ஏற்பாடு செய்ய தயாராக இருந்தது. இதை அப்ரிடி ஏற்கவில்லை. தற்போது ஒவ்வொரு நாட்டிலும் நடைபெறும் டி20 லீக் தொடரில் விளையாடி வருகிறார். தொடர்ந்து அந்த லீக் தொடரில் இடம்பெற திட்டமிட்டுள்ளதாக கூறியுள்ளார். இதுகுறித்து அப்ரிடி கூறுகையில், நான் எல்லா வகை கிரிக்கெட்டிலும் விளையாடியுள்ளேன். தொடர்ந்து விளையாட விரும்பினேன். தற்போது, லீக் தொடர்கள் மீது கவனம் செலுத்தி மகிழ்ச்சியாக விளையாடி வருகிறேன். ஏறக்குறைய பாகிஸ்தான் அணிக்காக எனது விளையாட்டு முடிந்து விட்டது என்றார்.



# இந்திய டெஸ்ட் அணியில் மீண்டும் அபிநவ் முகுந்த்

பங்களாதேஷ் அணிக்கெதிரான ஒரேயொரு போட்டி கொண்ட டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், 6 வருடங்களுக்கு பிறகு தமிழக வீரரான அபிநவ் முகுந்த், இடம்பெற்றுள்ளார். மேலும் காயம் காரணமாக இங்கிலாந்துக்கு எதிரான கடைசி 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடாத விக்கெட்காப்பாளர் விருத்திமான் சாஹாவும் 16 பேர் கொண்ட அணியில் இடம் பிடித்துள்ளார்.

6 வருடங்களுக்கு பிறகு அணிக்கு திரும்பி உள்ள அபிநவ் முகுந்த், இந்த ஆண்டு ரஞ்சி கிண்ண சீசனில் தமிழக அணிக்காக விளையாடி 700 ஓட்டங்களுக்கு மேல் குவித்தார். கடைசியாக அவர் 2011ஆம் ஆண்டில் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு எதிரான சுற்றுப்பயணங்களில் இந்திய அணிக்காக விளையாடி இருந்தார்.

இந்நிலையில், விருத்திமான் சாஹா, இரானி கிண்ண கிரிக்கெட் தொடரில் இரட்டைச்சதம் அடித்து உடல் தகுதியை நிருபித்ததன் மூலம் மீண்டும் தனது இடத்தை உறுதிப்படுத்திக்கொண்டுள்ளார். காயத்தில் இருந்து குணமடைந்துள்ள அஜிங்க்ய ரஹானே, ஜெயந்த் யாதவ், ஹர்திக் பாண்டியா ஆகியோரும் அணிக்கு திரும்பி உள்ளனர். முரளி விஜய், கே.எல்.ராகுல், சேதேஷ்வர் புஜாரா, கருண் நாயர், அஸ்வின், ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தேர்வில் எந்த வித பிரச்சினையும் இல்லை. வேகப்பந்து வீச்சாளர்களாக இஷாந்த் சர்மா, புவனேஷ்வர் குமார், உமேஷ் யாதவ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். கூடுதல் சுழற்பந்துவீச்சாளராக அமித் மிஷ்ரா சேர்க்கப்பட்டுள்ளார். பங்களாதேஷ் அணி ஒரே டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் விளையாடுவதற்காக முதற்தடவையாக இந்தியா வருகிறது. இரு அணிகள் இடையிலான போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி ஹைதராபாத்தில் நடைபெறுகிறது.





திஹாரி இஸ்லாமிய அங்கவீனர் நிலையம் ஏற்பாடு செய்திருந்த 33ஆவது உள்ளக விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி அங்கவீனர் நிலையத்தின் மைதானத்தில் நிலைய தலைவர் ஜிப்ரி ஹனீபா தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பிரபல வர்த்தகர் மொஹம்மட் ரம்ஸி மற்றும் நிலையத்தின் சர்வதேச ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர்கள் கலந்து கொண்டு வெற்றி பெற்ற கழகத்திற்கான வெற்றிக்கிண்ணத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்-ஏ.எஸ்.எம்.இர்ஷாத்)

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 02ND JANUARY 2017